

நீண்ட

பிரகாசமுள்ள

கூந்தலுக்கு



ஸ்வஸ்திக்

பரிமள காஸ்டராயில்


ஸ்வஸ்திக் ஆயில் மில்ஸ், லிமிடெட், பம்பாய் 15,

N.A.S, 152/5

செல்ஸ் டிப்போ: 158 B, பிராட்வே, மதராஸ்.

17-8


ஸிரோலின்
'ரோச்'
இருமல் ஜலதோஷத்திற்கு



அவன் ஊக்கங் குறையாமல் இருக்கச் செய்வது உங்கள் வேலை!




சகோதரிகளே : உங்கள் குடும்பத்திற்கு ஒவ்வொரு நாளை சமையல் செய்யும்பொழுதும் உங்களால் எவ்வளவு செய்யலா மென்பதை உணர்கிறீர்களா? உங்கள் சமையல் திட்டங்களி னால், அவைகளைத் தயாரிக்கும் முறையினாலேயே உங்கள் குழந் தைகள் ஆரோக்கியமான ஊக்கத்தைப் பெறவோ, அல்லது ஒன்றுக்கும் உபயோகமில்லாமல் ஊக்கமற்றவர்களாக ஆகவோ இருக்கிறது. இது சமைப்பதை மேலும் உற்சாகமுள்ள தாகவும், முக்கியமானதாகவும் செய்கிறதில்லையா? உணவுகள் ஊக்கமளிக்கும் தரத்தில் வேற்றுமையுள்ளவை. அதிக ஊக்க மளிப்பவை சில. வெறும் ருசியும், திருப்தியுமளிக்கக் கூடியவை சில. அம்த உணவு உண்டும் அநேகர் ஊக்கமற்றுக் காணப் படுவது இதனால்தான். ஆனால் எல்லா உணவுகளையும் அதிக ஊக்கமுள்ளதாகச் செய்துவிடலாம். அவைகளை வைடமின் நிரம்பிய டால்டாவைக் கொண்டு தயார் செய்வது இதற்கு உதவியாக யிருக்கும். டால்டா இயற்கையில் முக்கியமான "உணவு சத்துக்களை" அளிக்கிறது—இந்த சத்துக்கள் நாம் சாதாரணமாக சாப்பிடும் உணவுகளில் மிகக் குறைவு.

டால்டா உணவுகளை மேலும் ஊக்கமுள்ளதாக்குகிற தென்பதை நிரூபித்துள்ளோம்




வைடமின் நிறைந்த **டால்டா** ஊக்கமளிக்கிறது.

சினிமா நட்சத்திரங்களைப் போல, நீங்களும் உங்கள் சருமத்தைக் காப்பாற்றுங்கள்!



கண்ணாம்பா



சருமப் பாதுகாப்பிற்கு லக்ஸ் சோப் முறையையே தான் பின்பற்றுவதாக கண்ணாம்பா கூறுகிறார். மாசு மறுவின்றிச் சருமத்தை மிருதுவாகவும், மழமழப்பாகவும் வைத்துக்கொள்ள இந்தச் சுகந்த அழகைத் தரும் சோப்பின் நுரையில் நம்பிக்கை வைக்கக் கூடுமென்று, மற்ற இந்திய சினிமா நட்சத்திரங்களைப் போலவே இவரும் கண்டறிந்திருக்கி அறிவாளியானபடியால், ஒழுங்காக லக்ஸ் சோப்பை உபயோக்க இவர் தவறுவதில்லை.

லக்ஸ் டாய்லட் சோப்

LTS. 132-50-40 TM

LEVER BROTHERS (INDIA) LIMITED

கல்கி
பொருளடக்கம்

மலர் 5 இதழ் 32	1946 மார்ச் 17	பார்த்திப௵ பங்குனி 4

'கல்கி'யில் வெளியாகும் கதைகளில் உள்ள பெயர்களும், சம்பவங்களும் கற்பனையே.

ஸான்பிரான்ஸிஸ்கோவில் நடந்த சர்வதேச சமாதான நாடகத்துக்கு ஸர் ஏ. ராமசாமி முதலியார் இந்தியாவின் பிரதிநிதியாகச் சென்றபோது, இந்த நாட்டில் அநேகம் பேர் அதை ஆட்சேபித்து, ஸர் ராமசாமி முதலியாரையும் அவரைப் பொறுக்கிய இந்திய சர்க்காரையும் சக்கையாக வெளுத்து வாங்கினார்கள். ஆனால் மேற்படி ஸான்பிரான்ஸிஸ்கோ நாடகம் முடிகிற சமயத்தில் ஸர் ராமசாமி முதலியாரை அதிகமாகக் குறை சொல்கிறவர்களை இந்த நாட்டில் காண முடியவில்லை. காரணம், ஸர் ஏ. ராமசாமி முதலியார் மேற்படி சர்வ தேச நாடகத்தில் இந்தியாவின் உண்மைப் பிரதிநிதியைப் போலவே அவ்வளவு திறமையாகத் தமது பாத்திரத்தை நடித்தார் என்பதுதான்.



தற்சமயம் ஸர் ஆற்காடு முதலியார் இந்தியாவைப் பஞ்ச பயங்கரத்திலிருந்து காப்பாற்றுவதற்காக அமெரிக்காவில் செய்துவரும் பிரசாரம் அவர் இந்திய சர்க்காரின் செல்லப் பிள்ளை யென்பதையே நாம் மறந்துவிடச் செய்கிறது. அமெரிக்க சர்க்காரையும் அமெரிக்க ஜனங்களையும் இந்தியாவுக்கு அரிசி அனுப்பச் செய்வதற்காக அவர் கல்லும் கனியும்படி கெஞ்சுவதும், மயிர்க் கூச்செறியும்படி பயமுறுத்துவதும், நயத்தினாலும் பயத்தினாலும் எடுத்துக் காட்டி எச்சரிப்பதும், "பிரிட்டனைப் போல் நாங்கள் கடன் கேட்கவில்லை; காலணா பாக்கியின்றி ரொக்கம் கொடுக்கிறோம்!" என்று ஆசை காட்டுவதும், அப்பப்பா!—பிரமாதம் என்றுதான் சொல்ல வேண்டும்!

பாருங்கள்! இந்தியப் பொது உடைமைக் கட்சி நாலா புறத்திலும் பலமான தாக்குதலுக்கு உள்ளாகியிருக்கும் இந்தக் காலத்தில், ஸர் ஆற்காடு ராமசாமி முதலியார் அந்தப் பொது வுடைமைக் கட்சிக்குக்கூட ஓர் உபயோகத்தைக் கண்டு பிடித்திருக்கிறார்.

"இந்தியாவின் பஞ்சத்தைத் தவிர்க்க அமெரிக்கா உடனே முன்வந்து உதவி செய்யாவிட்டால், இந்தியாவின் அரசாங்க இயந்திரம் உடைந்து சின்னா பின்னமாகி விடும்; இந்தியா தேசம் பொது உடைமைக் கட்சியின் வசமாகிவிடும்!" என்று ஒரு போடு போட்டிருக்கிறார்!

உலகத்திலேயே பெரிய பணக்காரர்களாகிய அமெரிக்கர்கள் வேறு எதற்கும் பயப்படாவிட்டாலும் பொது வுடைமைக்குப் பயந்தே தீர்வார்கள் என்று கண்டு பிடித்து, அவர்களை மசிய வைப்பதற்கு அந்த ஆயுதத்தையும் உபயோகப்படுத்திய ஸர் ராமசாமி முதலியாரின் சாமர்த்தியத்தை என்னவென்று சொல்வது?

ஸர் ஆற்காடு ராமசாமி முதலியார் முன் பல முறைகளில் சென்றதுபோல் இந்திய சர்க்காரின் தூதராகவே அயல்நாடு சென்றுள்ளபோதிலும், இந்தத் தடவை அவருடைய தூது வெற்றியடைய வேண்டும் என்று இந்தியா தேசம் ஏகோபித்து விரும்புகிறது.

கல்கி

மலர் 5 | தமிழ்த் திருநாடு தன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா —பாரதியார் | இதழ் 32

என்ன சேதி?

மஞ்சள் பெட்டிக்கு ஜே!

சென்ற தடவை பொதுத் தேர்தல் இந்தியா தேசத்திலேயே சென்னை மாகாணத்தில்தான் முதன் முதலில் நடந்தது. அத் தேர்தலில் சென்னை பிரமாதமான முதல்தர வெற்றி பெற்று மற்ற மாகாணங்களுக்கெல்லாம் உற்சாகத்தை ஊட்டிற்று என்பதை சர்தார் வல்லபாய் பட்டேல் இச்சமயம் சென்னை மாகாண வோட்டர்களுக்கு ஞாபகப்படுத்தி யிருக்கிறார். இந்த வருஷத்துப் பொதுத் தேர்தலில் மற்ற மாகாணங்கள் சென்னையைத் தேதி விஷயத்தில் முந்திக் கொண்டன. அதோடு வெற்றி விஷயத்திலும் பழைய சென்னை ரிகார்டை அவை தூக்கி அடித்து விட்டன. எனவே, இந்தத் தடவை சென்னை மாகாணமும் தன்னைத் தானே தூக்கி அடித்துப் பிரமாதமான வெற்றி பெறவேண்டிய அவசியம் ஏற்பட்டிருக்கிறது. எனவே, மஞ்சள் பெட்டிக்கு 100-க்கு 100 வீதம் வெற்றி அளித்தால் தான் சென்னை மாகாணத்தின் கௌரவத்தைக் காப்பாற்ற முடியும் என்பதை வோட்டர்களுக்கு ஞாபகப்படுத்துகிறோம்.

சர்தார் சொல்லுகிறார்

பம்பாயில் வெளியாகும் 'பிரீபிரஸ் ஜர்னல்' பத்திரிகையின் மார்ச்சு 11உ இதழ் தலையங்கத்தில் பின் வரும் விவரம் காணப்படுகிறது:—

"பார்லிமெண்டரி வேலையைத் தேசிய இயக்கத்தின் ஒரு முக்கிய அம்சமாகக் காங்கிரஸ் ஒப்புக் கொண்டிருக்கிறது. ஏற்கெனவே காங்கிரஸ் மந்திரி சபைகளை ராஜிநாமா செய்தது ஓர் அரசியல் தவறு என்றும், அந்தத் தவறை மீண்டும் காங்கிரஸ் செய்யக் கூடாது என்றும் சர்தார் வல்லபாய் சொல்லி யிருக்கிறார்."

சர்தார் வல்லபாய் பட்டேல் பிரசங்கத்தின் சாராம்சம் மார்ச்சு 10உ சென்னை "ஹிந்து" பத்திரிகையிலும் வெளியாகி யிருந்தது. அந்த விவரத்தின்படி சர்தார் பட்டேல், "சட்டசபையிலிருந்து காங்கிரஸ் வாதிகள் ராஜிநாமா செய்தது, எதிரிகள் விரித்திருந்த வலையில் எதிர்பாராதபடி சிக்கிக்கொண்டதாயிற்று!" என்று சொன்னதாகத் தெரிகிறது.

காந்திமகானுடைய பிரதம சீடராகிய சர்தார் வல்லபாய் மற்றக் காரியங்களில் காட்டும் தைரியத்தைப் போலவே செய்த தவறை ஒப்புக் கொள்ளும் விஷயத்திலும் தைரியம் காட்டி யிருக்கிறார்.

ஐந்து வருஷத்துக்கு முன்னால் காங்கிரஸ் வாதிகள் சட்ட சபைகளையும் மந்திரி சபைகளையும் கை நழுவ விட்டது மிகப் பெரிய அரசியல் தவறு என்பதில் சந்தேகம் இல்லை. அதனால், இந்திய அதிகார வர்க்கம் ஐந்து வருஷ காலம் யதேச்சாதிகாரமும் அடக்கு முறை ஆட்சியும் நடத்துவது சாத்தியமாயிற்று. யுத்தத்தை நடத்துவதற்கு இந்தியாவின் ஆள் பலம், பொருள் வளம் முதலிய சகல வசதிகளையும் தங்கு தடை யில்லாமல் பிரிட்டிஷார் உபயோகித்துக் கொண்டார்கள். ஜனாப் ஜின்னாவின் செல்வாக்கு முஸ்லிம் சமூகத்தினிடையே ஒன்றுக்குப் பத்து மடங்காக வளர்ந்தது. இந்திய சுயராஜ்யத்துக்கு முஸ்லிம் லீக்கின் முட்டுக்கட்டை போடும் சக்தி அபரிமிதமாகப் பெருகிற்று.

இதை யெல்லாம் சர்தார் வல்லபாய் மட்டுமில்லாமல் மற்றக் காங்கிரஸ் தலைவர்களும் இப்போது உணர்ந்திருக்கிறார்கள்.

மௌலானா ஆமோதிக்கிறார்

சர்தார் வல்லபாய் பம்பாய்ப் பொதுக் கூட்டத்தில் கூறியதை மௌலானா அபுல் கலாம் ஆஸாத் பஞ்சாப் மாகாணத்தில் தாம் செய்த காரியத்தின் மூலம் பூரணமாய் ஆமோதிக்கிறார். அந்த மாகாணத்தில் ஏற்பட்டிருக்கும் கூட்டு மந்திரி சபையின் விசேஷத்தைப் பற்றி நேயர்கள் அறிந்திருப்பார்கள். யூனியனிஸ்ட் கட்சி, காங்கிரஸ் கட்சி, அகாலி சீக்கியர் கட்சி ஆகிய மூன்று கட்சிகள் சேர்ந்து மேற்படி கூட்டு மந்திரி சபை ஏற்பட்டிருக்கிறது. பஞ்சாப் சட்டசபையில் மேற்படி கட்சிகளின் பலம் பின்வருமாறு :—

யூனியனிஸ்ட்	14
காங்கிரஸ்	56
அகாலி	23

ஆனால் மந்திரி சபையில் மேற்படி கட்சிகளின் பிரதிநிதித்துவம் பின்வருமாறு :—

யூனியனிஸ்ட்	3
காங்கிரஸ்	2
அகாலி	1

ஐம்பத்தாறு அங்கத்தினர் அடங்கிய காங்கிரஸ் கட்சிக்கு மந்திரி சபையில் இரண்டு ஸ்தானங்களும், பதினாலு அங்கத்தினர் அடங்கிய யூனியனிஸ்ட் கட்சிக்கு மூன்று ஸ்தானங்களும் கிடைத்திருப்பது ஆச்சரியமாயிருக்கிறதல்லவா? அதைக் காட்டிலும் பெரிய ஆச்சரியம் என்னவென்றால், மேற்படி கலப்பு மந்திரி சபைக்குத் தலைமை வகிக்கும் பிரதம மந்திரி, ஏற்கெனவே யூனியனிஸ்ட் கட்சித் தலைவராகவும், பல வருஷம் பஞ்சாப் பிரதம மந்திரியாக இருந்தவருமான மாலிக் ஸர் கிஸர் ஹயாத்கான் என்பதாகும்.

இந்த ஸர் பட்டதாரி பிரிட்டிஷ் சர்க்காருக்குச் செய்திருக்கும் ஒத்தாசைகளுக்கும் பிரிட்டிஷாரிடம் பெற்றிருக்கும் பரிசுகளுக்கும் பதக்கங்களுக்கும் கணக்கு வழக்கு இல்லை. சென்ற சில வருஷங்களில் பஞ்சாப் சிறைகளில் ஸ்ரீ ஜயப்பிரகாச் நாராயணன் முதலிய காங்கிரஸ்வாதிகள் பட்ட கஷ்டங்களைப் பற்றிப் படித்ததை நாம் இன்னும் மறந்து விடவும் இல்லை. அத்தகைய மனிதர் பிரதம மந்திரியாக இருக்க, அவரின்கீழ் இரண்டு காங்கிரஸ் மந்திரிகள் வேலை பார்க்கும் ஏற்பாட்டை மௌலானா ஆஸாது செய்திருக்கிறார். இதற்குச் சரியான காரணமும் சொல்லியிருக்கிறார். "இப்படிச் செய்திராவிட்டால் பஞ்சாபில் 93 ஏ ஆட்சி ஏற்படுவதைத் தவிர வேறு வழியில்லாமல் போயிருக்கும்!" என்று தெரியப்படுத்தியிருக்கிறார்.

ரொம்ப சரி; 93 ஏ ஆட்சி, அதாவது அதிகார வர்க்கத்தின் யதேச்சாதிகார ஆட்சியை எந்த விதத்திலும் தடுக்க வேண்டியது அவசியந்தான். அதற்காக எவ்வளவு தூரம் வேணுமானாலும் காங்கிரஸ் விட்டுக் கொடுக்கலாம் என்பதில் யாதொரு சந்தேகமும் இல்லை. எனவே, பம்பாயில் கூடியிருக்கும் காங்கிரஸ் காரியக் கமிட்டியும் மௌலானாவின் காரியத்தை ஆமோதித்திருக்கிறது.

ஆனால் இதிலெல்லாம் ஒரு வேடிக்கை என்னவென்றால், சர்தார் வல்லபாய் இன்று தவறு என்று ஒப்புக் கொள்வதை ஐந்து வருஷத்துக்கு முன்பே ஒரு காங்கிரஸ் தலைவர் எடுத்துக் காட்டி "ராஜிநாமா செய்யக் கூடாது" என்றும், மாகாணங்களை 93 ஏ யதேச்சாதிகார ஆட்சிக்கு உட்படுத்தக் கூடாதென்றும் எச்சரிக்கை செய்தார். அந்தத் தலைவரைப் "பதவி மோகம் கொண்டவர்" என்று சிலர் சொன்னதையும், இன்னமும் அவ்விதம் சிலர் சொல்லிக் கொண்டிருப்பதையும் நினைத்தால் வியப்பாக இருக்கிறதல்லவா?

செமண்ட் கம்பெனி

தென்னிந்தியர்கள் குமாஸ்தா வேலைக்குத்தான் லாயக்கானவர்கள் என்றும், வட இந்தியர்களைப்போல் தொழில்களிலும் வியாபாரத்திலும் ஈடுபட அவர்களால் முடியாதென்றும் வெகு காலம் கருதப்பட்டு வந்தது. சென்ற சில காலமாக அந்த எண்ணம் தவறானது என்று நிரூபிக்கப்பட்டு வருகிறது. தொழில், வியாபாரத் துறைகளில் தென்னிந்தியர்களும் ஈடுபட்டு வெற்றியுடன் நடத்தி வருகிறார்கள். இதற்கு அத்தாட்சியாக, இந்தக் "கல்கி" இதழில் வெளியாகியிருக்கும் "இண்டியா செமண்ட் கம்பெனி" விளம்பரத்தை நேயர்கள் கவனிக்கக் கோருகிறோம். வருங் காலத்தில் மிகவும் செழித்து வளர வேண்டிய தொழில்களில் செமண்ட் உற்பத்தியும் ஒன்றாகும். தேச முன்னேற்றத்துக்குப் பல வகைகளிலும் அவசியமானதாகும். அந்தத் தொழிலை வளர்க்கும் உத்தேசத்துடன் ஏற்பட்டிருக்கும் மேற்படி தென்னிந்தியக் கம்பெனியைக் குதூகலத்துடன் வரவேற்கிறோம். இந்தோ—கமர்ஷியல் பாங்கியை மிகத் திறமையுடன் வெற்றிகரமாக நடத்தி வரும் ஸ்ரீ எஸ். என். சங்கரலிங்கய்யர் அவர்கள் மேற்படி செமண்ட் கம்பெனியின் நிர்வாகப் பொறுப்பை ஏற்றுக் கொண்டிருக்கிறார் என்பது, கம்பெனியின் வெற்றியை முன்னாலேயே ஊர்ஜிதம் செய்து விடுகிறது.

சென்ற இதழில் வெளியான காலக்ஷேபத் துணுக்குக்குப் பரிசு பெற்றவர் : பி. கே. கிருஷ்ணமூர்த்தி, 50, முத்துமாரிச் செட்டி தெரு, மண்ணடி, சென்னை.

நிகழ்ச்சிச் சித்திரம்



-உம்மன்


அப்புறம் உலகமே நம்முடைய கையில்தான்!
உலகம்
என்ன, அங்கே ஏதோ சப்தம் கேட்கிறது?
ஸ்டாலின்
ஓஹோ; இவர்தானா? வெயில் காலம் ஆரம்பமாகி விட்டதல்லவா? அதுதான் தூக்கத்தில் பிதறுகிறார்.

சர்ச்சிலின் யுத்த கோஷம்

ஹிட்லர் அர்ஜென்டைனாவில் இருப்பதாகச் சிலர் சொல்லுகிறார்கள்.

அவர் மெக்ஸிகோவில் இருப்பதாக வேறு சிலர் சொல்லுகிறார்கள்.

அவர் எமலோகத்தில் இருப்பதாக வேறு சில நம்பத்தகுந்த வட்டாரங்கள் கூறுகின்றன.

அவர் பூலோகத்தில் இருந்தாலும் சரி, எமலோகத்தில் இருந்தாலும் சரி, அதைப் பற்றி நமக்குக் கவலையில்லை.

அவர் எங்கிருந்த போதிலும், இந்த உலகத்தையும் இந்த உலகத்தில் இப்போது நடக்கும் சம்பவங்களையும் கவனித்தாரானால், மனுஷர் ஒரே சிரிப்பாகச் சிரிப்பார் என்பதில் சந்தேகமில்லை.

* * *

நல்லது; ஹிட்லர் தாம் இருக்கும் இடத்தில் இருந்து கொண்டு தற்சமயம் உலகத்தைக் கவனித்தால், அப்படி என்னத்தைப் பார்ப்பார்? தாம் விழுந்து விழுந்து சிரிக்கும்படியாக என்ன விநோதத்தைக் காண்பார்?

முதலில், தாம் செத்துப் போனது உண்மையல்ல வென்பதையும், பூலோகத்தில் தாம் சிரஞ்சீவியாக விளங்குவதையும் காண்பார்.

உலகத்தில் ஒரு ஹிட்லருக்குப் பதிலாக இப்போது இரண்டு ஹிட்லர்கள் இருப்பதைப் பார்ப்பார்!

உலகத்தில் தமது முக்கிய சத்துருக்களாயிருந்த சர்ச்சிலும் ஸ்டாலினும் தம்மைப் போல் வேஷம் போட்டுக் கொண்டு நடிப்பதைப் பார்ப்பார்!

சர்ச்சில் ஸ்டாலினை 'ஹிட்லர்' என்பதையும், ஸ்டாலின் சர்ச்சிலை 'ஹிட்லர்' என்பதையும் கேட்டு அந்த 'ஒரிஜனல்' ஹிட்லர் குதூகலம் அடைவார்.

தாம் பூலோகத்தில் இருக்கும்போது கூறிய வார்த்தைகளை யெல்லாம் அவ்விருவரும் இப்போது திரும்பிச் சொல்வதைக் கேட்டுக் களிப்பார்.

அதாவது, ருஷியப் பொது உடைமையின் பயங்கரத்தைப் பற்றித் தாம் சொன்னதை யெல்லாம் சர்ச்சிலும், பிரிட்டிஷாரின் ஏகாதிபத்திய வெறியைப் பற்றித் தாம் சொன்னதை யெல்லாம் ஸ்டாலினும் இப்போது சொல்லிக் கொண்டிருப்பதைக் கேட்டு அவர் வயிறு குலுங்கச் சிரிப்பார்.

சிரிக்கட்டும்; ஹிட்லர் நன்றாய்ச் சிரிக்கட்டும்; சிரித்துச் சிரித்து வயிற்றைப் புண்ணாக்கிக் கொள்ளட்டும்!

உலகத்தை ஆறு வருஷம் மகா பயங்கர யுத்தத்தில் ஆழ்த்திய மனிதருக்கு வேண்டியது தான்!

அப்படி அந்த மனிதருக்குச் சிரிப்பு மூட்டும்படியாக பூலோகத்தில் இப்போது நடக்கும் காரியங்களை நாம் சற்றுக் கவனிக்கலாம்.

ஏனெனில், அந்தக் காரியங்கள் கேவலம் ஹிட்லருக்குச் சிரிப்பு மூட்டுவதோடு போவதாயில்லை. இந்த உலகத்து மக்களை யெல்லாம் பாதிப்பதாக இருக்கின்றன. உங்களையும் நம்மையும் கூடப் பயங்கர விபரீத நிலைமையில் ஆழ்த்துவதாயிருக்கின்றன.

சுருங்கச் சொன்னால், மூன்றாவது உலக மகா யுத்தம் ஒன்று உடனே மூண்டு விடுமோ என்ற பீதியை உண்டாக்கி யிருக்கின்றன!

* * *

ஐயோ! இது என்ன கூத்து! மறுபடியும் இன்னொரு உலக யுத்தமா?

இப்போதுதானே ஆறு வருஷ காலம் யுத்தம் நடந்து முடிவடைந்தது?

லட்சக் கணக்கான மக்கள் யுத்த தேவதைக்குப் பலியானார்களே?

கோடிக் கணக்கான பணமும் பொருள்களும் நாசமாயினவே?

மாட மாளிகைகளும் நாடு நகரங்களும் தவிடுபொடி யாயினவே?

அத்தகைய பயங்கரமான யுத்தம் முடிந்து இன்னும் சரியாக ஒரு வருஷம் கூட ஆகவில்லையே?

அதற்குள்ளே இன்னொரு யுத்தமா?

ஆம்; அப்படித்தான் உலகப் பிரமுகர்கள் சொல்வதிலிருந்து நாம் தெரிந்து கொள்ள வேண்டியிருக்கிறது.

அதிலும், முக்கியமாக இங்கிலாந்தின் பிரதம மதகுருவாகிய காண்டர்பரி ஆர்ச் பிஷப் அவர்களே சொல்லும் போது நாம் அதை நம்பத்தானே வேண்டி யிருக்கிறது?

ஆர்ச் பிஷப் பாதிரியார் என்ன சொல்கிறார் என்று கேளுங்கள்:

"ம்பூவிக்கு முன்பு உலகம் எவ்வளவு ஆபத்தான நிலைமையில் இருந்ததோ அதை விடப் படுமோசமான ஆபத்தில் இப்போது உலகம் இருக்கிறது!" என்கிறார்.

அந்தப் படு மோசமான ஆபத்து என்னவென்று தெரிகிறதா?

மியூனிச் என்னும் ஜெர்மன் நகரத்திலேதான் ஒன்பது வருஷத்துக்கு முன்னால் பிரசித்தி பெற்ற ஹிட்லர்—சேம்பர்லின் சந்திப்பு நடைபெற்றது.

அதாவது, உலகத்தை இரண்டாவது மகா யுத்த விபத்திலிருந்து காப்பாற்றுவதற்காகச் சேம்பர்லின் மியூனிச்சுக்கு ஓடி ஹிட்லரைப் பேட்டி கண்டார்.

அதன் பலன் என்ன ஆயிற்று என்பது எல்லோருக்கும் தெரியும்.

இப்போதும் உலகம் அத்தகைய ஆபத்தான நிலைமையிலேதான் இருக்கிறது என்று காண்டர்பரி பெரிய பாதிரியார் கூறுகிறார்.

அவ்வளவு பெரியவர் சொல்வதை நாம் நம்பத்தான் வேண்டியிருக்கிறது.

* * *

இன்னும் தெளிவாகவும் விளக்கமாகவும் தெரிந்து கொள்ள வேண்டுமானால் நம்முடைய மாஜி பிரிட்டிஷ் பிரதம மந்திரி சர்ச்சில் அவர்கள் சொல்வதைக் கேட்க வேண்டும்.

மூன்றாவது உலக மகா யுத்தத்தின் ஜாதகத்தை அந்த மகானுபாவர் கணித்து வைத்திருக்கிறார்!

அந்த யுத்தம் யார்யாருக்கும் இடையே உண்டாகும், எப்போது உண்டாகும் என்பதைப் பற்றியெல்லாம் அவர் நன்றாகத் தெரிந்து வைத்திருக்கிறார்.

ஜோதிடம் ஒருவேளை தப்பினாலும் அவர் தாம் சொன்னதை நடத்திக் காட்டக் கூடியவர் என்பதை நாம் அறிவோம்.

அந்தத் தைரியத்திலே அவர் என்ன சொல்கிறார் என்பதைக் கவனிப்போம்:

சமீபத்திலே சர்ச்சில் அமெரிக்காவிலே பல்டன் என்னுமிடத்தில் செய்த பிரசங்கத்தில் மூன்றாவது உலக மகா யுத்தத்துக்குக் கட்டியம் கூறி வரவேற்றிருக்கிறார்.

அந்த மூன்றாவது உலக மகா யுத்தத்தில் ஜயிப்பதற்காக அமெரிக்காவுக்கும் பிரிட்டனுக்குமிடையே நெருங்கிய ராணுவ ஒத்துழைப்பு இருக்க வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்.

வரப்போகும் அந்த உலக யுத்தத்தின் ஆங்கிலோ அமெரிக்கர்களுக்கு எதிரியார் என்பதையும் மறைமுகமாகச் சொல்லியிருக்கிறார்.

அது யார்? நேற்றுவரை சர்ச்சிலும் ரூஸ்வெல்ட்டும் கைகோத்து அத்தியந்த சிநேகத்துடன் கொஞ்சிக் குலாவிய ஸ்டாலின்தான்; ஸ்டாலினைத் தலைவராகக் கொண்ட ருஷியா தேசந்தான்.

* * *

மாஜி பிரிட்டிஷ் பிரதம மந்திரி வின்ஸ்டன் சர்ச்சில் மிகவும் கெட்டிக்காரர், புத்திசாலி, பெரிய அரசியல் ஞானி, மதியூகி என்பது எல்லோருக்கும் தெரிந்த விஷயம்.

ஆனால், அவ்வளவு புத்திசாலித்தனமும் கெட்டிக்காரத்தனமும் வெளியே தெரிவதற்கு ஒரு யுத்தம் வந்தாக வேண்டியதாக இருக்கிறது.

முதல் மகா யுத்தத்தின்போது சர்ச்சில் கடற்படை மந்திரியாக இருந்து பெரும் புகழ் பெற்றார். அந்த யுத்தம் முடிந்ததும் அவருடைய பெரும் புகழும் முடிந்தது. வெகுகாலம் அஞ்ஞாத வாசம் புரிந்தார். அவரை யாருமே திரும்பிப் பார்க்கவில்லை.

இரண்டாவது மகாயுத்தம் வந்தது.

அப்போது அவரைத் தேடிக்கொண்டு அதிர்ஷ்டமும் வந்தது.

இங்கிலாந்தின் பிரதம மந்திரியானார். யுத்தத்தையும் ஜயித்துக் கொடுத்தார். அத்துடன் தமக்கும் பெரும் புகழும் தேடிக் கொண்டார்.

ஆனால், அந்த யுத்தம் முடிந்த மறுநாளே அவருடைய வேலைக்கும் சீட்டுக் கிழிந்தது!

அவ்வளவு திறமையாகவும் புத்திசாலித்தனமாகவும் ஆறு வருஷ காலம் பிரிட்டனை நிர்வகித்து யுத்தத்தை வென்ற சர்ச்சிலை பிரிட்டிஷ் மக்கள் திரும்பிப் பார்க்கவில்லை.

சர்ச்சில் மீண்டும் பழைய உபயோகமற்ற சர்ச்சிலானார்.

சமாதான காலத்திலே சர்ச்சிலுக்கு மதிப்பில்லை, வேலை இல்லை, மகிமை இல்லை, உத்தியோகம் இல்லை.

ஆகவே, மூன்றாவது உலக யுத்தம் வந்தே தீரவேண்டும் என்பதற்கு ஒரு முக்கிய காரணம் அவசியம் இருக்கத்தான் இருக்கிறது.

அந்தக் காரணம் சர்ச்சில் துரைதான்! அதாவது சர்ச்சிலின் சாமர்த்தியம் மறுபடியும் வெளிப்பட்டு உலகத்துக்கும் அது பயன்பட வேண்டுமானால் மூன்றாவது உலக யுத்தம் வந்துதான் தீரவேண்டும்!

எனவே, வின்ஸ்டன் சர்ச்சிலைப் பொறுத்த வரையில் அவருடைய யுத்த கோஷத்துக்கு அர்த்தம் இருக்கிறது; போதிய காரணமும் இருக்கிறது.

வீணாகச் சொல்லக் கூடாது; மூன்றாவது உலக யுத்தத்தை எதிர் கொண்டு அழைப்பவர் சர்ச்சில் மாத்திரமே அல்ல. இங்கிலாந்திலும் அமெரிக்காவிலும் அத்தகைய மனோபாவம் கொண்டவர்கள் இன்னும் பலர் இருக்கிறார்கள்.

இங்கிலாந்தும் அமெரிக்காவும் ஒன்று சேர்ந்து ருஷியாவைத் தீர்த்துக் கட்டிவிட வேண்டும் என்று அவர்கள் விரும்புகிறார்கள்.

ருஷியாவில் அமுலில் இருக்கும் பொது உடைமை ராஜ்யம் உலகம் பூராவும் பரவிவிட்டால் என்ன செய்கிறது என்று அவர்கள் பயப்படுவது தான் அதற்கு உண்மையான காரணம்.

ருஷியா ஏகாதிபத்திய ஆசை கொண்டு தன்னுடைய ஆதிக்யத்தைப் பிற நாடுகளில் ஸ்தாபித்து வருகிறது என்று வெளிப்படையாகக் காரணம் சொல்கிறார்கள்.

இரண்டாவது உலக யுத்தத்தில் அடிபட்டு ருஷியா களைத்துப் போயிருக்கும் இந்தச் சமயத்திலேதான் அதன் ஆதிக்யத்தை ஒழிக்க வேண்டும் என்றும், அணுகுண்டு இரகசியம் அமெரிக்காவுக்கு மட்டும் தெரிந்திருப்பதால் ருஷியாவை இந்தச் சமயத்தில் ஒரே அடியாக அடித்துப் போட்டு விடலாம் என்றும் அவர்கள் நம்புகிறார்கள்.

மேற்படி முதலாளி வர்க்க கோஷ்டியாரின் பிரதிநிதியாகத்தான் சர்ச்சில் பேசுகிறார்.

* * *

ருஷியாவின் ஏகாதிபத்திய ஆசையைக் குறித்து வரும் செய்திகள் எவ்வளவு தூரம் உண்மை, எவ்வளவு தூரம் முதலாளி வர்க்கத்தின் பிரசாரம் உண்மை என்பது நமக்குத் தெரியாது.

"மஞ்சூரியாவை விட்டு ருஷியப் படை கிளம்ப மறுக்கிறது; ரொம்ப அநியாயம்!" என்று ஒரு நாள் சொன்னார்கள்.

"சீன சர்க்காருக்குத் தெரியப்படுத்தாமல் ருஷியப் படை மஞ்சூரியாவை விட்டுக் கிளம்பி விட்டது! ரொம்ப ரொம்ப அநியாயம்!" என்று மறு நாள் சொன்னார்கள்.

பாரசீகத்தைப் பற்றியும் இம்மாதிரி முரண்பட்ட செய்திகள் வந்து கொண்டிருக்கின்றன.

பிரசாரத்தை எல்லாம் தள்ளி விட்டுப் பார்த்தாலும் ருஷியாவின் படைகள் இன்று அன்னிய நாடுகளில் இருக்கின்றன என்பதை மறுப்பதற்கில்லை.

எனவே, ஹிட்லரின் ஆவி ஓரளவு ருஷியாவை வசப்படுத்தி யிருக்கிறதென்பதை ஒப்புக் கொள்ளலாம்.

* * *

சரி; ஆனால் ருஷியாவின் சாம்ராஜ்ய ஆசை அல்லது ஏகாதிபத்திய வெறி மூன்றாவது உலக யுத்தத்தை ஆரம்பிப்பதற்குப் போதிய காரணம் ஆகுமா?

அதனால் உத்தேசித்த பலன்தான் கிடைக்குமா!

அதாவது, ஆங்கில பாஷை பேசும் சாதியாராகிய பிரிட்டிஷாரும் அமெரிக்கரும் சேர்ந்து தாக்கி ருஷியாவையோ அதன் பொது உடைமைக் கொள்கையையோ அழித்துவிட முடியுமா?

ருஷியாவை அழித்து விடுவது ஒரு வேளை சாத்திய மாகலாம். ஆனால் அதன் பொது உடைமைக் கொள்கையை ஒரு நாளும் அழிக்க முடியாது.

மேலும் ருஷியா அழியும்போது அது தான் மட்டும் அழியாது; அதே சமயத்தில்—பிரிட்டனும் அழியும்; அமெரிக்காவும் அழியும். உலக முழுவதுமே அழிந்து போனாலும் போகும்.

நவீன விஞ்ஞானத் துறையிலே ருஷியா பிரிட்டனுக்கோ அமெரிக்காவுக்கோ சளைத்ததல்ல.

ருஷியர்கள் தங்களுடைய இரகசியங்களைக் கடைசி நிமிஷம் வரை பாதுகாப்பதில் ரொம்பவும் பெயர் வாங்கியவர்கள்.

எனவே, அணுகுண்டின் இரகசியமும், அணுகுண்டுவுக்கு அப்பன் குண்டின் இரகசியமும் ருஷியாவுக்குக் கட்டாயம் தெரிந்திருக்கும்.

ஆகையால், பிரிட்டனும் அமெரிக்காவும் ருஷியாவுக்கு விளைவிக்கும் சேதத்தை விட அதிகமாகவே ருஷியாவும் மேற்படி நாடுகளில் விளைவிக்க முடியும்.

மூன்றாவது உலகமகா யுத்தம் ஆரம்பமானால், மேற்படி மூன்று நாடுகள் மாத்திரமல்லாமல் உலக முழுவதுமே ஸ்மசானமாகும் என்றும் உறுதி சொல்லலாம்.

சர்ச்சிலும், ஸ்டாலினும் மற்றும் உலக அரசியலில் தற்சமயம் செல்வாக்குள்ள பிரமுகர்களும் தங்களுக்குள் போட்டி யிட்டுக்கொண்டு உலகத்தை மேற்கண்ட கதிக்கு உள்ளாக்காதிருக்க வேண்டும் என்று பிரார்த்திக்கிறோம்.

மேற்படி மூன்று தேசங்களுக்குள் ஏற்படும் தகராறுகளைத் தீர்த்துக் கொள்ள வேறு நாகரிக முறைகளைக் கடைப்பிடிப்பார்கள் என்று நம்புகிறோம்.

சிவகாமியின் சபதம்

கல்கி

அத்தியாயம் 27

சீன யாத்திரிகர்

வாதாபி நகரத்தின் வீதிகளில் தன்னை நடனம் ஆடச் சொன்னதினால் ஏற்பட்ட அவமான உணர்ச்சியின் வேகம் நாளாக ஆகச் சிவகாமியின் உள்ளத்தில் குறைந்து மங்கி வந்தது. தமிழகத்திலிருந்து சிறை பிடித்துக் கொண்டு வரப்பட்டவர்கள் எல்லாரும் அவரவர்களும் ஒவ்வொரு தொழிலில் ஈடுபட்டுக் குடியும் குடித்தனமுமாய் வாழத் தொடங்கினார்கள். அவர்களில் சிலர் சில சமயம் சிவகாமியைப் பார்க்க வருவதுண்டு. அப்படி வருகிறவர்களுடைய மனதில் கோபமோ, வைரமோ ஒன்றுமில்லையென்பதைச் சிவகாமி கண்டாள்.

இதையெல்லாம் எண்ணிப் பார்த்த போது தான் ஆத்திரப்பட்டுச் சபதம் செய்ததின் அறியாமையும், மாமல்லருடன் போகாமல் அவரைத் திருப்பியடித்ததின் மௌடீகமும் அவளுக்கு நன்கு புலனாயின.

ஆயினும் பெண்களின் இயல்புக்கு ஒத்தபடி தான் செய்த தவறுக்கும் மாமல்லர் மீதே சிவகாமி பழியைப் போட்டாள். "என்ன இருந்தாலும் நான் அறியாப் பெண்தானே? ஏதோ அவமானத்தினாலும் ஆத்திரத்தினாலும் தூண்டப்பட்டு அந்தமாதிரி சபதம் செய்தேன். ஆண் பிள்ளையும் அறிவாளியுமான அவரல்லவா என்னைப் பலவந்தப்படுத்திப் பிடிவாதமாக அழைத்துப் போயிருக்க வேண்டும்? சேனாபதி பரஞ்சோதி சொன்னாரே, அந்தப்படி ஏன் அவர் செய்திருக்கக் கூடாது?" என்று அடிக்கடி எண்ணமிட்டாள்.

வருஷங்கள் செல்லச் செல்ல, மாமல்லர் மறுபடியும் வந்து தன்னுடைய சபதத்தை நிறைவேற்றித் தன்னை அழைத்துப் போவார் என்ற நம்பிக்கை சிவகாமிக்குக் குறைந்து கொண்டே வந்தது. அது எவ்வளவு பிரம்மப் பிரயத்தனமான காரியம், எவ்வளவு அசாத்தியமான விஷயம் என்பதையும் உணரலானாள்.

"நான் செய்த சபதம் பிசகானது; அறியாமையினால் அத்தகைய அசாத்தியமான காரியத்தைச் சொல்லி விட்டேன். அதைத் தாங்கள் பொருட்படுத்த வேண்டாம். என்னை எப்படியாவது திரும்ப அழைத்துக் கொண்டு போனால் போதும்!" என்று மாமல்லருக்குச் செய்தி சொல்லி அனுப்பலாமா என்பதாகச் சில சமயம் அவளுக்குத் தோன்றியது. ஆனால் அந்த யோசனையைக் காரியத்தில் அவள் நிறைவேற்றுதபடி நாகநந்தியின் ஏளன வார்த்தைகள் செய்து வந்தன.

* * *

சிவகாமி கத்தியை வீசி எறிந்து நாகநந்தியை முதுகில் காயப்படுத்திய போது, அந்த நயவஞ்சக வேஷதாரி "அடாடா! என்ன காரியம் செய்தாய்? உன்னை அவர்களோடு கூட்டி அனுப்ப வல்லவா எண்ணினேன்?" என்று சொல்லியது நேயர்களுக்கு

நினைவிருக்கலாம். அதனால் சிவகாமிக்கு நாகநந்தியின் மீதிருந்த கோபமெல்லாம் மாறித் தன் செயலைப் பற்றிப் பச்சாத்தாபமும் பிக்ஷுவின் மீது ஓரளவு அநுதாபமும் உண்டாயின. நாகநந்தி தம்முடைய பாசாங்கு உத்தேசித்த பலனை அளித்துவிட்டது குறித்து மனதிற்குள் மகிழ்ந்தார். சிவகாமிக்குத் தம்மிடம் ஏற்பட்ட அநுதாபத்தைப் பூரணமாகப் பயன்படுத்திக் கொண்டார்.

சில நாளைக்கெல்லாம் சிவகாமியைத் தாமே அழைத்துக்கொண்டு போய்க் காஞ்சியில் விட்டுவிடுவதாக நாகநந்தி சொன்னார். சிவகாமி அதை மறுதளித்ததுடன் தான் செய்த சபதத்தையும் அவருக்குத் தெரிவித்தாள்.

அதைக் கேட்ட நாகநந்தி ஏளனப் புன்னகை புரிந்து, "இப்படி ஒரு நாளும் நடைபெற முடியாத சபதத்தை யாராவது செய்வார்களா?" என்று கேட்டார். "நிறைவேறுகிறதா இல்லையா என்று பார்த்துக் கொண்டிருங்கள்!" என்று சிவகாமி விறுப்பாய்ப் பேசினாள்.

அறிமுகமானவர்கள் யாருமே இல்லாத அந்தத் தூர தேசத்து நகரில், தானாக ஏற்படுத்திக் கொண்ட சிறையில் இருந்த சிவகாமிக்கு நாகநந்தியடிகளோடு அவ்வப்போது சம்பாஷிப்பது பெரிதும் ஆறுதல் தருவதாயிருந்தது. தேசமெல்லாம் பிரயாணம் செய்தவரும், பல கலைகள் அறிந்தவருமான பிக்ஷுவுடன் பேசுவது உற்சாகமான பொழுது போக்காயுமிருந்து வந்தது.

"காஞ்சிக்குத் திரும்பிப் போக உனக்கு இஷ்டமில்லாவிட்டால் வேண்டாம். அஜந்தாவுக்கு அழைத்துப் போகிறேன், வா! எந்த வர்ண இரகசியத்தைத் தெரிந்து கொள்வதற்காக உன்னுடைய தந்தை துடிதுடித்தாரோ, அதை நீயே நேரில் பார்த்துத் தெரிந்து கொள்ளலாம்!" என்று நாகநந்தி சில சமயம் ஆசை காட்டினார்.

அதற்கும் சிவகாமி "என் சபதம் நிறைவேறாமல் இந்த நகரை விட்டு நான் கிளம்பேன்!" என்றே மறுமொழி சொல்லி வந்தாள்.

மூன்று வருஷத்துக்கு முன்னால் பல்லவ சைன்யம் வாதாபியின் மேல் படையெடுத்து வரப்போகிறது என்ற வதந்தி உலாவியபோது சிவகாமி எக்களிப்படைந்தாள். அது பொய்யாய்ப் போனதோடு, நாகநந்தி அதைக் குறித்து மீண்டும் அவளை ஏளனம் செய்தது அவள் மனதைப் பெரிதும் புண்படுத்தியது. ஆயினும் தன் மனநிலையை வெளியில் காட்டிக் கொள்ளாமல், "பொறுத்திருங்கள், அடிகளே, பொறுத்திருங்கள்; இந்த வருஷம் இல்லாவிட்டால் அடுத்த வருஷம்! கொஞ்சம் பொறுத்திருங்கள்!" என்று சொல்லி மாமல்லரின் கௌரவத்தை நிலைநாட்ட முயன்றாள்.

அவ்விதம் கர்வமாகப் பேசி இப்போது வருஷம் மூன்று ஆகிவிட்டது.

சிவகாமி வாதாபிக்கு வந்து ஒன்பது வருஷம் பூர்த்தியாகி விட்டது.

இனியும் நம்பிக்கை வைப்பதில் ஏதேனும் பயன் உண்டா? நம்மை நாமே ஏமாற்றிக் கொண்டு இன்னும் எத்தனை காலம் இந்தத் துயர வாழ்க்கையைச் சுமந்திருப்பது?

போதும், போதும்! ஒன்பது வருஷம் காத்திருந்தது போதும்!

வீட்டு முற்றத்தில், பவள மல்லி மரத்தின் பக்கத்திலே இருந்த கிணறு, தன் வாயை அகலமாக விரித்து, "வா! வா! என்னிடம் அடைக்கலம் புகுவதற்கு வா!" என்று சிவகாமியை அழைத்துக் கொண்டிருந்தது!

* * *

இத்தகைய நிலைமையில்தான் ஒரு நாள் நாகநந்தியடிகள் சீன யாத்திரிகர் ஒருவரை அழைத்துக் கொண்டு சிவகாமியைப் பார்க்க வந்தார். ஹியூன் சங் என்னும் அந்தச் சீனர் உலகில் பல தேசங்களையும் பல ராஜ்யங்களையும் பார்த்துவிட்டு வந்தவர். பல கலைகளைக் கற்றுப் பாண்டித்யம் பெற்றவர். அந்தக் காலத்தில் பரத கண்டத்தில் புகழ்பெற்று விளங்கிய மூன்று சாம்ராஜ்யங்களில், ஹர்ஷ சாம்ராஜ்யத்தைப் பார்த்துவிட்டு, அடுத்தபடி வாதாபிக்கு அவர் வந்திருந்தார். சளுக்க சாம்ராஜ்யத்தில் அஜந்தா முதலிய இடங்களையும், வேங்கி நாட்டில் நாகார்ஜுன பர்வதத்தையும் பார்த்துவிட்டு, அவர் பல்லவ ராஜ்யத்துக்குப் போக எண்ணியிருந்தார். இதையறிந்த நாகநந்தி, "இங்கே

பல்லவ நாட்டின் புகழ்பெற்ற மகா சிற்பியின் மகள் இருக்கிறாள். பரத நாட்டியக் கலையில் கரை கண்டவள். அவளைப் பார்த்துவிட்டுப் போகலாம்" என்று சொல்லி அழைத்து வந்தார்.

சீன யாத்திரிகரின் சம்பாஷணை சிவகாமிக்குப் பழைய கனவு லோகத்தை நினைவூட்டி மெய்மறக்கச் செய்தது. ஹியூன் சங் தம்முடைய யாத்திரையில் தாம் கண்ட தேசங்களைப் பற்றியும் ஆங்காங்குள்ள இயற்கை அழகுகள், கலை அதிசயங்களைப் பற்றியும் விவரித்தார். இடை யிடையே தமிழகத்துச் சிற்பக் கலையைப் பற்றிச் சிவகாமியைக் கேட்டுத் தெரிந்து கொண்டார். சிவகாமியின் நாட்டியத் தோற்றங்களை அவருடைய தந்தை ஆயனர் அழியாத சிலை வடிவங்களாகச் செய்திருக்கிறார் என்று நாகநந்தி சொன்னபோது, ஹியூன் சங்கின் அதிசயம் அளவு கடந்து போயிற்று. அந்த நடனத் தோற்றங்களில் சிலவற்றைத் தாம் பார்க்க வேண்டுமென்று விரும்பிச் சிவகாமியை ரொம்பவும் கேட்டுக் கொண்டார்.

ஒன்பது வருஷத்துக்குப் பிறகு சிவகாமிக்கு உண்மையிலேயே அவள் கற்றிருந்த கலையில் மீண்டும் உற்சாகம்



உண்டாயிற்று. சில நடனத் தோற்றங்களையும் அபிநய பாவங்களையும் அவள் ஆடிக் காட்டினாள்.

ஹியூன் சங் அவற்றைக் கண்டு அதிசயித்து மகிழ்ந்தார். நாகநந்தியோ மெய்மறந்து பரவசம் அடைந்தார்.

ஹியூன் சங் சிவகாமியைப் பற்றி மேலும் விசாரித்தபோது, சிவகாமி சிறை பிடித்துக் கொண்டு வரப்பட்ட வரலாற்றையும், அவள் செய்த சபதத்தையும் பற்றி நாகநந்தி கூறினார்.

"சக்கரவர்த்தியின் அநுமதி பெற்று இந்தப் பெண்ணைத் திருப்பிக் கொண்டு விட்டு விடுவதாக எவ்வளவோ நான் சொல்லிப் பார்த்தேன். இவள் கேட்கவில்லை. இப்பேர்ப்பட்ட அற்புதக் கலை இந்த வீட்டுக்குள் கிடந்து வீணாவதை நினைத்தால் எனக்கு எவ்வளவோ கஷ்டமாயிருக்கிறது. இவளுக்கு விடுதலை தருவதற்காக இந்த வாதாபி நகரத்தை காமே கொளுத்தி அழித்து விடலாமா என்று கூடச் சில சமயம் எனக்குத் தோன்றுகிறது!" என்றார் நாகநந்தி.

ஹியூன் சங் தம் செவிகளைப் பொத்திக்கொண்டு, "புத்த பகவான் அப்படியொன்றும் நேராமல் தடுத்து அரு



ளட்டும்!" என்றார். பிறகு, அந்தப் பெரியார் ஜீவகாருண்யத்தின் சிறப்பையும், யுத்தங்களினால் நேரும் கேட்டையும் எடுத்துக் கூறித் தர்மோபதேசம் செய்தார். புத்த பகவான் ஆட்டைக் காப்பதற்காக யாகத்தை நிறுத்திய வரலாற்றை விவரித்தார். அசோகரின் தர்மராஜ்யத்தைப் பற்றி எடுத்துரைத்தார். தற்சமயம் ஹர்ஷ சக்கரவர்த்தி அதேவிதமாக தர்ம ராஜ்யம் நடத்துவதையும், பிராணி ஹிம்சையைக் கூடத் தமது ராஜ்யத்தில் தடுத்து விட்டிருப்பதையும் குறிப்பிட்டார்.

சிவகாமி இடையிலே குறுக்கிட்டு, "ஆனால், சுவாமிகளே! இந்த வாதாபி சக்கரவர்த்தியின் வீரர்கள் தமிழகத்தில் செய்த அக்கிரமங்களைப் பற்றித் தங்களுக்குத் தெரியாது; அதனால்தான் இப்படியெல்லாம் தர்மோபதேசம் செய்கிறீர்கள்!" என்று கூறியபோது, அந்தச் சீன பிக்ஷு கூறியதாவது:—

"தாயே! யுத்தம் என்று வரும்போது மனிதர்கள் மிருகங்களாகி விடுவதை நான் அறியாதவனல்ல. நீ பார்த்திருக்கக் கூடியவைகளை விடப் பன்மடங்கு அக்கிரமங்கள் நடந்திருக்கலாம். ஆனால் பழிக்குப் பழி வாங்கிக் கொண்டே போனால், அதற்கு முடிவு என்பதே கிடையாது. சளுக்க சக்கரவர்த்தி படையெடுத்ததற்குப் பழி வாங்குவதற்காக இப்போது காஞ்சி சக்கரவர்த்தி படையெடுக்கிறார்; மறுபடியும் காஞ்சியின் மேல் பழி வாங்குவதற்காகச் சளுக்க வம்சத்தினர் படையெடுப்பார்கள். இப்படி வித்திலிருந்து மரமும், மரத்திலிருந்து வித்துமாக உலகில் தீமை வளர்ந்து கொண்டே போகும். யாராவது ஒருவர் மறந்து மன்னித்துத்தான் தீரவேண்டும். அப்போதுதான் உலகம் க்ஷேமம் அடையும். தாயே! எது எப்படியானாலும் உன்னுடைய பயங்கரமான சபதம் நிறைவேற வேண்டும் என்று மட்டும் நீ ஆசைப்படாதே. அதனால் யாருக்கும் நன்மை உண்டாகாது. ஆகா! இந்தப் பெரிய நகரத்தில் எத்தனை ஆயிரம் வீடுகள் இருக்கின்றன? எத்தனை லட்சம் ஜனங்கள் வசிக்கிறார்கள்? அவர்களில் வயோதிகர்களும் குழந்தைகளும் உன்னைப் போன்ற அபலை ஸ்திரீகளும் எத்தனை பேர்? இந்த நகரத்தைத் தீ வைத்து எரித்தால், இவ்வளவு குற்றமற்ற ஜனங்களும் எத்தனை கஷ்டமடைய நேரிடும்? யோசித்துப் பார்!"

இதையெல்லாம் கேட்ட சிவகாமியின் உள்ளம் பெருங் குழப்பம் அடைந்தது. அந்தச் சமயம் பார்த்து நாகநந்தி அடிகள், "சிவகாமி! இந்தப் பெரியவர் சொன்னதைக் கேட்டாயல்லவா? நடந்து போனதையே நினைத்துக் கொண்டிருப்பதில் என்ன பயன்? பழி வாங்கும் எண்ணத்தினால் தான் பிரயோஜனம் என்ன? ஒன்பது வருஷம் நீ விரதம் காத்தது போதாதா? இன்னும் இரண்டு நாளில் இந்தச் சீனத்துப் பெரியவரும் வாதாபி சக்கரவர்த்தியும் அஜந்தாவுக்குப் போகிறார்கள். அவர்களுடன் நானும் போகிறேன். அங்கே பெரிய கலைத் திருவிழா நடக்கப் போகிறது. நீயும் எங்களுடன் வா, போகலாம்! உலகத்திலே எங்கும் காண முடியாத அதிசயங்களையெல்லாம் அங்கே நீ காண்பாய்!" என்றார்.

ஒருகணம் சிவகாமியின் கலை உள்ளம் சலனம் அடைந்து விட்டது. "ஆகட்டும், சுவாமி! வருகிறேன்!" என்று சொல்ல அவள் மனம் ஆசைப்பட்டது. ஆனால் அவளுடைய உதடுகள் அந்த வார்த்தைகளை வெளிப்படுத்த மறுதளித்து விட்டன.

அவளுடைய உள்ளத்தின் அந்தரங்கத்திலே ஒரு மெல்லிய குரல், "சிவகாமி! இது என்ன துரோகம் எண்ணுகிறாய்? மாமல்லர் அழைத்த போது அவருடன் போக மறுத்து விட்டு, இப்போது இந்த புத்த பிக்ஷுக்களுடனே புறப்படுவாயா? நீ அஜந்தா போயிருக்கும் சமயம் ஒருவேளை மாமல்லர் இங்கு வந்து பார்த்து உன்னைக் காணாவிட்டால் அவர் மனம் என்ன பாடுபடும்?" என்று கூறியது.

சிவகாமி சலனமுற்ற மனதை திடப்படுத்திக் கொண்டு, "பிக்ஷுகளே! இந்த அநாதைப் பெண் விஷயத்தில் இவ்வளவு சிரத்தை எடுத்துக் கொண்டதன் பொருட்டு மிக்க வந்தனம். ஆனால் அஜந்தா மலையின் அதிசயங்களைப் பார்க்க அடியாள் கொடுத்து வைத்தவள் அல்ல. இந்த

சீன தேசத்துப் பெரியார் சொன்ன ஒரு விஷயத்தை நான் ஒப்புக் கொள்கிறேன். என் சபதம் நிறைவேற வேண்டுமென்று இனி நான் ஆசைப்பட மாட்டேன். இந்த வாதாபி நகரமும் இதில் வாழும் ஜனங்களும் ஒரு துன்பமும் இன்றிச் செழித்து வாழட்டும். அவர்களுக்கு என்னால் எந்த விதமான கெடுதலும் நேர வேண்டாம். ஆனால் அடியாள் என் வாழ் நாளை இந்த வீட்டிலேயேதான் கழிப்பேன். எந்தக் காரணத்தை முன்னிட்டும் இந்த நகரை விட்டு வெளியேறுவதற்கு உடன்பட மாட்டேன்!" என்றாள்.

அத்தியாயம் 28

பவள வியாபாரி

நாகநந்தியும் சீன யாத்திரிகரும் போன பிறகு சிவகாமி சற்று நேரம் கற்சிலையாகச் சமைந்து உட்கார்ந்திருந்தாள்.

பழைய ஞாபகங்கள் ஒவ்வொன்றாக வந்து போய்க் கொண்டிருந்தன.

திருப்பாற்கடல் ஏரி உடைப்பெடுத்ததும் அந்த வெள்ளத்தில் தான் மூழ்கி இறப்பதற்கு இருந்ததும் மாமல்லர் நல்ல தருணத்தில் வந்து பானைத் தெப்பத்தில் தன்னை ஏற்றிக் கொண்டு காப்பாற்றியதும் நேற்று நடந்ததுபோல் நினைவு வந்தன.

அந்தப் பெரு வெள்ளத்தில் மூழ்கி உயிர் துறக்காத தான் இந்த வீட்டு முற்றத்திலிருந்த கிணற்றுத் தண்ணீரில் மூழ்கி உயிர்விடப் போவதை நினைத்தபோது, சிலையை ஒத்திருந்த அவளுடைய அழகிய முகத்தில் புன்னகை அரும்பியது.

கிணற்றிலே விழும்போது எப்படியிருக்கும்? விழுந்த பிற்பாடு எப்படியிருக்கும்? தண்ணீருக்குள் மூச்சடைத்துத் திணறும்போது தனக்கு என்னென்ன நினைவுகள் உண்டாகும்? மண்டபப்பட்டுக் கிராமத்துக் கருகில் பானைத் தெப்பம் மோதிக் கவிழ்ந்து தான் தண்ணீரில் மூழ்கியபோது தன்னை மாமல்லர் காப்பாற்றினாரே, அந்தச் சம்பவம் நினைவுக்கு வருமா?

இப்படி எண்ணியபோது வீதியில் "பவளம் வாங்கலையா பவளம்!" என்று கூவும் சத்தம் கேட்டது.

சிவகாமி சிறிதும் சம்பந்தமில்லாமல், "ஆமாம்; பவளமல்லி மலர்ந்துதான் இருக்கிறது! நான் கிணற்றில் விழுந்து இறந்த பிறகும் அது மலர்ந்து கொண்டுதானிருக்கும்!" என்று சொல்லிக் கொண்டாள்.

மறுபடியும் வீட்டு வாசலில் "பவளம் வாங்கலையா பவளம்?" என்று சத்தம் கேட்டது.

ஏனோ அந்தக் குரல் சிவகாமிக்கு மெய்சிலிர்ப்பை உண்டாக்கியது. ஏற்கெனவே எப்போதாவது கேட்ட குரலா, என்ன?

சிறிது நேரத்துக்கெல்லாம் பவள வியாபாரி வீட்டுக்குள்ளேயே வந்து, "அம்மா! பவளம் வேண்டுமா? அபூர்வமான உயர்ந்த பவளம்! அஜந்தா வர்ணத்தையும் தோற்கடிக்கும் பவளம்!" என்றான்.

'அஜந்தா' என்றதும் மறுபடியும் சிவகாமி திடுக்கிட்டு அந்த வியாபாரியின் முகத்தை — தாடியும் மீசையும் அடர்த்தியாய் வளர்ந்திருந்த முதிர்ந்த முகத்தை — உற்று நோக்கினாள். ஆ! அந்தக் கண்கள்! அன்போடும் பக்தியோடும் அவளை உற்றுப் பார்த்த அந்தக் கண்கள்!......

"அம்மா! என்னைத் தெரியவில்லையா?" என்று சொல்லிக் கொண்டே பவள வியாபாரி நெருங்கி வந்து உட்கார்ந்து தான் கொண்டு வந்த பவள மூட்டையை அவிழ்த்தான்.

குண்டோதரனுடைய குரல்தான் அது என்பதைச் சிவகாமி தெரிந்து கொண்டாள்.

இருந்தாலும், தன் கண்களையும் காதுகளையுமே நம்ப முடியாதவளாய், பிரமிப்புடன் நோக்கி, "யார்? குண்டோதரனா?" என்று கேட்டாள்.

"நான்தான், தேவி! அடியேனை மறந்து விட்டீர்களா?" என்றான் குண்டோதரன்.

"ஆமாம், அப்பனே! மறந்துதான் போயிற்று. நீங்கள் திரும்ப வருவ

இது ஒரு அறிவிப்பு: பிரகடனமல்ல

பிரகடனத்தின் நகல் ஒன்று மதராஸ் ஜாயிண்ட்ஸ்டாக் கம்பெனிகளது உதவி ரிஜிஸ்திராரிடம் தாக்கல் செய்யப் பட்டுள்ளது. இம் மூலதன வெளியீட்டிற்கு மத்திய சர்க்காரின் சம்மதம் பெறப்பட்டது. சர்க்கார் சம்மதம் அளிக்கும்போது, கம்பெனியின் எந்த திட்டத்தின் செல்வ நிடத்திற்கோ, கணக்குகளின் நேர்மைக்கோ அவை பற்றிய அபிப்பிராயங்களுக்கோ யாதொரு பொறுப்பும் ஏற்கவில்லை.

சந்தா ஜாபிதா 25-3-46-ந் தேதி காலை 11-மணிக்கு ஆரம்பிக்கப்பட்டு 30-3-46-ந் தேதி மூடப்படும்.

இந்தியா சிமெண்ட்ஸ் லிமிடெட்.

(1913-ம் வருஷத்திய இந்திய கம்பெனிகள் சட்டத்தின் கீழ் 1936-ம் வருஷத்திய சட்டத்தினால் திருத்தியபடி இணைக்கப்பட்டது. மெம்பர்களின் பொறுப்பு அளவையுள்ளது.)

ரிஜிஸ்டர்டு நெ. 133 / 1945 – 46 / 21 — 2 — 1946.

மூலதனம்:

அதிகாரம் பெற்ற மூலதனம்	...	ரூ.	2,00,00,000

இவை பிரிக்கப்பட்டுள்ள விதம்

ஒவ்வொன்றும் ரூ. 100 மதிப்புள்ள 5 சத விகிதம் (பிரிட்டிஷ் இந்திய வருமான வரி நீங்கலான) கியுமுலடிவ் பிரிபரன்ஸ் பங்குகள் — 50,000	—	ரூ.	50,00,000
ஒவ்வொன்றும் ரூ. 25 மதிப்புள்ள சாதாரண பங்குகள்—5,70,000		ரூ.	1,42,50,000
ஒவ்வொன்றும் ரூ. 5 மதிப்புள்ள டெபர்டு பங்குகள்—1,50,000		ரூ.	7,50,000
தற்போதைய வெளியீடு	...	ரூ.	1,00,00,000
ஒவ்வொன்றும் ரூ. 100 மதிப்புள்ள 5 சத விகிதம் (பிரிட்டிஷ் இந்திய வருமான வரி நீங்கலான) கியுமுலடிவ் பிரிபரன்ஸ் பங்குகள் 30,000-க்கு	—	ரூ.	30,00,000
ஒவ்வொன்றும் ரூ. 25 மதிப்புள்ள சாதாரண பங்குகள்—2,50,000		ரூ	62,50,000
ஒவ்வொன்றும் ரூ. 5 மதிப்புள்ள டெபர்டு பங்குகள்—1,50,000		ரூ.	7,50,000

பங்கு தொகை செலுத்தும் விவரம்:

பங்குகள்	விண்ணப்பத்துடன்	அலாட்மெண்ட் ஆனவுடன்
பிரிபரன்ஸ்	ரூ. 10.	ரூ. 15.

(பாக்கித் தொகை ரூ. 75-ம், 3 தவணைகளாக ரூ. 25 விதம் ஒவ்வொரு தவணைக்கும் 3 மாத இடை வெளியுடன் கோரப்படும்போது செலுத்த வேண்டும். முதல் தவணை செலுத்த வேண்டிய தேதி 30—9—1946. அவ்வப்பொழுது செலுத்தப்பட்ட தொகைகளின் பேரில் டிவிடெண்டுகள் கணக்கிடப்படும்.)

சாதாரணப் பங்குகள்	ரூ. 5.	ரூ. 5.

(பாக்கித் தொகை ரூ. 15-ம், தவணை 1-க்கு ரூ. 5 விதம் 3 மாதத்திற்கு ஒருமுறை மூன்று தவணைகளில் செலுத்தப்படவேண்டும். முதல் தவணை செலுத்தும் தேதி 30—6—46)

டெபர்ட் பங்குகள்	ரூ. 5.	—

மேற்படி வெளியீட்டில் கேமோராண்டம் ஆப் அசோஸியேஷனில் கையெழுத்திட்டவர்கள், கம்பெனியின் டைரக்டர்கள், அவரது நண்பர்கள், கீழ்க்கண்ட பங்குகளை எடுத்துக் கொண்டுள்ளனர்.

1.	1,50,000 டெபர்ட் பங்குகள்—ஒவ்வொன்றும் ரூ. 5 விதம்	ரூ.	7,50,000
2.	12,500 பிரிபரன்ஸ் பங்குகள்—ஒவ்வொன்றும் ரூ. 100 விதம்	ரூ.	12,50,000
3.	1,10,000 சாதாரணப் பங்குகள் ஒவ்வொன்றும் ரூ. 25 விதம்	ரூ.	27,50,000
	மொத்தம்	ரூ.	47,50,000

மேற்கண்ட எல்லாப் பங்குகள் முழுவதும் அலாட் செய்யப்பட்டபடியால் பாக்கியுள்ள கீழ்க்கண்ட பங்குகளுக்கு சந்தா கோரப்பட்டுள்ளது.

1.	17,500 பிரிபரன்ஸ் பங்குகள் — ரூ. 100 விதம்	...	ரூ.	17,50,000
2.	1,40,000 சாதாரண பங்குகள் — ரூ. 25 விதம்	...	ரூ.	35,00,000
	மொத்தம்		ரூ.	52,50,000

ஒரு பிரிபரன்ஸ் பங்குக்கு எட்டு சாதாரண பங்கு விதம் விண்ணப்பித்துக் கொண்டவர்களுக்கே சலுகை காட்டப்படும்.

டைரக்டர்கள் :

1. ஸர் ஜேம்ஸ் M. டோக், பசுமலை மதுரை, (சேர்மென்) டைரக்டர் : மெஸர்ஸ். A. & F. ஹார்வி லிமிடெட், தி. மதுரை மில்ஸ் கம்பெனி லிமிடெட், தூத்துக்குடி கம்பெனி லிமிடெட், பாண்டியன் இன்ஷ்யூரன்ஸ் கம்பெனி லிமிடெட், இண்டியன் மில்ஸ் ஸப்ளை கம்பெனி லிமிடெட், மெஸர்ஸ். ஹார்வீஸ் லிமிடெட், புனலூர் பேபர் மில்ஸ் லிமிடெட், காமரின் இன்வெஸ்ட்மெண்ட் & டிரேடிங் கம்பெனி லிமிடெட், விருதுபட்டி ஜின்னிங் லிமிடெட், ஆல்கலி & கெமிகல் கார்ப்பொரேஷன் ஆப் இண்டியா லிமிடெட்.
2. ஸ்ரீ சண்முக ராஜேஸ்வர சேதுபதி, ராமநாதபுரம் ராஜா, அரண்மனை, ராமநாதபுரம். டைரக்டர் ஸ்ரீ லக்ஷ்மி கார்ப்பொரேஷன் லிமிடெட்.
3. ஸ்ரீ ராஜபஹதூர் R. ராமநாதன் அய்யர், கள்ளிவாடி ஜமீந்தார், 49, ஜதீந்திரன் ரோடு, ராஷ்பிகாரி அவென்யூ போஸ்டு, கல்கத்தா மெம்பர் : லோகல் போர்டு ரிசர்வ் பாங்க் ஆப் இந்தியா. (தென் பிரதேசம்): டைரக்டர், அலுமினியம் இண்டஸ்டிரீஸ் லிமிடெட்.
4. ஸ்ரீ B. ராமச்சந்திர ரெட்டி, B. A. C. B. E. புச்சி ரெட்டி பாளையம், நெல்லூர் ஜில்லா. டைரக்டர் கமர்ஷியல் கிரெடிட் பாங்கி லிமிடெட், நாஷனல் கெமிகல்ஸ் லிமிடெட், நித்ய கல்யாண ஸிண்டிகேட் லிமிடெட், மதராஸ் வனஸ்பதி லிமிடெட்.
5. ஸ்ரீ C. S. லோகநாத முதலியார், 10, மவுண்டு ரோடு, மதராஸ், டைரக்டர் : தி. கம்பைண்ட் கன்ஸ்டிரக்ஷன் கார்ப்பொரேஷன் லிமிடெட், வான்கார்டு பயர் & ஜெனரல் இன்ஷ்யூரன்ஸ் கம்பெனி லிமிடெட், கந்தன் டெக்ஸ்டைல்ஸ் லிமிடெட், மதராஸ் மாட்ச் வொர்க்ஸ் லிமிடெட், நியூ இரேன் மார்கன் எஸ்டேட்ஸ் லிமிடெட்.
6. ஸ்ரீ P. சூர்யநாராயண, "கமலாலயா" நெ. 8, போக் ரோடு, தியாகராயநகர், மதராஸ் டைரக்டர் ஆஷர் டெக்ஸ்டைல்ஸ் லிட், வான்கார்டு இன்ஷ்யூரன்ஸ் கம்பெனி லிட். வான்கார்டு பயர் & ஜெனரல் இன்ஷ்யூரன்ஸ் கம்பெனி லிட், வெங்குளம் ரப்பர்ஸ் லிமிடெட்
7. ஸ்ரீ S. N. N. சங்கரலிங்கய்யர். 'பிஷப்ஸ் கார்டன்ஸ்' 4, கிரீன்வேஸ் ரோடு, அடையார். மதராஸ். மானேஜிங் டைரக்டர், இண்டோ கமர்ஷியல் பாங்கி லிமிடெட், யுநைடெ- ஷியல் இன்வெஸ்ட்மெண்டு டிரஸ்டு லிமிடெட், மெஸர்ஸ். எஸ்லென் லிமிடெட்.

ரிஜிஸ்டர்டு ஆபீஸ் :

107, அரண்மனைக்காரத் தெரு, ஜி. டி. மதராஸ்.

மானேஜிங் ஏஜெண்டுகள் : மெஸர்ஸ். எஸ்லென் லிமிடெட்,
107, அரண்மனைக்காரத் தெரு, ஜி. டி., மதராஸ்.

பாங்கர்கள் :

சார்டட் பாங்கி ஆப் இந்தியா, ஆஸ்திரேலியா & சைனா, மதராஸ்.
ஈஸ்டர்ன் பாங்கி லிமிடெட், மதராஸ்.
சென்டிரல் பாங்கி ஆப் இந்தியா லிமிடெட், மதராஸ், பம்பாய், கல்கத்தா, டில்லி கராச்சி, லாகூர்.
இந்தியன் பாங்கி லிமிடெட், மதராஸ், & பிராஞ்சுகள்.
இண்டோ கமர்ஷியல் பாங்கி லிமிடெட், மதராஸ் & பிராஞ்சுகள்.

சட்ட ஆலோசகர் : Mr. T. M. கஸ்தூரி, B. A. B. L. அட்வகேட்,
5, ஸ்மித் ரோட், மௌண்ட்ரோட், மதராஸ்.

ஆடிட்டர்கள் : மெஸர்ஸ். பிரம்மையா அண்டு கம்பெனி,
இன்கார்ப்பரேடட் அக்கவுண்டண்டுகள் & ரிஜிஸ்டர்ட் அக்கவுண்டண்ட்கள்,
ஆந்திரா இன்ஷ்யூரன்ஸ் பில்டிங், தம்புச்செட்டி தெரு, ஜி. டி. மதராஸ்.

மெஸர்ஸ். பி. எஸ். சுப்பிரமணிய அய்யர் அண்டு கோ.,
ரிஜிஸ்டர்ட் அக்கவுண்டண்ட்ஸ் அண்டு ஆடிட்டர்ஸ். நெ. 30, லிங்கச்செட்டி தெரு, ஜி. டி. மதராஸ்.

கன்ஸல்டிங் எஞ்சினியர்கள் : மெஸர்ஸ் E. கிருஸ்டென்ஸன் எஞ்சினியர்ஸ்
ஸில்வர் பாயில், கம்பாலாஹில், காமாடியாரோட், பம்பாய்.

மதராஸ் புரோக்கர்கள் :

மெஸர்ஸ். டலால் அண்டு கம்பெனி நாஷனல் இன்ஷ்யூரன்ஸ் பில்டிங்.
மெஸர்ஸ். கோதாரி அண்டு ஸன்ஸ் 108, அரண்மனைக்காரத் தெரு.
மெஸர்ஸ். ஸ்வஸ்திக் அண்டு கோ., 106, அரண்மனைக்காரத் தெரு.
மெஸர்ஸ். பாடர்ஸன் அண்டு கோ., 22, எரபாலு செட்டி தெரு.
மெஸர்ஸ். வி. எஸ். கிருஷ்ணசாமி அண்டு கோ., 310—311, லிங்கச் செட்டி தெரு.
மெஸர்ஸ். சாம்ஸன் அண்டு கோ., வடக்கு பீச் ரோடு.
மெஸர்ஸ். ட்ரோஜன் அண்டு கம்பெனி, 13/14, செக்கண்ட் லேன் பீச்.

(மதராஸ் ஸ்டாக் எக்சேஞ்ச் அஸோஸியேஷன் லிமிடெட் மெம்பர்கள்.)

பம்பாய் :

மெஸர்ஸ். J. R. மோதிஷா அண்டு கம்பெனி, ஷேர் அண்டு ஸ்டாக் புரோக்கர் அப்போலோ தெரு, போர்ட், பம்பாய்.
மெஸர்ஸ். R. R. தாபர் அண்டு கம்பெனி, ஷேர் அண்டு ஸ்டாக் புரோக்கர்ஸ், டலால் தெரு, போர்ட், பம்பாய்.
(பம்பாய் நேடிவ் ஸ்டாக் அண்டு ஷேர் புரோக்கர்ஸ் அஸோஸியேஷன் மெம்பர்கள்.)

கல்கத்தா: மெஸர்ஸ். கோவிந்த தாஸ் பட்டர்

ஸ்டாக் அண்டு ஷேர் புரோக்கர்ஸ், 8, லியான்ஸ் ரேஞ்சு, கல்கத்தா.
(கல்கத்தா ஸ்டாக் எக்ஸ்சேஞ்ச் அஸோஸியேஷன் லிமிடெட் மெம்பர்.)

நோக்கங்கள் :

பொதுவாக, கம்பெனியின் மெமோராண்டம் ஆப் அஸோஸியேஷனில் கண்டுள்ள காரியங்களை நிறைவேற்றவும் குறிப்பாக தென்னிந்தியாவில் ஒரு பெரிய சிமெண்ட் தொழிற்சாலையை நிர்மாணித்து சிமெண்டு முதலிய பொருள்கள் தயாரித்து வியாபாரம் செய்வதற்காகவும் இக்கம்பெனி ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

எதிர்காலம் :

யுத்தத்திற்குப் பிந்திய முன்னேற்றத் திட்டங்களுள், இந்தியா கவர்ன்மெண்டாராலும் மாகாண கவர்ன்மெண்டாராலும் சிமெண்ட் தயாரிப்புத் தொழில் மிகவும் முக்கியமானதாகக் கருதப்பட்டிருக்கிறது. கைத்தொழில் நிர்மாணத்தில் முதல் அங்கமாகப் பிரகாசிக்கும் இந்த சிமெண்ட் தொழில், இதர முன்னேற்றத் திட்டங்களுக்கும் அத்யாவசியமாயிருக்கின்றது. உதாரணமாக தேசிய ரஸ்தா நிர்மாணம், நீர்ப்பாசன அணைக்கட்டுகள், ஹைட்ரோ எலக்டிரிக் ஒர்க்ஸ், கைத்தொழில் முன்னேற்றம், வீடுகள் கட்டும் திட்டங்கள், பாடசாலைகள், ஆஸ்பத்திரிகள் கட்டுதல் முதலிய பல நிர்மாண வேலைகளும் நடைபெறுவதற்கு சிமெண்டு தொழிலையே நம்பியிருக்கின்றன. யுத்தகாலத்தில் கட்டிட வேலைகள் நடைபெறவேயில்லை. இத்தேவை ஒன்றுமட்டுமே சிமெண்டு தொழிலை பல வருஷங்கள் தழைத்தோங்கச் செய்யும்.

இந்தியா முழுவதற்கும் வருஷத்திற்கு 30 லட்சம் டன்கள் அதிகப்படி சிமெண்ட் தேவை என்று இந்திய சர்க்கார் விதித்திருப்பது நாட்டின் தற்போதைய முன்னேற்றத்தின் பிரகாரம் மிதமானதுதான். தற்போது நடைபெறும் சிமெண்டு கம்பெனிகளின் விஸ்தரிப்புத் திட்டப்படி 18½ லக்ஷம் டன்கள் அதிகப்படி சிமெண்ட் தயாரிக்கும். பாக்கியுள்ள 11½ லக்ஷம் டன்கள் தயாரிப்பு, யுத்தம் முடிந்த முதல் ஐந்து வருஷ காலத்திற்கு புதிய கம்பெனிகளால் நிறைவேற்றப்பட வேண்டும். இத் திட்டப்படி, திருநெல்வேலி ஜில்லாவில் வருஷத்திற்கு ஒரு லக்ஷம் டன்கள் சிமெண்டு தயாரிக்கக்கூடிய தொழிற்சாலை ஒன்றை நிர்மாணிப்பதற்கு இந்தியா சிமெண்ட்ஸ் லிமிடெட்டுக்கு இந்திய சர்க்கார் அனுமதியளித்துள்ளனர்.

இம் மாகாணத்தில் உள்ள நான்கு சிமெண்டு தொழிற்சாலைகளும் வருஷம் ஒன்றுக்கு 3,50,000 டன்கள் தயாரிக்கின்றன. இம் மாகாணத்தின் வருஷாந்திர தேவை வெகு சீக்கிரத்தில் 8,00,000 டன்களாக அதிகரிக்கு மென்று கணக்கிடப்பட்டுள்ளது. இது தவிர பர்மா, மலேயா, சிலோனிலுள்ள வெளி நாட்டு மார்க்கெட்டுகளும் அருகிலுள்ள இம் மாகாணத்திலிருந்தே ஏற்றுமதியை எதிர்பார்த்திருக்கின்றன. இப் பிரதேசங்களின் தேவை மிகவும் அதிகமாயிருக்கும். தூரதேசங்களிலிருந்தும் சிமெண்டு இறக்குமதி அநேகமாக நின்றுவிட்டது. ஆகவே வெளிநாட்டுப் போட்டி கிடையாது. எல்லா சந்தர்ப்பங்களும் இக்கம்பெனிக்கு அநுகூலமாகவே அமைந்திருக்கின்றன.

தொழிற்சாலை திருநெல்வேலி ஜில்லாவிலுள்ள திருநெல்வேலியில் நிர்மாணிக்கப்படும். கோயமுத்தூர், திருச்சிறாப்பள்ளிக்குத் தெற்கில் தற்போது வேறு தொழிற்சாலை கிடையாது. வருஷம் ஒன்றுக்கு ஒரு லக்ஷம் டன்கள் சிமெண்டு தயாரிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

சிமெண்டு தயாரிப்புக்குத் தேவையான முக்கிய மூலப்பொருள்கள், சுண்ணாம்புக் கல், களிமண், ஜிப்ஸம் முதலியவை யாகும். தொழிற்சாலைக்கு சமீபத்திலேயே சிறந்த ரகமான சுண்ணாம்பு கிடைக்கின்றது. அவற்றைப் பரீக்ஷித்ததில் ரசாயனங்கள் செய்வதற்குக்கூட உபயோகப்படும்படியாக வெகு சுத்தமாக இருக்கிறது. திருநெல்வேலி ஜில்லாவில் ராமையம்பட்டி, தாழையூத்துக்குப் பக்கத்தில் பல மைல்கள் விஸ்தீர்ணத்திற்கு பூமியிலெங்கும் சுண்ணாம்புக் கற்கள் அகப்படுகின்றன. மிக்க குறைவாகக் கணக்கிட்டாலும் இப்பிரதேசத்தை மட்டும் 40 லக்ஷம் டன்கள் அகப்படுகிறதென்று சொல்லலாம். இவற்றை வெட்டி எடுக்கும் குத்தகை பாத்தியதையை சென்னை சர்க்கார் இக் கம்பெனிக்கு அளித்துள்ளனர். களிமண் ஸ்தலத்திலேயே விசேஷமாகக் கிடைக்கிறது. சிமெண்ட் தயாரிப்பில் உயர்ந்த பக்ஷம் 5 சத விகிதம் மட்டுமே தேவையான ஜிப்ஸம் திருச்சிறாப்பள்ளியில் ஏராளமாகக் கிடைக்கின்றது. தேவையான அளவு நிலக்கரி அல்லது ஆயில் அருகிலுள்ள தூத்துக்குடி துறைமுகத்தின் மூலம் வரவழைத்துக் கொள்ளலாம். தொழிலாளிகளும் ஏராளமாகவும், மலிவாகவும் கிடைப்பர். தண்ணீர் வேண்டிய அளவு கிடைக்கும். மின்சார சக்தி பாபநாசம் ஹைட்ரோ எலக்டிரிக் பிளாண்டிலிருந்து தருவித்துக் கொள்ளலாம்.

தேவையான மெஷினரி பிரபல வியாபாரிகளான மெஸர்ஸ். F. L. ஸ்மித் & கம்பெனி லிமிடெட்டாரால் சப்ளை செய்வதற்கு ஏற்பாடு செய்யப்படுகின்றன. அவர்கள் உலக முழுதும் 800 சிமெண்ட் தயாரிப்பு மெஷின்களை நிர்மாணித்துள்ளனர். இந் நாட்டிலும் ஏராளமான சிமெண்ட் மெஷின்கள் சப்ளை செய்தும், சிமெண்ட் தொழிற்சாலை நிர்மாணிக்க உதவி செய்து முள்ளனர். மேலும் அவர்களது பிரதிநிதிகளே இந்தியாவிற்கு வரவழைத்து முழு அளவு தயாரிக்கும் வரையில் தொழிற்சாலையை நடத்தி வைக்கவும், நமது எஞ்சினியர்களும் கெமிஸ்டுகளும் வெளி நாட்டில் சிமெண்ட் எஞ்சினியரிங் டெக்னாலஜி பயிற்சி பெறவும் உதவியளிப்பதாக ஒப்புக் கொண்டுள்ளனர். உபயோகிக்கப்படும் மூலப் பொருள்களுக்குத் தகுந்தவாறு மெஷின்களும் அமைக்கப்படும். இதற்காக மூலப் பொருள்களின் மாதிரிகளை ஐரோப்பாவுக்கு விமானத்தில் அனுப்பியிருக்கிறார்கள்.

பஞ்சாப் சிமெண்ட் ஒர்க்ஸிலும், அசோஸியேடட் சிமெண்ட் கம்பெனி லிமிடெட்டிலும் ஊழியம் புரிந்து இந்நாட்டு சிமெண்டு தொழிலில் மிகுந்த அனுபவம் பெற்ற மிஸ்டர் E. கிளிஸ்டென்ஸன் இக் கம்பெனியின் ஆலோசனை எஞ்சினியராக ஊழியம் புரிவது குறிப்பிடத் தக்கது.

தயாரிப்புச் செலவு லாபங்களைப் பற்றி தற்போது சரியான புள்ளி விவரங்கள் குறிப்பிட முடியாது. எனினும் கம்பெனிக்குக் கிடைத்துள்ள ஏராளமான சௌகரியங்களை—உதாரணமாக, சிறந்த சகாயமான மூலப் பொருள்கள், மலிவான ஹைட்ரோ எலக்ட்ரிக் பவர், அருகிலுள்ள தேவை மிகுந்த வெளிநாட்டு மார்க்கெட்டுகள், சிறந்த டெக்னிகல் ஆலோசனை, மிகச் சிறந்த நவீன யந்திரங்கள்—இவைகளைக் கருதுங்கால் பங்குதாரர்களுக்கு அவரது முதலீட்டுக்கு வெகுவான பயனும், கம்பெனிக்கு நல்ல லாபமும் கிடைக்குமென்றே டைரக்டர்கள் நம்புகின்றனர்.

நிர்வாகம் :

கம்பெனியின் நிர்வாகம் மெஸர்ஸ். எஸ்ஸென் லிமிடெட்டாரால் கீழ்க்கண்ட நிபந்தனைகளின்படியும், குறிப்பாக 4-3-46-ல் இட்ட ஒப்பந்தத்தில் விவரிக்கப்பட்டபடியும் ஏற்றுக் கொள்ளப்படும்.

1. ஒப்பந்த காலம் 20 வருஷங்கள்.
2. மாதாந்திர ஆபீஸ் அலவன்ஸ் ரூ. 2,500.
3. கம்பெனியின் வருஷாந்திர நிகர லாபத்தில் 10 % கமிஷன். இது விஷயமாக நிகர லாபம் என்பது 1913-ம் வருஷத்திய இந்தியக் கம்பெனிகள் சட்டம் செக்ஷன் 87-சி (3)ல் விவரிக்கப்பட்டுள்ளபடி அதிக லாப வரியை கழிக்காதபடி யுள்ள லாபம்.

இண்டோ கமர்ஷியல் பாங்கியின் மானேஜிங் டைரக்டரும், இக் கம்பெனியை ஆரம்பித்தவருமான ஸ்ரீ எஸ். என். என். சங்கரலிங்கய்யர், மானேஜிங் ஏஜென்ஸி ஸ்தாபனத்தின் மானேஜிங் டைரக்டராவார். வியாபாரத்தில் அவரது அனுபவமும் பாங்கர் என்ற முறையில் அவரது கியாதியும் இக் கம்பெனிக்கு வெகுவாகப் பயன்படும்.

அலாட்மெண்டு :

எந்த பங்கு விண்ணப்பத்தையும் காரணம் கூறாமல் நிராகரிக்க டைரக்டர்களுக்கு உரிமை யுண்டு.

டைரக்டர்கள் உத்தேசிக்கும் வரையில் எல்லா பங்குகளையும் அல்லது எந்த அளவு பங்குகளையும் அலாட் செய்வதற்கு அவர்களுக்கு உரிமை யுண்டு.

பங்கு விண்ணப்பம் :

பங்கு விண்ணப்பங்கள், பிரகடனத்துடன் இணைந்துள்ள விண்ணப்ப பாரத்தில் அல்லது அதைப்போன்ற வேறு பாரத்தில் எழுதி விண்ணப்பத்துடன் செலுத்த வேண்டிய தொகையுடன் கம்பெனியின் ரிஜிஸ்டர்ட் ஆபீஸிற்கு அல்லது கம்பெனியின் புரோக்கர்கள் யாருக்காவது, அல்லது கம்பெனியின் பாங்கர்கள் யாருக்காவது அனுப்பப்படவேண்டும். மதராஸ், பம்பாய், கல்கத்தா முதலிய ஸ்டேஷன்கள் தவிர இதர ஊர்களில் வசூலாகக்கூடிய செக்குகளில் வசூல் செய்யும் கட்டணமும் சேர்த்தனுப்ப வேண்டும்.

பிரகடனத்தின் நகல்கள், விண்ணப்ப பாரங்கள் முதலியன கம்பெனியின் ரிஜிஸ்டர்ட் ஆபீஸிலாவது, அல்லது கம்பெனியின் எந்த புரோக்கர்கள் அல்லது பாங்கர்களிடமும் கிடைக்கும்.

(sd) J. M. டோக் (sd) C. S. லோகநாதன்
" ராஜா ஸ்ரீ ஷண்முக ராஜேஸ்வர சேதுபதி " P. சூர்யநாராயண
" S. N. N. சங்கரலிங்கய்யர்
" R. ராம்நாத் அய்யர் " B. ராமச்சந்திர ரெட்டி.

மதராஸ்
4—3—1946

தாகச் சொல்லிவிட்டுப் போய் வருஷம் கொஞ்சமாக ஆகவில்லையே?'' என்றாள் சிவகாமி சிறிது எரிச்சலுடன்.

"அம்மா! வெறுமனே திரும்பி வந்தால் போதுமா? தங்களுடைய சபதத்தை நிறைவேற்றுவதற்கு ஆயத்தமாய் வர வேண்டாமா?'' என்றான் குண்டோதரன்.

"ஆகா! சபதம்! பாழும் சபதம்!'' என்றாள் சிவகாமி. குண்டோதரனைப் பார்த்து, "சபதத்துக்கு நான் ஒரு முழுக்குப் போட்டு விட்டேன், குண்டோதரா!'' என்றாள்.

குண்டோதரன் விஷயம் விளங்காதவனைப் போல் வெறித்துப் பார்த்து, "தேவி! என்ன சொல்கிறீர்கள்?'' என்று வினவினான்.

"வேறு ஒன்றுமில்லை, அப்பா! நான் செய்த சபதந்தானே? அதை நானே கை விட்டு விட்டேன்!''

"அப்படிச் சொல்ல வேண்டாம், தேவி! தாங்கள் செய்த சபதம் தமிழகமே செய்த சபதம். அதை நிறைவேற்றி வைப்பது எங்கள் எல்லாருக்கும் ஏற்பட்ட பொறுப்பு.''

"சபதத்தை நிறைவேற்றத்தான் நீ இந்த வேஷத்தில் வந்திருக்கிறாயா? அதற்காகத்தான் பவளம் கொண்டு வந்திருக்கிறாயா?'' என்று ஏளனப் புன்னகையுடன் சிவகாமி கேட்டாள்.

"தாயே! இராம தூதனாகிய அனுமான் சீதா தேவியிடம் வந்ததுபோல் நான் வந்திருக்கிறேன். இராமபிரான் பின்னால் பெரிய சேனா சமுத்திரத்துடன் வரப் போகிறார்!'' என்றான்.

சிவகாமியின் தேகம் உணர்ச்சி மிகுதியினால் நடுங்கிற்று. ஆகா! ஒன்பது வருஷம் காத்திருந்தது உண்மையிலேயே பயனுள்ளதாகப் போகிறதா? மாமல்லர் தன்னை அழைத்துப் போக வரப் போகிறாரா? தன்னை விழுங்கி ஏப்பம் விடலாமென்று எண்ணியிருந்த முற்றத்துக் கிணறு ஏமாற்றமடையப் போகிறதா?

"ஆம், தேவி! தென்னாடு இதுவரையில் என்றும் கண்டிராத மகத்தான பல்லவ சைன்யம் ஆயத்தமாகியிருக்கிறது. அந்த சைன்யத்தின் முன்னணியில் நின்று மாமல்ல சக்கரவர்த்தியும் சேனாபதி பரஞ்சோதியும் வரப் போகிறார்கள்!'' என்று குண்டோதரன் தொடர்ந்து சொன்னான்.

"என்ன, மாமல்ல சக்கரவர்த்தியா?'' என்று சிவகாமி திடுக்கிட்டுக் கேட்டாள்.

"மன்னிக்க வேண்டும், அம்மா! தாங்கள் திடுக்கிடும்படி செய்து விட்டேன். மாமல்ல பிரபுதான் இப்போது பல்லவ சாம்ராஜ்யத்தின் சக்கரவர்த்தி. மகேந்திர பல்லவர் கைலாசவாசியாகிப் பல ஆண்டுகள் சென்று விட்டன!''

சிவகாமியின் கண்களிலிருந்து கலகலவென்று கண்ணீர் பொழிந்தது.

மகேந்திர பல்லவர்மீது பிற்காலத்தில் அவள் பல காரணங்களினால் கோபப்பட நேர்ந்தது உண்மைதான். ஆனாலும் குழந்தைப் பருவத்தில் அவர் மீது அவளுக்கு ஏற்பட்டிருந்த அபரிமிதமான அன்பும் பக்தியும் அழிந்து போய் விடவில்லை.

சிவகாமியின் துக்கத்தினிடையே குறுக்கிட மனமில்லாமல் குண்டோதரன் சற்று நேரம் சும்மா இருந்தான்.

சிவகாமி திடீரென்று விம்மலை நிறுத்தி, "குண்டோதரா! உன்னை ரொம்பவும் வேண்டிக் கொள்கிறேன். என்னால் இனி ஒரு கண நேரமும் இந்த நகரில் இருக்க முடியாது. இப்போதே என்னை அழைத்துக் கொண்டு போய்விடு!'' என்றாள்.

குண்டோதரன் திகைத்து நிற்பதைப் பார்த்து விட்டு, "என்ன யோசிக்கிறாய்? அதற்கு வசதியும் இப்போது நேர்ந்திருக்கிறது. புலிகேசி, கள்ள பிக்ஷு எல்லாம் இன்னும் இரண்டு நாளில் அஜந்தாவுக்குப் போகிறார்களாம். இப்போதெல்லாம் இங்கே கட்டுக்காவல் ஒன்றும் அதிகமாகக் கிடையாது. சுலபமாகத் தப்பித்துக் கொண்டு போகலாம். அப்படி என்னை அழைத்துப் போக உனக்கு இஷ்டமில்லாவிட்டால், இந்த வீட்டுக் கொல்லை முற்றத்தில் பவளமல்லிச் செடிக் கருகில் ஆழமான கிணறு ஒன்று இருக்கிறது. என மேல் கருணை வைத்து அதில் என்னைத் தள்ளி விட்டுப் போய் விடு!''............ இவ்விதம் சொல்லி விட்டுச் சிவகாமி மீண்டும் விம்மத் தொடங்கினாள்.

வானசஞ்சாரம்

இசைத்தேவி

ரேடியோவில், துறையூர் ராஜகோபால சர்மாவின் கானம் என்றால் ஒரே நாத மழை என்று சொல்லலாம். அதிலும் ராகம், தானம், பல்லவிக் கச்சேரி யென்றால் கேட்க வேண்டுமா? மணி நாதம் போன்ற கனிப்பான சாரீரத்தில் அரிய சாதகமும், கற்பனையும் கொண்டு ஷண்முகப்ரியா ராகத்தை மூன்று ஸ்தாயிகளிலும் தாராளமாய் விட்டு ஆலாபனை செய்து, தானமும் பாடி, 'மதுஸூதனு முராரே' என்ற பல்லவியை மூன்று காலத்திலும் பாடினர். அவருக்கு அமைந்த பக்க வாத்யங்களின் எண்ணிக்கையே விசேஷம். வயலின், மிருதங்கம், டோலக், கஞ்சிரா, தபலா, கடம், குட்டிக் கிண்கிணி, ஆக சுருதி வாத்யம் தவிர ஏழு. சில சமயம் இவையெல்லாம் சேர்ந்து வாசித்த அமர்க்களத்திலே கூடப் பாடகரின் சாரீரம் அமுங்கி விடாது கணீரென்று கேட்டது அதிலும் விசேஷம்.

7வ. திருச்சியிலிருந்து கேட்ட கே. ஆர். குமாரஸ்வாமியின் கச்சேரி சென்ற வாரத்திய முதல் தர வகைகளில் ஒன்று. நயமாய் இழையும் சாரீரம்; நாலாக்கான வழி: பாடினவை யெல்லாம் நற்சொரூபங்கள். நவரசகன்னடா, ஜனரஞ்சனி, பூர்வி கல்யாணி, பல்லவி ராகமாம் ஷண்முகப்ரியா இவை அரிய வனப்புடன் இலங்கின. இறுதி ராகமாலிகையும் அப்படியே. 'தேவி மீனாக்ஷி'யில், நிரவல் ஸ்வரங்களும் 'உன் தரிசனம் கிடைக்குமோ' என்ற பல்லவியும் வசீகரமாயிருந்தன.

8வ. சென்னையில் தேவகோட்டை நாராயணய்யங்காரின் வீணைக் கச்சேரி உயர்ந்த ரகமாயிருந்தது. அவ்வாத்தியத்தை உன்னத முறையில் கையாளும் மிகச் சிலரில் அவர் ஒருவர். நாட்டக்குறிஞ்சிக்குப் பின் 'ராக பஞ்சரம்' என்ற அபூர்வ ராகத்தை வழங்கியது கவனத்தைக் கவர்ந்தது.

9வ. சென்னையில் கோட்டு வாத்தியக் கச்சேரி செய்த கே. எஸ். நாராயணய்யங்கார், அவ்வாத்தியத்தை அபூர்வ அழகுடன் கையாளுபவர். அன்று அவர் வாசிப்பில் கேட்டவரை ஆனந்தபைரவி, பூர்விகல்யாணி ராகங்களில் வனப்புக் கண்டது. ஆனால் பெரும்பாலும் ராகங்களிலும் உருப்படிகளிலும் அவருக்குப் பக்க வாத்யமாய் அமைந்த வயலின், தன் ஸ்தானத்தை அறியாது, தொட்ட விடமெல்லாம் கூடவே வாசித்துக் கோட்டு வாத்திய நாதம் காதில் விழாமல் செய்துவிட்டது.

எஸ். சோமசுந்தரம் பாட்டு என்றாலே பிர்க்கா மழையில் கேட்போரை களைக்கச் செய்யும் கச்சேரி எனலாம். 10வ. சென்னையில் கேட்ட அவர் பாட்டு அப்படியே யிருந்தது. அவ்வாறு பொழியும் பிர்க்காவிலும், தோஷமில்லாத தெளிவு இருப்பதால்தான் ரஸிக்க முடிகிறது. தோடி, பேகடா, ஷண்முகப்ரியா, பிம்பளாஸ் என்று ராகங்களையும் உருப்படிகளையும் அலட்சியமாய் வாரி வீசினர்.

6வ. சென்னையில் ஏ. ஆர். தேசிகரின் பாட்டும் குறிப்பிடத்தக்கது. கன சாரீரத்தில் ஆங்காங்கே நயம் கொடுத்து, யதுகுலகாம்போதி, கல்யாணி, உசேனி, ராகங்களையும் உருப்படிகளையும் திறம்பட வழங்கினர்.

8வ. சென்னையில் கங்காபாய் சுப்ரமணியத்தின் இனிய குரலிலிருந்து வந்த, சங்கராபரணமும், 'தூக்கிய திருவடி' உருப்படியும் தேர்ந்தியாயிருந்தன.

9வ. திருச்சியில் திருநெல்வேலி கே. சங்கரன் பிள்ளை கன சாரீரத்தில் ஆரபியுடன், நாடகப்ரியா என்ற 10-வது மேள அபூர்வ ராகத்தை வழங்கியது மெச்சத் தக்கது.

அன்று திருச்சியில் ஸ்வாமிமலை கல்யாண சுந்தர தேசிகர், கனிப்பான குரலில் பிர்க்காப் பொழிவுடன் சங்கராபரணம், கரஹரப்ரியா, ஹிம்மேந்திரமத்யம் ராகங்களைத் திறம்பட வழங்கினர்.

அன்று சென்னையில் பாடிய மன்னார்குடி சாம்பசிவனின் அடாணா, வாசஸ்பதி ராகங்கள் வளைவு குழைவுகளுடன் வனப்பாயிருந்தன.

என்ன சிருங்காரம்!



ஸ்ரீ
கட்டாவ் மக்கன்ஜி
ஸ்பின்னிங் & வீவிங்
கோ. லிட்..

கட்டாவ்
வாயில்கள்
அச்சு, சாயம், மெர்ஸரைஸ் செய்யப்பட்டது

மில்: [illegible], பம்பாய்
ஆபீஸ்: [illegible], கோட்டை, பம்பாய்

சோதனை

விந்தன்

"ராஜா!"

"என், அப்பா!"

"எதிர் வீட்டு ராதையைப் பார்த்தாயா?"

"இதென்ன, அப்பா! உங்களுக்கு வேறு வேலை ஒன்றுமில்லையா? எப்பொழுது பார்த்தாலும் இவளைப் பார்த்தாயா, அவளைப் பார்த்தாயா என்று என்னைக் கேட்டுக் கொண்டே இருப்பதுதானா?"

"அதற்கில்லை, ராஜா!......"

"எதற்கில்லை?"

"அந்தப் பெண் பொழுது விடிந்து எத்தனை தரம் நம் வீட்டுக்கு வந்து வந்து போகிறாள், பார்த்தாயா?"

"வந்தால் என்ன, அப்பா? அவள் ஏதோ காரியமாகத்தானே வந்துவிட்டுப் போகிறாள்?"

"என்ன காரியம்?"

"உங்களுக்குத் தெரியாதா? அவள்தான் சொன்னாளே, 'அப்பா உங்களைக் கேட்டு 'ஹிந்து' பத்திரிகையைக் கொஞ்சம் இரவலாக வாங்கிவரச் சொன்னார்!' என்று."

"உனக்கு உண்மை தெரியாது, ராஜா! தெரிந்தால் இப்படியெல்லாம் என்னைக் கேட்கமாட்டாய்."

"என்ன அப்பா, உண்மை?—பிரமாதமான உண்மை?"

"சொல்கிறேன் கேள், ராஜா! இன்று காலை நீ இங்கே இருக்கும் வரைதான் அந்தப் பெண் வந்துகொண்டிருந்தாள். நீ வெளியே போனாயோ இல்லையோ, அவளைக் காணவேயில்லை. கடைசியில், 'என்னடா, பெரிய மனிதராச்சே!' என்று நானே பத்திரிகையை எடுத்துக் கொண்டு போனேன். அவளுடைய அப்பா வராந்தாவில் உலாவிக் கொண்டிருந்தார். அவரிடம் பத்திரிகையை நீட்டி, 'நீங்கள் கேட்டீர்களாமே?' என்றேன். அவர் 'இல்லையே!' என்றார். எனக்குத் தூக்கி வாரிப் போட்டது. 'ஓஹோ! ஞாபகமில்லை; வேறே யாரோ கேட்டனுப்பினார்களாக்கும்!' என்று சொல்லி மழுப்பி விட்டு வந்தேன்!—எப்படியிருக்கிறது, கதை?—நானும் பார்க்கிறேன், எப்பொழுது பார்த்தாலும் அந்தப் பெண்ணுக்கு உன் மேலேயேதான் கண்! இப்படித்தான் தினசரி ஏதாவது ஒரு ஜோலி வைத்துக் கொண்டு, அவன் நீ இருக்கிற சமயமாகப் பார்த்து இங்கே அடிக்கடி வந்து விட்டுப் போகிறாள்!......"

"இருக்காது, அப்பா!......"

"இல்லை, ராஜா! என்னுடைய கல்யாணத்திற்கு முன் உன்னுடைய அம்மா கூட......"

இந்தச் சமயத்தில், அதுவரை அங்கே உட்கார்ந்திருந்த அவருடைய சம்சாரம், "ஆமாம், போங்கள்!" என்று சொல்லிக் கொண்டே 'வாக்-அவுட்' செய்து விட்டாள்!

அவரும் அதற்கு மேல் தம்முடைய 'காதல் நாடக'த்தைப் பற்றி விவரிக்காமல், "இதெல்லாம் எதற்காகச் சொல்கிறேன் தெரியுமா, ராஜா! நான் கண்ணை மூடுவதற்குள் உனக்கு எப்படியாவது கல்யாணத்தைப் பண்ணிப் பார்த்துவிட வேண்டும் என்ற ஒரே ஆசையினால்தான். நீயோ 'காதல் கல்யாணம்தான் பண்ணிக் கொள்வேன்' என்று ஒரே பிடிவாதமாயிருக்கிறாய். 'அப்படித்தான் செய்வோமே!' என்று 'யாரையாவது காதலிக்கிறாயா?' என்று கேட்டால், 'இல்லை' என்கிறாய்! இப்படியேயிருந்தால் என்னுடைய ஆசை எப்பொழுதுதான் நிறைவேறுகிறது, ராஜா! மேலும், காதல் என்றால் யாராவது உன்னைத் தேடி வந்து 'நான் உன்னைக் காதலிக்கிறேன்' என்று சொல்லவா போகிறார்கள்?"

"அப்பா! நீங்கள் இப்படியெல்லாம் சொன்னால் கடைசியில் எனக்குப் பைத்தியம் தான் பிடித்து விடும். நாலு நாவல்களைப் படித்து விட்டு, நின்றால் காதல், நினைத்தால் காதல், கண்டால் காதல், காணவிட்டால் காதல் என்று பிதற்றுபவன் நான் அல்ல. நான் சொல்லும் காதலுக்கும் நீங்கள் சொல்லும் காதலுக்கும் ரொம்ப ரொம்ப தூரம், அப்பா! என்னுடைய காதலி......"

"சொல்லு ராஜா! எதற்கு வெட்கம்? நானேதான் வெட்கத்தை விட்டு உன்னிடம் பேசத் தகாததையெல்லாம் பேசிக் கொண்டிருக்கிறேனே!"

"என்னுடைய காதலி, தாசி வீட்டுக்குப் போக ஆசை கொண்ட தனது நாயகனைத் தலைமேல் சுமந்து சென்ற நாயகியைப் போன்றவளாயிருக்க வேண்டும்!"

"அடேயப்பா! அதெல்லாம் இந்தக் காலத்தில் நடக்குமா, ராஜா! எவளிடமாவது இப்பொழுது அப்படிச் சொன்னால் கூட அவள் சிரிப்பாளே!—சிரிப்போடு இல்லை; 'சரி, அப்படி ஆசை உங்களுக்கு வந்தால் அதை நான் நிறைவேற்றி வைக்கிறேன். அதே மாதிரி ஆசை எனக்

ரும் ஒரு வேளை வந்தால் நீங்களும் அதை நிறைவேற்றி வைப்பீர்களா?' என்று கேட்டாலும் கேட்பான்!......"

"அதென்னமோ அப்பா! நீங்கள் என்ன வேண்டுமானாலும் சொல்லுங்கள். எனக்கு ராதையைப் பிடிக்கவில்லை."

★

ரங்கநாதம் பிள்ளையின் ஏக புத்திரன் ராஜகோபாலன். பிறந்ததிலிருந்தே பிடிவாதத்தைத் துணையாகக் கொண்டு வளர்ந்தவன். அவனுடைய பிடிவாதத்திற்குப் பணமும் பாசமும் பக்கபலமாயிருந்தன. வழி வழியாகத் தாமும் தம்முடைய வம்ச பரம்பரையும் வாழ்ந்து வருவதுபோல் ராஜகோபாலனும் வாழவேண்டுமென்பதில் அடங்காத ஆசை கொண்டிருந்தார் ரங்கநாதம். வம்ச வழியை யொட்டி வராமல், அவன் எங்கே வழி தவறிவிடப் போகிறானோ என்று பயந்து, அல்லும் பகலும் அவனைப் பற்றியே சிந்தித்துக் கொண்டிருந்தார். இதுவரை அவர் எண்ணியபடியே அவன் பிறந்து வளர்ந்தாகி விட்டது. இப்பொழுது 'கல்யாணம் செய்து கொள்' என்றால், பையன் என்னவெல்லாமோ பிதற்றுகிறானே!

கடைசியில், இந்த விஷயத்தில் அவர் எப்படியோ ஒரு முடிவுக்கு வந்தார். அதன்படி, பிடிக்க வேண்டியவர்களைப் பிடித்து, கொடுக்க வேண்டியவர்களுக்குக் கொடுத்து, தம்முடைய பிள்ளைக்குச் சென்னை சர்க்கார் காரியாலயத்திலேயே ஒரு பெரிய உத்தியோகத்தைச் சம்பாதித்துக் கொடுத்தார். இதன் காரணமாக, அவன் தன்னுடைய அத்தையின் வீட்டில் தங்க நேர்ந்தது.

ரங்கநாதம் எதிர்பார்த்தபடியே எல்லாம் நடந்தாலும், ஒரே ஒரு விஷயத்தில் மட்டும் அவர் எதிர்பார்த்தபடி நடக்கவில்லை.

இத்தனைக்கும் அவருடைய தங்கையின் தவப் புதல்வியான உஷா, தினசரி எத்தனையோ விதமாகத் தன்னை அலங்கரித்துக் கொண்டு அவனுக்குக் காட்சி தந்தாள்; பேசாத பேச்செல்லாம் பேசினாள்; ஆடாத ஆட்டமெல்லாம் ஆடினாள்; பாடாத பாட்டெல்லாம் பாடினாள். ஆனாலும் என்ன, அவன் அவளுடைய உள்ளத்தின் அழகைக் கண்டு பிடிப்பதிலேயே கவனமாயிருந்தான்.

★

ஒரு நாள் மாலை ராஜகோபாலன் வீட்டுக்குத் திரும்பியபோது, வீடு வெறிச்சென்றிருந்தது. உஷா மட்டும் கூடத்தில் நின்று கொண்டிருந்தாள்.

"எங்கே யாரையும் காணவில்லை?" என்று கேட்டான் ராஜகோபாலன்.

"என்ன! என்னைக் கூடவா காணவில்லை?" என்று உஷா, இல்லாத பிரியுடன் தன்னைத்தானே தொட்டுப் பார்த்துக் கொண்டு சிரித்தாள்.

அவளுடைய சிரிப்பு ராஜகோபாலனுக்கு வெறுப்பை யளித்தது. அவன், "உன்னைக் காணுமென்ன? உன் அப்பாவையும் அம்மாவையும் காணோமே என்றுதான் கேட்டேன்!" என்றான்.

"அவர்கள் ஊருக்குப் போயிருக்கிறார்கள்.'

"எந்த ஊருக்கு?"

"திருநெல்வேலிக்கு!"

அதற்குமேல் ராஜகோபாலன் தன்னை ஒன்றும் கேட்டுத் தெரிந்து கொள்ளும்படி வைத்துக் கொள்ளவில்லை உஷா. அவளே



தன்பாட்டுக்குச் சொல்லிக் கொண்டு போனாள்:—

"அவர்கள் என் திருநெல்வேலிக்குப் போயிருக்கிறார்கள், தெரியுமா? என் அப்பாவின் சிநேகிதர் வீட்டுக் கல்யாணத்திற்கு?"

"எப்பொழுது வருவார்கள், தெரியுமா? இரண்டு நாள் கழித்து வருவார்கள்!"

"அவர்கள் என்ன சொல்லிவிட்டுப் போனார்கள், தெரியுமா? வேலைக்காரியிடம்

என்னைப் பார்த்துக் கொள்ளும்படி சொல்லி விட்டுப் போனார்கள்; என்னிடம் உங்களைப் பார்த்துக் கொள்ளும்படி சொல்லிவிட்டுப் போனார்கள்!......"

அதுவரை நின்றது நின்றபடி அவன் சொல்வதைக் கேட்டுக் கொண்டிருந்த ராஜகோபாலன் பொறுமையை இழந்தவனாய், "போதும், போதும்!" என்று சொல்லிக் கொண்டே கோட்டைக் கழற்றி



மாட்டிவிட்டுத் தன் அறைக்குள் சென்று உட்கார்ந்தான்.

காப்பியைக் கொண்டுவந்து அவனிடம் நீட்டினாள் உஷா. அதை வாங்கிக் குடித்து விட்டு, அவன் பேசாமல் ஏதோ ஒரு புத்தகத்தை எடுத்து வைத்துக்கொண்டு படிக்க ஆரம்பித்து விட்டான்.

காலிப் பாத்திரத்தை எடுத்துக்கொண்டு போன உஷா, சிறிது நேரத்திற்கெல்லாம் துள்ளிக் குதித்துக் கொண்டே திரும்பி வந்து, ராஜகோபாலனின் முன்னால் உட்கார்ந்தாள்.

அந்த நிலையில் அவளைக் கண்டதும், அவன் கையிலிருந்த புத்தகத்தை வீசி எறிந்துவிட்டு எழுந்தான்.

"தேவலையே! என்னைக் கண்டதும் எழுந்து கூட நிற்கிறீர்களே! என்னிடம் நீங்கள் இவ்வளவு மரியாதையாக நடந்து கொள்வீர்கள் என்று நான் எதிர்பார்க்கவே யில்லையே!" என்றாள் உஷா.

அவள் சொன்னதை அவன் அனுபவிக்கவில்லை. எழுந்த இடத்திலேயே இருந்த மேஜையின்மீது சிறிது நேரம் உட்கார்ந்து ஏதோ யோசித்தான். பிறகு, கோட்டை எடுத்து மீண்டும் மாட்டிக் கொண்டு வெளியே போய்விட்டான்.

வழியில் ஏனோ உஷாவின் காதலை நினைத்து கரைந்தது அவன் உள்ளம்.

அவன் வெளியே போன பிறகு, உஷாவின் உள்ளமும் வேதனை யடைந்தது. "அவனிடம் ஏன் நாம் விளையாடினோம்?" என்றுகூட அவள் நினைக்க ஆரம்பித்து விட்டாள்.

சிறிது நேரம் கழித்து ராஜகோபாலன் திரும்பி வந்தபோது, உஷா கண்ணீர் சிந்திக் கொண்டிருப்பதைக் கண்டான். அவன் மனம் பேதலித்து விட்டது. "ஏன் அழுகிறாய், உஷா?" என்று கேட்டு விடலாம்போல் அவனுக்குத் தோன்றிற்று.

இந்த மனப் போராட்டத்துக்கு மத்தியிலே அவள் அவனுக்குச் சாதம் பரிமாறிக் கொண்டிருந்தாள். அவன், "ஏன் அழுகிறாய்?" என்று அவளைக் கேட்க வேண்டுமென்றிருந்த கேள்வியையும் சாதத்தோடு சேர்த்து விழுங்கப் பார்த்தான்; முடியவில்லை. கடைசியில், கேட்டே விட்டான்.

"ஏன் அழுகிறாய்?"

"ஒன்று மில்லை!" என்று அப்பால் போய்விட்டாள் அவள்.

இந்த நிலையில், ரங்கநாதம் எதிர்பார்த்தபடி இருவரும் ஒருவரை யொருவர் விரும்பத்தான் விரும்பினர். இருந்தும், அவர்களுடைய காதலுக்கு இடையே ஏதோ ஒன்று இடையூறாக இருந்தது.

*

கோடை விடுமுறையின் போது கொடைக்கானலுக்குச் சென்ற சகவாசிகளில் ராஜகோபாலனும் ஒருவன். அவனுடைய பெற்றோரும் அவனுடன் சென்றிருந்தனர். உஷாவும், உஷாவின் பெற்றோரும் அவர்களுடன் செல்லவில்லை.

ஒரு நாள் ராஜகோபாலனின் தந்தையிடமிருந்து வந்த கடிதமும், கல்யாணப் பத்திரிகையும் உஷாவைத் தூக்கிவாரிப் போட்டன. அவள், 'சிரஞ்சீவி ராஜகோபாலனுக்கும், சௌபாக்கியவதி ராதைக்கும்' என்ற

வரியைப் படிக்கும் வரைதான் இந்த உலகத்தில் இருந்தாள். அதற்குப் பிறகு, அவள் என்றும் கண்டிராத ஓர் இருண்ட உலகத்தை நோக்கிப் பிரயாணம் செய்யலானாள்!

“என்ன, அம்மா! ஏன் அப்படி நிற்கிறாய்?” என்று அவளுடைய தந்தையின் குரல் கேட்டது.

அவள் மீண்டும் இந்த உலகத்திற்கு வந்தாள்!

அவள் கையிலிருந்த கல்யாணப் பத்திரிகை நழுவிக் கீழே விழுந்தது!

உஷாவின் தந்தை அதை எடுத்துப் படித்துப் பார்த்தார்.

“அவன் கிடக்கிறான்!” என்றார் அலட்சியமாக.

அப்புறம், அவருடைய கண்ணில் கல்யாணப் பத்திரிகையுடன் வந்த கடிதமும் பட்டது.

அதையும் எடுத்துப் பிரித்துப் படித்தார்.

கல்யாணம் கொடைக்கானலிலேயே நடக்கிறதென்றும், அதைச் சிறப்பாக நடத்தி வைப்பதற்குத் தகுந்த பந்து மித்திரர்கள் இல்லையென்றும், ஆகவே, இரண்டு நாள் முன்னதாகவே எல்லோரும் அவசியம் வந்துவிட வேண்டுமென்றும் அந்தக் கடிதத்தில் கண்டிருந்தது.

“ஆமாம்; இவன் கல்யாணத்திற்கு இரண்டு நாள் என்ன, இரண்டு மாதத்துக்கு முன்னாலேயே போயிருக்க வேண்டியதுதான்!” என்று தன்னுடைய தந்தை முணுமுணுத்துக் கொண்டது, உஷாவின் காதில் விழுந்தது.

“அப்பா!” என்றாள் அவள்.

“என்ன, அம்மா?” என்று கேட்டார் அவர்.

“அவர்கள் கேட்டுக் கொண்டிருக்கிறபடி நாம் எல்லோருமே கல்யாணத்திற்குப் போகத்தான் வேண்டும், அப்பா!”

“இதென்ன, அம்மா! உனக்குப் பைத்தியமா பிடித்திருக்கிறது?”

“அவருக்குப் பிடித்த பெண்ணை அவர் கல்யாணம் செய்து கொண்டால் அதற்காக நாம் ஏன் ஆத்திரப்பட வேண்டும்?”

“அந்த அயோக்கியனுக்காகவா இப்படிப் பரிந்து பேசுகிறாய்? — உன்னுடைய இஷ்டம் அதுவானால் நான் அதை ஆட்சேபிக்கவில்லை, அம்மா!”

அவ்வளவுதான்; இரண்டு நாளுக்கு மூன்று நாள் முன்னதாகவே எல்லோரும் கொடைக்கானலுக்குப் பிரயாணமாயினர்.

“நீங்கள் எங்கே வராமலே இருந்துவிடப் போகிறீர்களோ என்று பயந்து கொண்டிருந்தேன். நல்ல வேளை, வந்து விட்டீர்கள்!” என்று கூறி, அவர்களை வரவேற்று உபசரித்தார் ரங்கநாதம்.

கல்யாணத்துக்கு வேண்டிய ஏற்பாடுகளெல்லாம் பிரமாதமாக நடந்து கொண்டிருந்தன. ராஜகோபாலன் ‘ராஜா’ மாதிரியே இருந்தான். அவன் அங்குமிங்குமாக நடமாடுவதைப் பார்க்கும்போதெல்லாம் உஷாவை என்னவோ செய்தது.

★

மறுநாள் காலை கல்யாணம்.

அதற்கு முதல் நாள் அந்த ‘அயோக்கியன்’ உஷாவுடன் நேரில் பேசுவதற்கே வந்து விட்டான்!

“ஜாயினியின் புனர்ஜன்மம் நீதான்!” என்றான்.

அவள் ஒன்றும் பதில் சொல்லவில்லை.

“நான் வேறொரு பெண்ணைக் கல்யாணம் செய்து கொள்ளப் போகிறேன் என்று தெரிந்தும், நீ என்னுடைய கல்யாணத்திற்கு வந்திருக்கிறாயல்லவா?”

அவள் தலை கவிழ்ந்தபடி கண்ணீர் சிந்தினாள்.

அவள் முகவாய்க் கட்டையைத் தன் விரல்களால் லேசாகத் தொட்டு மெள்ள நிமிர்த்தினான் ராஜகோபாலன்.

அவனை ஏறிட்டுப் பார்த்தாள் அவள்.

“பைத்தியமே! ஏன் அழுகிறாய்?......’

அவ்வளவுதான்! — அவளுக்குக் ‘குபீ’ரென்று அழுகை வந்து விட்டது!

அந்த ‘அயோக்கியன்’ சிரித்தான்!

“அழாதே, அசடே! நாளைக்கு நான் மாலையிடப் போகும் மாதரசி நீதான்!” என்றான்.

அவள், அவசரம் அவசரமாகக் கண்களைத் துடைத்து விட்டுக் கொண்டு அவனை அண்ணாந்து பார்த்தாள். அப்போது படபடவென்று அடித்துக் கொண்ட அவளது கண்ணிமைகள், “இது நிஜந்தானா, இது நிஜந்தானா?” என்று ஓயாமல் அவனைக் கேட்டுக் கொண்டே இருப்பது போல் தோன்றிற்று!

“ஆமாம், உஷா! அவ்வளவும் ‘சோதனை’தான்; நீதான் இத்தனை நாளும் நான் தேடிக் கொண்டிருந்த காதலி!” என்று சொல்லும்போது, ஆசை மிகுதியால் அவனுடைய கை அவளை அணைக்கச் சென்றது

அவள் நாணிக் கண் புதைத்துச் சற்றே விலகிக் கொண்டாள்!



ஏழு பூனைகள்



ராஜி

சிங்க ராஜா சிம்மாஸனத்துக்கு வந்தது முதல் அதற்கு நிம்மதியே இல்லை. சதா சர்வ காலமும் சிங்க ராஜாவுக்குப் புகார்கள் வந்து கொண்டிருந்தன. கடிதங்கள் மூலமாக வந்த புகார்களைக் கூட அது அவ்வளவு கவனிக்கவில்லை. மிருகங்கள் கூட்டம் கூட்டமாக நேரில் வந்து ஏழு பூனைகளின் உபத்திரவத்தைச் சொல்லும் பொழுதுதான் அதற்கு மிகவும் கஷ்டமாக இருந்தது.

சிங்கம் என்ன செய்யும்? அது எவ்வளவோ முயற்சி செய்தும் அந்த ஏழு பூனைகளையும் பிடிக்க முடியவில்லை. பூனைகள் மிகவும் சாமர்த்தியம் வாய்ந்தவைகளாயிருந்தன. அவைகள் தைரியமாகக் காட்டிலுள்ள எல்லாப் பிராணிகளுடைய வீட்டிலும் நுழைந்து அங்கிருக்கும் சாமான்களை அரை நொடியில் எடுத்துக் கொண்டு வந்துவிடும். மேற்படி ஏழு பூனைகளும் எங்கு சென்றாலும் ஒன்றாகச் செல்லுமே தவிரத் தனியாகப் போகும் வழக்கமே இடையாது.

சிங்கராஜா தன் மந்திரிகள் ஏழு பேரையும் கூப்பிட்டுப் பூனைகளைப் பிடிக்க வேண்டிய முயற்சிகளைப் பற்றிப் பேசிற்று. அச் சமயத்தில் அந்த ஏழு பூனைகளும் ஏழு மந்திரிகளின் சட்டைப் பைகளிலிருந்து கீழே குதித்து ஓடவே மந்திரிகளுக்குத் தூக்கி வாரிப் போட்டது. "இந்தப் பொல்லாத பூனைகள் நாம் ரகசியமாகப் பேசியதை ஒளிந்து கேட்டிருக்க வேண்டும். ஆதலால் நாம் சேர்ந்து ஆலோசனை செய்தது பிரயோஜனமில்லை" என்று சொல்லிக் கொண்டே அரண்மனையை விட்டு அகன்றன.

மறுநாள் காலையில் ஒரு குரங்கு தண்டோரா போட்டுக் கொண்டு சென்றது. "காட்டில் கொள்ளை அடிக்கும் ஏழு பூனைகளையும் யார் பிடித்துத் தருகின்றார்களோ அவர்களுக்குச் சிங்க ராஜா விலை மதிக்க முடியாத மாணிக்கத்தை இனமாகக் கொடுப்பார். ஆனால், ஏழு பூனைகளையும் ஒன்றாகப் பிடிப்பவருக்குத் தான் இந்தப் பரிசு."

இந்தச் செய்தி காட்டுத் தீ போல் காடெங்கும் பரவிற்று. ஒவ்வொரு பிராணியும் எப்படியாவது விலை மதிக்க முடியாத அந்த மாணிக்கப் பரிசை அடைய வேண்டுமென்று ஆசை கொண்டன. ஊரிலுள்ள பிராணிகள், அரசாங்க மந்திரிகள் வேலை ஆட்கள் யாவும் பூனைகளைத் தேட ஆரம்பித்தன. இந்தச் செய்தியைக் கேட்ட சிங்கராஜாவின் மனைவி சிங்க ராணி "இதுதான் சரியான சமயம். நான் வெகு நாட்களாகக் கேட்டும் இந்த மாணிக்கத்தை என் புருஷன் எனக்கு கொடுக்க மாட்டேன் என்



கிறார். நான் எப்படியாவது இந்த ஏழு பூனைகளையும் பிடித்துக் கொடுத்தால் மாணிக்கத்தைப் பெறலாம்" என்று சொல்லிக் கொண்டே சந்தோஷத்துடன் வெளியே சென்றது.

ராணியும் பூனைகளைத் தேடப் புறப்பட்ட சமாசாரம் சிங்க ராஜாவுக்கு எட்டினவுடன் "அடாடா! இவர்கள் யாராவது இந்த ஏழு பூனைகளையும் பிடித்துவிட்டால் நான் அவர்களுக்கு மாணிக்கத்தை அல்லவா கொடுக்கும்படி நேரிடும்? நானும் வெளியில் போய் நானே இந்த ஏழு பூனைகளையும் கண்டு பிடித்துவிட்டால் மாணிக்கத்தை ஒருவருக்கும் கொடுக்காமலிருந்துவிடலாமல்லவா?" என்று சொல்லிக் கொண்டே அவசர அவசரமாக அரண்மனையை விட்டுக் கிளம்பிப் பூனைகளைத் தேடப் புறப்பட்டது.

அன்று முழுவதும் தேடியும் காட்டிலுள்ள மூலை முடுக்குகளிலெல்லாம் தேடியும் பூனைகளைக் கண்டு பிடிக்க முடியவில்லை. பூனைகள் காட்டில் இருந்தால் தானே அவைகளைக் கண்டு பிடிக்க முடியும்? அரண்மனை காலியாக இருக்கும் பொழுது ஏழு பூனைகளுக்கும் காட்டில் என்ன வேலை?

சிங்க ராஜா பூனைகளைத் தேடிவிட்டு அகப்படாமல் களைத்து அரண்மனைக்குத் திரும்பியவுடன் அதற்குத் தூக்கி வாரிப் போட்டது. ஏன் என்றால் அரண்மனை வாசற்கதவு திறக்கப்பட்டு எல்லா சாமான்களும் சின்னாபின்னமாகக் கிடந்தன. சிங்க ராஜாவுக்கு எதிரில் ஏழு பூனைகளும் "மியாவ் — மியாவ்" என்று கதறிக் கொண்டே ஓட ஆரம்பித்தன.

சிங்க ராஜாவுக்கு மயக்கம் உண்டாயிற்று. அயர்ந்து ஓர் சாய்வு நாற்காலியில் படுத்துக் கொண்டது. அப்பொழுது அரண்மனைக்குள் உச்சியில் உட்கார்ந்து கொண்டிருந்த ஏழு பூனைகளும் சிங்க ராஜாவைப் பார்த்துச் சிரித்தன. சிங்க ராஜாவுக்கு அவமானமாக இருந்தது. இருந்தாலும் ஏழு பூனைகளின் சாமர்த்தியத்தையும் மெச்சிக் கொண்டிருந்தது.

அச்சமயத்தில் ஏழு பூனைகளும் "சிங்க ராஜாவே! தங்களைச் சிரமப்படுத்தியதற்கு மன்னிக்க வேண்டும். எங்கள் ஏழு பேர்களையும் பிடித்துத் தருபவருக்கு மாணிக்கத்தைப் பரிசாகத் தருவதாகச் சொன்னீர்கள் அல்லவா? நாங்கள் ஏழு பேருமாகவே தங்கள் முன்னிலையில் வந்துவிட்டதால் அந்த மாணிக்கம் எங்களைச் சேர்ந்தது. இதோ பாருங்கள், தாங்கள் ஜாக்கிரதையாக வைத்துப் பூட்டிய மாணிக்கம்!" என்று மாணிக்கத்தைக் காண்பித்தன.

இதைப் பார்த்த சிங்க ராஜாவுக்குத் தன் கண்களையே நம்ப முடியவில்லை. "அடடா! என்னை ஏமாற்றி இந்த ஏழு பூனைகளும் மாணிக்கத்தை எடுத்துக் கொண்டு விட்டனவே? இதற்கு என்ன செய்வது?" என்று வருத்தமடைந்தது. ஆனால், அந்த ஏழு பூனைகளும் "இந்த மாணிக்கத்தால் எங்களுக்கு ஒரு பிரயோஜனமும் இல்லை. ஆகையால் தாங்களே வைத்துக் கொள்ளுங்கள்" என்று மாணிக்கத்தைத் திருப்பிச் சிங்க ராஜாவிடமே கொடுத்து விட்டன.

சிங்க ராஜா மிகவும் சந்தோஷம் கொண்டு ஏழு பூனைகளையும் தனக்கு மந்திரிகளாக நியமித்துக் கொண்டது.

சரியான யோசனை!



பெரியவர் (திருடனிடம்):— இந்தப் பக்கத்திலே திருட்டுப் பயம் அதிகம்னு கேள்வி. இராக்காலத்திலே இப்படி நகையும் நட்டையும் எடுத்துக்கொண்டு தனியாகப் போறது அவ்வளவு உசிதமில்லே.


DROPS
குழந்தைகளுக்கு அதன்மீது பிராணன்
குழந்தைகளுக்கு மிட்டா யென்றால் பிராணன் — அதுவும் அச்வினி மிட்டாய்கள், டாப்பிகள் என்றால் கேட்கவே வேண்டாம்! ஏனெனில், இந்த மிட்டாய்களுக்கு யாராலும் தவிர்க்க முடியாத ஓர் அலாதி நேர்த்தியும், ருசியுமிருக்கத்தான் செய்கிறது. அன்றியும், குழந்தைகளுக்குக் குணகரமான க்ளூகோஸ் இவற்றில் அடங்கியிருக்கிறது. வெகு சீக்கிரம், பூராவும் சுயமாகவே இயக்கப் பெற்ற புதிய இயந்திரங்கள் வேலை துவக்கி வரும். அப்பொழுது, குழந்தைகளினுடையவும் பெரியவர்களினுடையவும் ருசியை ஒன்று போலக் கவரும் அற்புதமற்புதமான இனிப்பு மிட்டாய்கள் கிடைக்கலாகும்!
அச்வினி
டாப்பிகள் (Toffees) — காரமல்கள் — அதிகப்படி காரமான பெப்பர்மின்டுகள்—பழவகைகளால் செய்யப் பட்ட பெப்பர்மின்டுகள் — (Cough Lozenges) — (Acid Drops) — (Icing Sugar)
ஸ்ரீ மகாலக்ஷ்மி ஷுகர் மில்ஸ் கம்பெனி லிமிடெட்
ஹமீரா, கபுர்த்தலா ஸ்டேட்.
பென்னாக். ஜெபக்கா பிரதர்ஸ் (இந்தியா) லிமிடெட்.,
21, லிங்க செட்டித் தெரு : தபால் பெட்டி 91, மதராஸ்.
தபால் பெட்டி 47, கோச்சி

MA. 4638.

சந்நியாசினி

கி. ஸந்தானம்

வாசலில் நின்று கொண்டு "வைஷ்ணவ ஜனதோ" என்கிற பாட்டை அவள் கம்பீரமாகப் பாடிக்கொண்டிருந்தாள். அவள் கையில் வைத்திருந்த சிறிய தம்புராவின் சுருதியோடு இழைந்து அவள் இனிய சாரீரம் நாத வெள்ளத்தைப் பரப்பியது.

இந்திராவுக்குப் பாட்டென்றாலே உயிர். அதுவும் மகாத்மாவுக்கு மிகவும் ப்ரீதியான இந்த 'வைஷ்ணவ ஜனதோ' என்கிற பாட்டில் அலாதி பிரேமை. இந்தப் பாட்டைப் பிச்சைக்காரர்கள் பாடினால் கூடக் குழலோசை கேட்ட கோபியர்கள்போல் மனதைப் பறிகொடுத்து விடுவாள். தானக்கட்டோடு உருக்கமாயும் கம்பீரமாயும் பாடிய இப் பாட்டு காற்றில் இலேசாக மிதந்து வந்து சமையல் உள்ளில் சாதம் பரிமாறிக்கொண்டிருந்த இந்திராவின் காதில் விழுந்தது. அவ்வளவுதான்; அவள் அப்படியே வாசல் பக்கம் ஓடி வந்து விட்டாள். அவள் உதடுகள் இலேசா. அந்த மோகனப் பாட்டை முணு முணுத்துக் கொண்டிருந்தன.

வாசலில் அவள் கண்ட காட்சி அவளைத் திடுக்கிடச் செய்து விட்டது. அங்கே ஒரு யௌவன சந்நியாசினி நின்று கொண்டிருந்தாள். ரோஜா போன்ற நிறம், காவி வஸ்திரம், நெற்றியில் திலகம் துளசிமாலை இத்யாதி அலங்காரங்கள். முகத்தில் திவ்ய தேஜஸ் விளங்கியது.

இந்திரா அப்படியே ஸ்தம்பித்து நின்று விட்டாள். மனத்திலே பெரும் புயல் வீசிற்று. எண்ணங்கள் அலையலையாய் எழுந்து கண் வழியே கல்முத்துக்களைச் சிதறின.

* * *

"அம்மா, எனக்குத்தான் இன்னிக்கு மாம்பழக் கொட்டை!"

"ஏண்டியம்மாவோ! எனக்குத்தான். உனக்கு நேத்திக்குக் கொடுத்தாளே?"

"ஊம் ... ஊம்..."

"என்னடி லக்ஷ்மி! குழந்தையோடு உனக்குப் போட்டி? இரண்டு கதுப்பும் உனக்குக் கொடுக்கிறேன், வாங்கிக் கொள்ளேன்!"

"ஏனாம்? அவள் மட்டும் என்ன ஒசத்தியாம்!"

கொட்டையை எடுத்துக் கொண்டு வாசலில் ஓடிவிட்டாள் லக்ஷ்மி. கதுப்புகளை எடுத்துக் கொண்டு கூடவே ஓடினாள் இந்திரா. பெரியவளிடம் தன் வாய்வீச்சும் கைவீச்சும் பலிக்காதென்பது அவளுக்குத் தெரியும். ராமபாணம் போல் தடைப்படாத 'அஸ்திரம்' ஒன்று அவள் கையில் இருந்ததை அவள் அறிவாள். உண்மையில் இவ்வாயுதம் குழந்தைகளிடமும் விசேஷமாய்ப் பெண்குலத்திடமும் இயற்கையில் கடவுளால் அளிக்கப்பட்டது போலும்! ஆனால் இதைச் சமய மறிந்து உபயோகிப்பதிலேதான் வெற்றி காண முடியும். இக்கலையில் தேர்ச்சி பெற்றவள் இந்திரா. அவள் வருணாஸ்திரத்தைப் பிரயோகித்து விட்டாள். மாங்கொட்டை கிடைத்துவிட்டது. கண்ணீர் நின்று விட்டது. கண்ணின் கோடியிலே ஒரு மின்வெட்டும் முகத்திலே ஒரு புன்னகைக் கீற்றும் வெற்றிச் சின்னங்களாய் விளங்கின.

"ஏண்டா கண்ணு அழறது? வாண்டாண்டா; என் அம்மாவோன்னோ?" என்று லக்ஷ்மி அன்போடு தன் தங்கையை அணைத்துக் கொண்டாள். இந்திரா தன் முகத்தை அவள் மார்பிலே புதைத்து விம்மினாள். இத்தடவை கண் மடை தானே திறந்து கொண்டு பெருக்கெடுத்தது. இது சாகஸக் கண்ணீரல்ல. அன்பின் அடையாளம். லக்ஷ்மியின் பிரேமை இந்திராவின் இதய ஆழத்தைத் தொட்டு அங்கே ஒரு நரம்புத் தந்தியை இலேசாக அசைத்து விட்டது. இச்சலன சக்தி விரிந்து விரிந்து கண் வழியே வெளிப்பட்டது. இப்போது வெற்றி யாருடையது? இதயமும் இதயமும் ஒன்றுபட்டபோது வெற்றியுமில்லை தோல்வியுமில்லை.

வெங்குவய்யர் ஒரு பள்ளிக்கூட உபாத்தியாயர்; அதனால்தான் சிறிய சம்பளத்திலே பெரிய குடும்பத்தைத் தாங்கும் கௌரவம் அவருக்குக் கிடைத்திருந்தது. ஆகவே அவருடைய மைத்துனன் அவர் பளுவைக் கொஞ்சம் குறைக்கக் கருதி இந்திராவைத் தன்னோடு வைத்துக் கொள்வதாகப் பம்பாய்க்கு அழைத்துப் போனபோது அவருக்குச் சற்று வருத்தமாய்த் தானிருந்தது. இருந்தாலும் இந்த ஏக்கம் நீடித்திருக்கும்படியாய் அவர் ஸகதர்மிணி விட்டு விடவில்லை. அவர் வேலை செய்துவந்த பள்ளிக்கூடத்திலே அவருக்கு இரண்டு வருஷங்களுக்கு ஒரு தரம் கேவலம் ஒரு ரூபாய் சம்பள உயர்வு கிடைத்து வந்தது. ஆனால் நாகம்மாளோ இரண்டு வருஷங்

களுக்கு ஒரு தடவை இரட்டைக் குழந்தைகளாகவே பெற்று இந்திராவின் ஸ்தானத்தை வட்டியும் முதலுமாய்ப் பூர்த்தி செய்து வந்தாள். ஆகவே வெங்குவய்யருக்கு ஒரு குறைவுமில்லை.

2

"ஏண்டி பெண்ணே! இரண்டு நாளைக்கு எப்படியாவது பார்த்துக் கொண்ணு. வியாழக்கிழமை வந்துவிடறேம். கோடியாத்துக் குப்பிப் பாட்டியை இராத்திரி துணைக்குப் படுத்துக்கச் சொல்றேன்!"

"ஆகட்டும் அம்மா!"

"என்ன! பேசாமல் இருக்கேளே?"

"இப்போ போகாமற் போனால் என்ன தலை போய் விடுமா? புதன்கிழமை குழந்தை இந்திரா வருகிறாள். வியாழன் ரங்கன் வருவதாய் எழுதியிருக்கிறான். லக்ஷ்மி கல்யாணத்தைப் பற்றி உனக்குக் கவலையே இல்லை போலிருக்கே!"

"ஆமாம்! எனக்கு இல்லாத அக்கரைதான் உங்களுக்கு. அதுக்கும் இதுக்கும் என்ன? ஏதோ கல்யாணமானாலும் வர முடியல்லேன்னு சாக்குப் போக்குச் சொல்லலாம். சாவுன்னு போகாமே இருப்பாளோ! அதிலேயும் பெரிய சாவு. நன்னாயிருக்கு. இரண்டு நாளில் ஒன்றும் குடி முழுகி விடாது. எப்படி வராமே இருந்தான்னு என்னைப் பிடுங்கித் தின்னுடுவா. இளம்புங்கோ எல்லாம்!"



கிளம்பிவிட்டார் வெங்குவய்யர் ஊருக்கு ஸகதர்மிணி ஸகிதம். மறுநாள் காலை குழந்தைகளுக்குப் பழையது போட்டுவிட்டு வீடு மெழுகிக் கொண்டிருந்தாள் லக்ஷ்மி. வாசலில் வண்டிச் சத்தம் கேட்டது. திடுதிப்பென்று பெட்டியும் கையுமாய் ரங்கன் உள்ளே வந்து நிற்கவும் லக்ஷ்மி வாரிச் சுருட்டிக்கொண்டு சமையல் உள்பக்கம் ஓடிவிட்டாள். 'அத்தான் அத்தான்' என்று குழந்தைகள் அவனை மொய்த்துக் கொண்டன. விஷயம் தெரிந்துகொள்ள அவனுக்கு வெகுநேரம் ஆகவில்லை. பழம், மிட்டாய், சீப்பு, ரிப்பன், பேனா, பென்சில் இவைகளைக் கொடுத்துக் குழந்தைகளைச் சமாளித்துக் கொண்டு அவன் சமையலறைக்கு வந்தான். அடுப்பங்கரையில் ஒரு பக்கமாய் ஒண்டிக் கொண்டிருந்தாள் லக்ஷ்மி.

"என்ன லக்ஷ்மி! இப்படி வெட்கப்படுகிறாய்? வியாழக்கிழமைதான் வருவதாய் இருந்தேன். என்னவோ என்னைப் பிடித்த நல்ல காலம் இரண்டு நாள் முன்னதாகவே வந்து விட்டேன். நான் இதை எதிர்பார்க்கவேயில்லை. அப்பா அம்மா என்றைக்கு வருகிறார்கள்? உனக்குச் சிரமம். ஸாரி......"

கடைசி வார்த்தையைக் கேட்டுக் கொண்டே வந்த கோமதி, "என்ன அத்தான் ஸாரி? எறும்புச்சாரியா?" என்றாள்.

"இல்லேடி! சாரி என்றால் மிஸ்டர் ரங்காச்சாரி பி. ஏ. என்று அர்த்தம்" என்றாள் லீலா.

"போடி அசடு! ஸாரி என்றால் புடவை என்று அர்த்தம். அக்காவுக்கு அத்தான் புடவை வாங்கி வந்திருக்கிறார். சன்னியாசிக் கலர்" என்றான் சாம்பு.

லக்ஷ்மி சிரித்துவிட்டாள்.

"எங்கே அத்தான்? காட்டு!" என்று குழந்தைகள் அவனைப் பிடித்து இழுக்க ஆரம்பித்து விட்டன.

லக்ஷ்மி ஒரு கொடியில் சமாளித்துக் கொண்டு விட்டாள். ஒரு செம்பில் ஜல

மும் கொஞ்சம் பல்பொடியும் கொண்டு வைத்து. "நீலா! அத்தானைப் பல் தேய்க்கச் சொல். இதோ ஒரு க்ஷணத்தில் காப்பி போடுகிறேன்" என்றாள்.

ரங்கன் பல் தேய்த்து விட்டுக் கூடத்திற்கு வந்தான். லக்ஷ்மி, பஞ்ச பாத்திரத்தில் ஜலம் கொண்டு வைத்து "சந்தி பண்ணுங்கள்!" என்றாள்.

ரங்கனுக்குக் கொஞ்சம் யோசனைதான். சந்தி செய்து எத்தனை நாட்கள் ஆயிற்றோ? ஆனால் இந்த நேர் முகக் கட்டளையை எப்படிப் புறக்கணிக்க முடியும்? வெகு சிரமப்பட்டு ஞாபகப்படுத்திக் கொண்டு ஒரு வழியாய் சந்தியை முடித்து விட்டு ஜபத்திற்கு உட்கார்ந்தான்.

"அத்தான்! இந்திரா ......" என்று ஆரம்பித்தான் சாம்பு.

"டேய்! சும்மா இரு! அவர் ஜபம் பண்ணறார்!" என்றாள் நீலா.

"போடி! தெற்கே பாத்துண்டுதான் ஜபம் பண்ணுவாளோ?"

"அட மக்கு! அங்கேதானேடா அக்கா போட்டோ மாட்டியிருக்கு!"

"நீலா! உன் அரட்டை வாயைச் சற்று மூடிக்கொள்ளேன். அவர் சாப்பிடட்டும்" என்று சொல்லிக் கொண்டே லக்ஷ்மி தோசையும் காப்பியும் கொண்டு வைத்தாள். "சாப்பிட்டு விட்டுக் கொஞ்சம் இளைப்பாறுங்கள். வெந்நீர் போடுகிறேன். எண்ணெய் தேய்த்துக் கொள்ள வேணும். இன்று புதன்கிழமை!" என்றாள்.

ரங்கன் உண்மையில் பிரமித்து விட்டான். அவன் தாயார் இறந்த பின் இவ்வித உன்னன்பை எங்கும் கண்டதில்லை என்று அவனுக்குத் தோன்றிற்று. அன்று லக்ஷ்மி ஸாக்ஷாத் லக்ஷ்மியாகவே விளங்கினாள். அவளது யௌவன எழிலின் சோபை அவனை ஒரு பக்கம் மயக்க, அவள் காட்டிய அன்பு அவனை அடிமையாக்கி விட்டது.

பதினொரு மணிக்கெல்லாம் சமையல் செய்து இலைபோட்டு விட்டாள் லக்ஷ்மி. பரிமாறின விதமும் சமையலின் ருசியும் ரங்கனைத் திணற வைத்து விட்டன.



"என்ன இது! நீங்கள் ஒன்றுமே சாப்பிடவில்லையே! கீரை உடம்புக்கு நல்லது. இன்னும் கொஞ்சம் போட்டுக் கொள்ளுங்கள். வெண்டைக்காய்க் கறி உங்களுக்கு ரொம்பப் பிடிக்குமே? ஏன் சாப்பிடவில்லை? நான் ஒன்றும் சாதம் அதிகம் போட்டுவிடவில்லை. எனக்குத் தெரியாதா என்ன நீங்கள் சாப்பிடும் அளவு?" இத்தகைய அன்பு வலையில் அகப்பட்டுக் கொண்டு ரங்கன் அசந்து போனதில் ஆச்சரியம் ஒன்றுமில்லை. பிடிவாதம் செய்யும் குழந்தையையும் தாயன்பின் பிடிவாதம் வென்று விடுகிறது.

விதி யென்று ஒன்று இருக்கிறதே அதன் செயல்தான் ஆச்சரியப்படத் தக்கதாய் இருக்கிறது! அது குறுக்கிடா விட்டால் இவர்கள் வாழ்க்கையே வேறு விதமாய் அமைந்திருக்கும். நாளை வருவதாய் இருந்த இந்திரா இன்றைக்கே ஏன் வரவேண்டும் சொல்லுங்கள்.

வீட்டில் குதூகலத்திற்கும் கொம்மாளத்திற்கும் குறைவில்லை. வெங்குவய்யரும் நாகம்மாளும் ரங்கனுக்கு ஆசார உபசாரங்களும் செய்தார்கள். தினம் ஒரு விருந்து வைத்தார்கள். பி. ஏ. பரீக்ஷை கொடுத்திருந்த இந்திராவின் மேதா விலாசமென்ன? நாகரிகப் பாங்கான நடை யுடைபாவனை யென்ன? கலகலப்பான பேச்சுப் பரிகாசங்களென்ன? இவைகளெல்லாம் ரங்கனைப் பரவசப் படுத்தி விட்டன. இடையிடையே குழந்தைகளின் குறும்புத் தனங்கள் வேறு. ரங்கன் இந்த லோகத்திலேயே இல்லை.

3

அன்று பௌர்ணமி. இராத்திரி படுக்கப் போகும் போது மணி பதினொன்று ஆகிவிட்டது. இருந்தும் ஐந்து ஆத்மாக்கள் வெகு நேரம் தூக்கமின்றித் தவித்தன.

"இரண்டு தடவை கல்யாண ஏற்பாடுகள் எல்லாம் செய்து கடைசியில் நின்று விட்டது. இந்த வரனுவது நல்லபடியாய் பகவான் கிருபையால் நிச்சயமாக வேணும். என் லக்ஷ்மிக்கு ரங்கன் கிடைப்பது என்பது இலேசான காரியமா? லக்ஷ்மியின் நல்லகாலம்தான். அவள் ஜாதக விசேஷம்தான் ரங்கனை இசையும்படிச் செய்திருக்க வேணும். அப்பவே குப்பு ஜோஸ்யர் 'லக்ஷ்மி ஜாதகம் சாமானியமானதல்ல' என்று கூறி யிருந்தும், ஏன் என் மனம் இப்படி நிலைகொள்ளாமல் தவிக்கிறது?" இப்படி ஏங்கிக் கொண்டிருந்தார் வெங்குவய்யர்.

"இதென்னடி இது! கிணறு வெட்ட பூதம் புறப்பட்ட கதையாய் இருக்கே! லக்ஷ்மியைக் கல்யாணம் பண்ணிக்கொள்ள வந்தவன் இந்திராவைச் சுற்றிக்கொண்டு அலைகிறானே! இந்தப் பெண்ணின் தலையெழுத்துத்தான் எப்படியோ?" என்று அங்கலாய்த்துக் கொண்டிருந்தாள் நாகம்மாள்.

4

எப்பொழுதும் போல்தான் பொழுது விடிந்தது. ஒரு பக்கத்தில் மூடி போட்டுக் கொண்டிருக்கும் போதே மற்றொரு பக்கத்தில் அவிழ்ப்பது என்ன விசித்திரம்! அது என்னவோ! வெங்குவய்யர் குடும்பத் தளையிலிருந்து அன்று ஒரு ஆத்மா விடுபட்டு விட்டது கயிறு அறுந்த காற்றாடிபோல.

வீட்டிலுள்ளவர்களுக்கு விஷயம் விளங்க வெகு நேரம் ஆகவில்லை.

"என் மனது அப்பொழுதே அடித்துக் கொண்டதே!" என்று தலையில் கையை

வைத்துக்கொண்டு உட்கார்ந்து விட்டார் வெங்குவய்யர்.

"இதென்னடி இது! இந்தப் பெண் எங்காவது ஆற்றிலே குளத்திலே விழுந்து வைத்து வயிற்றெரிச்சலை கொட்டிக் கொள்ளப் போகிறதே!" என்று பரிதவித்தாள் நாகம்மாள்.

குழந்தைகள் கூக்குரலிட்டன. ரங்கன் மனம் நிலை கொள்ளவில்லை. இதற்கிடையில் இந்திரா ஒரு கடிதத்தை எடுத்துக் கொண்டு வந்தாள். எழுந்த பரபரப்பையும் அமளியையும் ஒருவாறு அடக்கிக் கொண்டு விம்மல்களுக் கிடையே விக்கிக் கொண்டவாறு படித்தாள் இந்திரா.

"என் அருமைத்தங்கை இந்திராவுக்கு.

அடி தங்காய்! என் இருதயத்தை உனக்கு எப்படித் திறந்து காட்டுவேன்! எந்தப் புனித நேரத்தில் நான் அவரைப் பார்க்கும்படியான பாக்கியம் செய்தேனோ அந்த க்ஷணத்திலேயே என் ஆத்மாவை அவர் பாத கமலங்களில் அர்ப்பணம் செய்து விட்டேன். என் கண்ணின் கோடியிலிருந்து தாரை பெருகியது. என் உடம்பு சிலிர்த்தது.

பகவானுக்கு என் மனப் பூர்வமான நன்றி. அவர் கருணை கூர்ந்து என் கண்ணைத் திறந்திராவிட்டால் உங்களை அறிந்திருக்க முடியாது. கண்ணைக் கொடுத்தது மட்டுமல்ல! என்னைக் கோழையாக்கி விடாமல் போதிய தைரியத்தையும் கொடுத்திருக்கிறார். அதனால் தான் 'அவரை' உனக்கு மனப்பூர்வமாய்க் கொடுக்க முடிகிறது. நீ அவரோடு குடியும் குடித்தனமுமாய் இருந்து எல்லா சௌபாக்கியங்களையும் அனுபவிக்கும்படி ஆசீர்வதிக்கிறேன்.

என்னைப் பற்றி ஒரு வார்த்தை. நான் ஆற்றிலே குளத்திலே விழுந்து விட்டேன் என்று யாரும் எண்ண வேண்டாம். என் ஸர்வத்தையும் ஒரு நொடியிலே நிர்வாகம் செய்யத் தூண்டிய என் மனோ தைரியம் வாழ்க்கைப் பாதையிலே காணப்படும் கல்லு முள்ளுகளை லக்ஷியம் செய்யாது.

போய் வருகிறேன்! குழந்தைகளுக்கு என் ஆசை முத்தங்கள். அப்பா அம்மாவுக்கு என் நமஸ்காரம்.

எனக்குச் சந்தோஷமாய் விடைகொடு. உன் கலைப்பண்புள்ள நெஞ்சத்திலே கொஞ்சம் கற்பனை செய்துகொள்! என் உடம்பிலே அவர் வாங்கி வந்த சந்நியாசிக் காவிப் புடவை, கழுத்திலே துளசிமாலை, உதட்டிலே 'வைஷ்ணவ ஜனதோ' உள்ளத்திலே......

போய் வருகிறேன்!

லக்ஷ்மி."

விக்கல்களுக்கும் விம்மல்களுக்கும் இடையே எப்படியோ இக் கடிதம் படித்து முடிக்கப்பட்டது. சொல்வதற்கு வேறு என்ன இருக்கிறது?

* * *

"என்ன, அம்மா இது! அப்பாவுக்கு மோர் விடாமல் இத்தனைநாழியாய் வாசலிலேயே நின்று கொண்டிருக்கிறாயே!"

இந்திராவுக்குச் சுய உணர்வு வந்தது. புடவையின் தலைப்பால் கண்ணைத் துடைத்துக் கொண்டு உள்ளே சென்றாள்.

வழிப்பறி

சி. ஆர். ராமசேஷன்

எங்கும் ஒரே கும்மிருட்டு. மழை வேறு பிசுபிசு வென்று தூறிக்கொண்டிருந்தது. சின்னப்பட்டி ரயில்வே ஸ்டேஷனில் ஸ்டேஷன் மாஸ்டர் அறையைத் தவிர மற்ற இடங்களில் நிச்சப்தம் நிலவியது. இரவு மணி இரண்டரை இருக்கும். நிச்சப்தத்தைக் கலக்க ரயில் பிளாட்பாரத்தில் வந்து நின்றது. நாராயணன் ஆபீஸ் காரியமாக வெளியூர் சென்று திரும்புகையில் கிராமத்தில் உள்ள தன் தங்கையைப் பார்த்துவிட்டுப் போக இந்த ஸ்டேஷனில் இறங்கினான்.

கிராமத்திற்குப் போக ஸ்டேஷனிலிருந்து சுமார் மூன்று மைல் நடந்து போகவேண்டும். அந்த கிராமத்தில் வழிப்பறி உண்டு என்றும், கள்வர்கள் கொலைக்கும் துணிந்தவர்கள் என்றும் கேள்விப்பட்டிருந்தான். இரவு வேளையில் வழித்துணைக்கு ஆள் கிடைப்பது சிரமம். நாராயணன் ஊருக்குப் புதியவனானதால், கிராமத்திற்குப் போகும் வழியை அறிந்து வர ஸ்டேஷன் மாஸ்டரிடம் சென்றான்.

ஸ்டேஷன் மாஸ்டரிடம் வழியைக் கேட்டுக் கொண்ட நாராயணன் துணை யாரும் இல்லையாதலால், வேகமாக நடக்கலானான். குறுக்குப் பாதையில் போகலாம் என்றாலோ பயம்.

மூன்று மைல் நடந்ததும் ஒரு பனந் தோப்பை அடைந்தான். அங்கே போனதும் நாராயணனுக்கு மனது 'பக் பக்' என்று அடித்துக் கொண்டது. சிறிது நேரத்தில் பின்னால் யாரோ நடந்து வரும் சத்தம் கேட்டது. வெறும் பிரமையாயிருக்கலாம் என்று நினைத்து மேலும் நடக்கலானான். காலடிச் சத்தம் சமீபத்தில் கேட்டது. நாடியும் ஒடுங்கிவிட்டது.

நாராயணனுக்கு என்ன செய்வது என்று தெரியவில்லை. அவன் கொண்டு வந்த ஆபீஸ் பணம் ஆயிரம் ரூபாய் சட்டைப் பையில் இருப்பது நினைவு வந்தது. அவனை அறியாமலேயே அவன் கை சட்டைப் பையைத் தொட்டுப் பார்த்தது. வேறு வழி ஒன்றும் தோன்றாமையால் ஓடுவதுதான் சரி என்று தீர்மானித்து ஓடலானான். பின்னால் வருபவனும் ஓடி வரலானான். பாதை பிரியும் இடத்தில், திரும்பவேண்டிய பாதையில் திரும்பி வேகமாக ஓடினான். என்ன ஆச்சரியம்! பின்னால் வருபவனும் அதே பாதையில் திரும்பி, இன்னும் வேகமாக ஓடிவரலானான். பின்னால் வருபவன் சற்று நெருங்கியதும் கையைத் தட்டி 'சார், சார்!' என்று கூப்பிட்டான். நாராயணனுக்குத் திகில் பிடித்துக் கொண்டது.

சிறிதும் திரும்பிப் பார்க்காமல் வெகு வேகமாக ஓடினான். கதைகளில் பேய் பிசாசுகளைப் பற்றிப் படித்திருந்தவனானதால் பயம் இன்னும் அதிகரித்தது.

மறுபடி நடக்க யத்தனிக்கும் போது நாராயணனின் வேஷ்டி, அருகில் இருந்த சப்பாத்திக் கள்ளியில் மாட்டிக்கொண்டு ஓடவிடாமல் தடுத்தது. மெதுவாக தைரியத்தை வரவழைத்துக் கொண்டு ஓடிவந்தவனைத் திரும்பிப் பார்த்து "யாரப்பா, நீ?" என்று கேட்டான்.

பின்னால் துரத்திக்கொண்டு வந்தவன், மீசையை முறுக்கிவிட்டுக் கொண்டு "நீங்கதானே ஸ்டேஷன் மாஸ்டர் ஐயாவோடு பேசிக்கிட்டிருந்தீங்க?" என்று கேட்டான். நாராயணன் பயந்து நடுங்கிக் கொண்டே மேல் மூச்சு வாங்க "ஆமாம்" என்றான்.

துரத்திக் கொண்டு வந்தவன் நிதானமாக, "ஒன்றும் இல்லீங்க! ஸ்டேஷன் மாஸ்டர் ஐயாவோடே பேசிக்கிட்டு இருக்கும்போது, நீங்க கீழே வைத்த இந்தப் பையை மறந்து விட்டீங்களே! ஐயா கொடுத்து விட்டு வரச் சொன்னாரு. நான் மறுபடி மூன்றரை மணி வண்டிக்குக் கூலி பார்க்கப் போகவேணும்; அதான் அவசரமாக ஓடிவந்தேன்!" என்றான்.

பெருக்கல் விஷயம்



[illegible] :—குழந்தையைப் போய் சரியாகப் பெருக்கவில்லை; மறுபடியும் பெருக்கு என்று சொல்லிக்கலாமே? அது என்னத்தைக் கண்டது? நானே பெருக்கனமென்று வந்தேன்.

—"சோமு"

உள்ளமும் வெளியும்

"ஸ்கிற"



ராஜத்திற்குக் கல்யாணம் ஒரு வருஷத்திற்கு முன்னாலேயே ஆகிவிட்டது. ஆனாலும் அவள் புருஷன் திருச்சியிலிருந்த காலேஜில் படித்துக் கொண்டிருந்தான்; அவள் தன் பிறந்த வீட்டில் இருந்து வந்தாள்.

ஞாயிற்றுக்கிழமை தோறும் அவளுக்குக் கடிதம் போடத் தவறமாட்டான் நாராயணன். அதில் அப்படியே அன்பையும் காதலையும் அள்ளி வீசி எழுதியிருப்பானா? அதுதான் கிடையாது. கணக்காய் நான்கு வரிகள்.

"நான் சௌக்கியமாக இருக்கிறேன். நீ உடம்பை ஜாக்கிரதையாய்ப் பார்த்துக் கொள்ளவும். அங்கு அப்பா, அம்மா எல்லோரும் க்ஷேமம் என்று நம்புகிறேன். அடிக்கடி கடிதம் போடவும்."

நாராயணன்.

இப்படித்தான் ஒவ்வொரு தடவையும்.

ராஜத்திற்கு இது பெரிய ஏமாற்றமாக இருந்தது. "என்ன இது? இவர் இப்படி தந்தி அடிக்கிறாப்போல் எழுதுகிறாரே? ஆசையாய் ஒரு வார்த்தை எழுதுகிறாரா பார்!"—இப்படி எண்ணிப் பார்க்கும்போது, அவளுக்கு அழுகை அழுகையாய் வரும். தன் சிநேகிதி குமுதத்திற்கு அவள் கணவன் எவ்வளவு அன்பாய்க் கடிதம் எழுதுகிறான்? "உன் நினைவாகவே இருக்கிறது; நீ இல்லாமல் உயிர் வாழ முடியாது" — இப்படியெல்லாம் எழுதுகிறானே? நம் புருஷன் மாத்திரம் ஏன் இப்படி இருக்க வேண்டும்?

அன்று திங்கட்கிழமை. தன் அன்பையும் ஆத்திரத்தையும் கொட்டி அவனுக்கு ஒரு கடிதம் எழுதினாள் ராஜம். "இதைப் பார்த்தவுடன் அவரும் ஆசையாய்க் கடிதம் எழுதுவார்!" என்று அவள் தபால்காரனை எதிர் பார்த்துக் கொண்டு நின்றாள். புதன் கிழமை பதில் வரவில்லை. ஆனால், அது அவளுக்கு ஏமாற்றமாயில்லை. "நம் கடிதம் கொஞ்சம் 'லேட்'டாய்ப் போயிருக்கும்!" என்று மனதைத் தேற்றிக் கொண்டாள்.

வியாழக்கிழமை போயிற்று; வெள்ளியும் போயிற்று. அதற்குமேல் அவள் வேறு என்ன நினைக்க முடியும்? தன் மேல் அவனுக்கு அன்பில்லை என்று நிச்சயமாய்த் தெரிந்து போய் விட்டது அவளுக்கு. பிறகு, அவனிடமிருந்து கடிதத்தை எதிர் பார்ப்பதையே நிறுத்தி விட்டாள்.

வழக்கம்போல் திங்கட்கிழமை கடிதம் வந்தது. வழக்கம்போல் நான்கு வரிகள்!

★

ஒரு வருஷம் ஓடி மறைந்தது. நாராயணனுக்குப் பரீட்சை தேறி, சென்னையில் நூறு ரூபாய்ச் சம்பளத்தில் வேலையும் ஆயிற்று. ராஜத்தையும் அங்கு கொண்டு போய் விட்டார் அவள் தகப்பனார்.

வீடு நன்றாகத்தான் பார்த்திருந்தான் நாராயணன். அவள் கேட்கும் சாமான்களெல்லாம் உடனே வாங்கிக் கொண்டு வந்து விடுவான். எல்லாம் அவள் இஷ்டம்தான். சம்பளத்தைக்கூட அப்படியே அவளிடம் கொடுத்து விடுவான்.

ஆனால், இதுவா ராஜம் விரும்புவது? தன்னிடம் புருஷன் அன்பாயிருக்க வேண்டுமென்பதல்லவா அவள் விருப்பம்? அதைக் காணோமே! என்ன சந்தோஷம் இருக்கும், அவளுக்கு?

தூங்கி எழுந்தவுடன் நாராயணன் காப்பியைக் குடித்து விட்டுப் பரக்கப் பரக்க எங்கேயோ ஓடி விடுவான். ஒன்பது மணிக்குத் திரும்பி வந்து பரக்கப் பரக்கக் குளித்துச் சாப்பிட்டு விட்டு ஆபீஸுக்கு ஓடி விடுவான். போகிற அவசரத்தில், "ராஜம்,



நான் போய் விட்டு வருகிறேன்: கதவைத் தாளிட்டுக் கொள்!" என்று சொல்லிக் கொண்டே ஓடுவான்.

இதையா அவள் எதிர்பார்த்தாள்? அவள் நினைத்தது என்ன, நடப்பது என்ன?

சாயந்திரம்தான் ஆபீஸிலிருந்து ஐந்து மணிக்கெல்லாம் வந்து விடுகிறானே, அவளுடன் சந்தோஷமாகப் பேசிக் கொண்டிருப்பானோ? — எது? — வருவான்; முகத்தைக் கழுவிக்கொண்டு, 'டிபனை'ச் சாப்பிட்டு விட்டு வெளியே கிளம்பி விடுவான். எட்டரை மணிக்குத் திரும்பி வருவான்; சாப்பிட்டு விட்டு மாடிக்குப் படிக்கப் போய் விடுவான்!

கல்யாண தினத்தன்று அவன் தன்னை எவ்வளவு அன்புடன் பார்த்தான்! அப்பொழுது அவள் என்னென்ன கனவுகள் கண்டாள்!

"அவருக்குச் சீக்கிரம் வேலையாய்விடும். பட்டணத்தில் அழகாய் ஒரு சின்ன வீடாய்ப் பார்த்துப் பிடித்துக் கொண்டு ஆனந்தமாய்க் குடித்தனம் செய்வோம்......

"காலையில் பால்காரன், "அம்மா, பால்!" என்று வாசலில் கூச்சல் போடுவான். பறந்தடித்துக் கொண்டு எழுந்திருப்பேன்.......

"ராஜம், நீ படுத்துக் கொள். நான் பாலை வாங்கி வைக்கிறேன். பாவம், இரவில் ரொம்ப நேரம் பேசிக்கொண்டிருந்து விட்டாய்!" என்று அவர் ஓடோடியும் போய் பாலை வாங்கி வருவார்.

"'ஆமாம், சமையல்காரி வைத்திருக்கிறீர்களே, நான் படுத்துத்

தூங்க!' என்று சிரித்துக் கொண்டே சொல்வேன் ......

"ஆறு மணி அடித்ததும், சத்தம் செய்யாமல் கீழே இறங்கி வந்து வெந்நீர் அடுப்பைப் பற்ற வைத்துக் கொண்டிருப்பேன். அவர் சத்தம் போடாமல் பின்னால் வந்து நிற்பார்; எனக்குத் தூக்கி வாரிப்போடும் ......

"'ஆமாம், எதற்காக எழுந்து வந்தீர்கள்? நான் தான் வேலையிருக்கிறது என்று எழுந்து வருகிறேன். காப்பியைப் போட்டு விட்டு உங்களை எழுப்ப மாட்டேனா?' என்பேன்.

"கேட்டால்தானே? அவரும் என்னுடன் சுற்றிச் சுற்றி வருவார். காப்பி போட்டுக் கொண்டிருக்கும் போதே, 'ராஜம்! என்ன சமைக்கப் போகிறாய்? நான் காய்கறி நறுக்கித் தருகிறேனே?' என்பார் ......

"'நன்றாயிருக்கிறது! யாராவது கே கிதர்கள் ஏசப் போகிறார்கள்! உங்கள் அறைக்குப் போங்கள்' என்பேன் ......

அவர் விழுந்து விழுந்து சிரிப்பார்.

"சாப்பிடும்போதும் இந்தத் தொந்தரவு இருக்கும். சேர்ந்து ஒரு இலையில் இருவரும் சாப்பிட வேண்டும் என்று அவர் பிடிவாதம் செய்வார். 'நீங்கள் சாப்பிட்ட பிறகு நான் சாப்பிடுகிறேன்' என்று சொன்னால் கேட்க மாட்டார். விசுவாமித்திரர் போல் மாடியை நோக்கி ஓடுவார். 'இல்லை யில்லை, வாருங்கள்' என்று சமாதானப்படுத்தி நான் அவரை இழுத்து வருவேன் ......"

இப்படியெல்லாம் கனவு கண்டு கொண்டிருந்த அவளுக்கு நாராயணனின் நடத்தை சந்தோஷத்தைக் கொடுக்குமா?

*

ஒரு ஞாயிற்றுக் கிழமை. சாப்பிட்டு விட்டுச் சாய்வு நாற்காலியில் சாய்ந்து கொண்டிருந்தான் நாராயணன். அவன் காலடியில் வந்து உட்கார்ந்து, "இன்று சினிமாவுக்குப் போவோமே?" என்றாள் ராஜம் கொஞ்சலாக.

"போகலாம்; சாப்பிட்டு விட்டாயா? மூன்று மணிக்கு ஆட்டம். சீக்கிரம் 'டிரஸ்' பண்ணிக் கொண்டு வா!" என்றான் நாராயணன்.

இருவரும் சினிமாக் கொட்டகையை அடைந்தார்கள். உள்ளே அவளை ஒரு ஆசனத்தில் உட்கார வைத்து விட்டு, "ராஜம், எனக்குக் கொஞ்சம் வேலை யிருக்கிறது. சினிமா முடியும் சமயத்திற்கு வந்து அழைத்துப் போகிறேன்" என்று சொல்லி விட்டு வெளியே நடந்தான் நாராயணன்.

ராஜத்திற்குத் தூக்கி வாரிப் போட்டது. இருவரும் சேர்ந்து சினிமா பார்க்கப் போகிறோம் என்று நினைத்திருந்த அவளுக்கு, "சினிமாவே வேண்டாம்!" என்று தோன்றியது. உடனே கிளம்பி விடலாம் என்றாலும் அவன் போய் விட்டான். வேறு வழியில்லாமல் உட்கார்ந்திருந்தாள். படத்திலேயே அவள் மனம் செல்லவில்லை.

நாராயணன் அவளைத் தனியே விட்டு விட்டுப் போனதற்குக் காரணமில்லாமலில்லை. ஒரு நாள் ஏதோ பேசிக் கொண்டிருக்கும்போது, "எல்லா நகைகளும் அழகாய்த்தான் இருக்கின்றன. ஒரு ஒட்டியாணமும் கூட இருந்து விட்டால் எவ்வளவோ நன்றாயிருக்கும்!" என்றாள் ராஜம்.

நாராயணனுக்கும் அப்படித்தான் தோன்றிற்று. ஆனால் அவன் சம்பளத்தில் எங்கிருந்து அவன் ஒட்டியாணம் வாங்க முடியும்? இதைப்பற்றி அவன் யோசித்துக் கொண்டிருக்கும்போது, ஒரு பணக்காரச் செட்டியார் தன் பிள்ளைக்கு ஆறு மாதம் 'டியூஷன்' சொல்லிக் கொடுத்தால், நானூறு ரூபாய் தருவதாகச் சொன்னார். உடனே அதற்கு அவன் ஒப்புக்கொண்டு விட்டான்.

இந்த விஷயத்தை அவன் அவளிடம் சொல்லவில்லை. ஆறு மாதம் கழித்து ஒரு ஒட்டியாணத்தை வாங்கி அவளிடம் திடீரென்று கொடுத்து, அவளைத் திணற அடிக்க வேண்டுமென்று எண்ணியிருந்தான். அந்த 'டியூஷன்' தவறிவிடக் கூடாதே என்பதற்காகத்தான் அவன் அவ்வளவு அவசரமாக ஓடினான்.

நாராயணன் சினிமாக் கொட்டகையை விட்டு வந்த அரை மணிக்கெல்லாம் திடீரென்று மழையும் இடியும் ஆரம்பித்து விட்டது. "இடி என்றால் ராஜம் நடுங்குவாளே! அவளைத் தனியாகச் சினிமாவில் விட்டு விட்டு வந்து விட்டோமே!" என்று அஞ்சியவனாய், டியூஷனைப் பாதியில் நிறுத்திக்கொண்டு கொட்டகைக்கு ஓடினான்.

சினிமாக் கொட்டகையில் வருத்தத்துடன் உட்கார்ந்திருந்த ராஜத்துக்குத் தன் புருஷன் திடீரென்று பக்கத்தில் வந்து உட்கார்ந்ததும் ஒன்றும் புரியவில்லை.

சினிமா முடிந்து வீட்டிற்கு வந்தவுடன், 'சீக்கிரம் காப்பி போடு. நான் கொஞ்சம

வெளியில் போக வேண்டும்" என்றான் நாராயணன். டியூஷனைப் பாதியில் விட்டு விட்டு வந்து விட்டோமே, அதை முடித்து விட்டு வந்து விடலாம் என்பது அவன் எண்ணம்.

ராஜம் பரக்கப் பரக்க அடுப்பை மூட்டி வென்னீர் போட்டாள். அந்தச் சமயத்தில், "நாழியாய் விட்டது, ராஜம்!" என்று சொல்லிக் கொண்டே உள்ளே வந்த நாராயணன் திடுக்கிட்டான்.

அடுப்படியில் உட்கார்ந்திருந்த ராஜம் 'பிளா'ஸ்கில் காப்பிப் பொடியைப் போடுவதில் முனைந்திருந்தாள். அடுப்பின் மீதிருந்த 'கெட்டில்' கரி எரிந்து போனதால் ஒரு பக்கமாகச் சாய்ந்து, கொதிக்கும் வென்னீர் அவள் இடது பாதத்தில் கொட்டும் சமயம், நாராயணன் ஒரே பாய்ச்சலாகப் பாய்ந்து அவள் காலைத் தன் கையால் மூடினான். கொதிக்கும் தண்ணீர் அவன் கை மீது கொட்டியது; அவள் கால் தப்பித்தது.

"என்ன இது? கையெல்லாம் கொப்புளித்து விட்டதே" என்று தேங்காயெண்ணெயைத் தடவி, அவனை மாடிக்கு அழைத்துப் போய் உட்கார வைத்தாள் ராஜம்.

கைப்புண்ணால் ஜுரம் வந்து விட்டது அவனுக்கு. கொஞ்சம் கொஞ்சமாக ஜுரம் அதிகரித்தது. டாக்டர் காலைக்கு மூன்று தடவை வந்து போனார். நாராயணன் ஸ்மரணை தப்பிப் பிதற்றினான்.

"ஆமாம்; இன்னும் ஒரு மாதத்திற் கெல்லாம், நானூறு ரூபாய் வந்துவிடும். அப்புறம் டியூஷன் சொல்லிக் கொடுக்க வேண்டாம். ஒட்டியாணம் வாங்கிப் போட்டவுடன் ராஜம் எவ்வளவு அழகாயிருப்பாள்! டியூஷன் சொல்லிக் கொடுக்கப் பட்ட கஷ்டமெல்லாம் அவளைப் பார்த்தவுடன் மறந்து விடுமே!"

இரண்டு நிமிஷம் மௌனம். பிறகு திரும்பவும் பேச ஆரம்பித்து விட்டான். "ஆமாம், ராஜத்தின் காலில் அந்த வென்னீர் கொட்டியிருந்தால், அவள் எப்படி அதைச் சகிப்பாள்? அவள் கஷ்டப்படுவதைப் பார்த்தால் நான் அழுது விடுவேன்!......ஆமாம், ராஜம் முன்போல் ஏன் சந்தோஷமாயில்லை? என்னிடம் அவளுக்கு ஆசையில்லையா?......இல்லையில்லை, ...இரண்டு மாதமாய் அவள் ஸ்நானம் செய்யவில்லையல்லவா? அதனால்தான்!"

ராஜத்தால் அவன் பிதற்றுவதைத் தாங்க முடியவில்லை. அப்படியே அவன் மேல் விழுந்து அழுது விட்டாள்!


அன்று கார்த்திகை. ராஜம் விளக்குகளை வாசற்படியில் அழகாய் வைத்துக் கொண்டிருந்தாள். நாராயணன் தன் எட்டு மாதக் குழந்தை ரமணியைக் கையில் வைத்துக் கொண்டு பக்கத்தில் நின்று கொண்டிருந்தான்.

விளக்குகளை யெல்லாம் அலங்காரமாய் வைத்து விட்டு, "குழந்தையை என்னிடம் கொடுங்கள்" என்று கையை நீட்டினாள் ராஜம். நாராயணன் குழந்தையை அவளிடம் கொடுக்கும்போது, அன்று வென்னீரால் ஏற்பட்ட காயத்தின் தழும்பில் அவளுடைய மிருதுவான கை பட்டது.

"ஐயோ, பாவம்! எனக்காகப் பட்டுக் கொண்ட காயம் ரமணிக்கு ஆறு வயதாகியும் மறையவில்லையே!" என்றாள் ராஜம் பரிவுடன்.

"உனக்காக ஒன்றும் பட்டுக்கொள்ளவில்லை. அகஸ்மாத்தாய்ப் பட்டுவிட்டது!" என்று சொல்லிக் கொண்டே உள்ளே போனான் நாராயணன்.

"என்னடி, ரமணி! உங்கப்பா பொய்தானே சொல்றார்?" என்று குழந்தையின் கன்னத்தை ஆசையுடன் கிள்ளினாள் ராஜம்.



இரண்டாம் வகுப்புப் பிரயாணி ஒருவர்:—ஸார்! பேசாமல் மூன்றாம் வகுப்பிலேயே ஏறி யிருக்கலாம் போலிருக்கிறதே!

சோகமும்... ...சாந்தியும்



சக்கரவர்த்தி ராஜகோபாலாச்சாரியார்

பந்துக்களைக் கொன்றோம் என்று எண்ணி எண்ணி யுதிஷ்டிரன் மனம் வாடினான். துறவு பூண்டு வனம் சென்றால்தான் இந்தப் பாவம் நீங்கும் என்று நிர்மானித்துச் சகோதரர்களிடம், "ராஜ்யத்திலாவது போகங்களிலாவது எனக்குப் பிரயோஜனமில்லை. இந்தப் பூமியை நீங்கள் ஆளுங்கள். நான் வனம் போகிறேன்" என்றான்.

அருச்சுனன் இல்லறத்தின் சிறப்பையும் கிருகஸ்தாசிரமத்தில் செய்யக்கூடிய புண்ணியங்களையும் எடுத்துக் காட்டினான். பீமசேனனும் கடுமையாகப் பேசினான். "சாஸ்திரங்களைக் குருட்டுப் பாடம் செய்து உண்மையான அறிவு பெறாமல் மந்த புத்தியைப் படைத்தவன் பேசுவது போல் நீரும் பேசுகிறீர்" என்று ஆரம்பித்து, "க்ஷத்திரியர்களுக்குச் சந்நியாசம் கூடாது. கடமைகளைச் செய்து வாழ்க்கையை நடத்துவதே அவர்களுக்குரிய முறை" என்று வற்புறுத்தினான்.

நகுலனும் கரும மார்க்கமே தகுந்தது, சந்நியாசம் சிரமமான வழி என்று தரும புத்திரனோடு வாதாடினான். சகதேவனும் இதையே சொல்லி, "எனக்குத் தந்தை, தாய், ஆசாரியர், உடன் பிறந்தவர் எல்லாம் நீரே! எங்களைப் பொறுத்தருள்வீராக" என்று மன்றாடினான்.

திரௌபதியும் பேசினாள். "துரியோதனன் முதலியோரைக் கொன்றது நியாயமே. அதற்காக வருத்தப்படுதல் கூடாது. அரசனுடைய கடமைகளில் தண்டனை விதிப்பது ஒன்று, அது ராஜ தருமத்தில் இன்றியமையாதது. தீச்செயல் செய்தவர்களைத் தண்டித்தீர். ஆகையால் உம்முடைய சோகத்துக்குக் காரணம் இல்லை. இராஜ தருமத்தை நடத்தி இந்தப் பூமியை ஆளுவது உம்முடைய கடமை. சோர்வு வேண்டாம்" என்றாள்.

பிறகு வியாசர் அநேக நியாயங்களையும் இதிகாசங்களையும் எடுத்துக் காட்டி யுதிஷ்டிரனைச் சமாதானப்படுத்தி நகரத்துக்குப் போய் ராஜ்யபாரம் வகிக்கச் சம்மதிக்கச் செய்தார்.

அஸ்தினாபுரத்தில் வெகு விமரிசையாக ராஜ்யாபிஷேகம் நடந்தது.

மறுபடி ராஜ்யபாரம் வகிக்க ஆரம்பிப்பதற்கு முன் அம்புப் படுக்கையில் தவம் செய்துகொண்டு மரணத்துக்குக் காத்திருந்த பீஷ்மரிடம் சென்று யுதிஷ்டிரன் தர்மோபதேசம் பெற்றான்.

பீஷ்மர் செய்த இந்த தருமோபதேசம் மகா பாரதத்தில் சாந்தி பருவம் என்று மிகப் புகழ்பெற்ற பாகமாகும்.

யுதிஷ்டிரனுக்குச் செய்ய வேண்டிய உபதேசமெல்லாம் செய்துவிட்டு பீஷ்மர் உயிரை நீத்தார். பரம்பரை ஆசாரத்தின்படி யுதிஷ்டிரன் பிதாமகருக்கு கங்கா நதியில் இறங்கி உதகதானம் செய்தான். செய்துவிட்டுக் கரை ஏறி நின்றதும் நடந்துபோன நிகழ்ச்சிகளையெல்லாம் எண்ணித் தாங்காத துக்கம் மேலிட்டு வேடனால் அடிக்கப்பட்ட யானைபோல் பூமியில் விழுந்தான். பீமன் தமயனைக் கட்டித் தழுவித் தடவிக் கொடுத்து ஆறுதல் மொழிகள் சொன்னான்.

திருதராஷ்டிரனும் அப்போது யுதிஷ்டிரனை நெருங்கி, "இவ்விதம் துயரப்படுதல் கூடாது. எழுந்திரு! சகோதரர்களுடனும் நண்பர்களுடனும் பூமியை ஆள்வாயாக. அது உன் கடமை. நானும் காந்தாரியுமல்லவா துயரப்பட வேண்டும்? க்ஷத்திரிய தருமத்தின்படி நீ வெற்றி பெற்றாய். வெற்றியை அடைந்ததினால் உண்டான கடமைகளை இப்போது செய். மந்த புத்தியுள்ள நான் விதுரனுடைய சொல்லைக் கேளாமல் பெரும் பிழை இழைத்தேன். துரியோதனனுடைய அறிவற்ற சொற்களைக் கேட்டு ஏமாந்தேன். என்னுடைய நூறு புத்திரர்களும் கனவில் கண்ட தனத்தைப் போல் மறைந்து விட்டார்கள். இனி நீயே எனக்கு மகன். நீ துக்கப்பட வேண்டாம்" என்றான்.

கம்பர் தரும் காட்சி

★ ● ★ டி.கே.சி.

133. நாங்கள் இருக்கிறோமே!

கரன் சூர்ப்பணகையின் மூக்கைப் பார்த்தான். மூக்கை அறுத்தது மானுடர் என்பதையும் காதாலே கேட்டான். ஒரே கோபம் வந்து விட்டது. ''இதோ அந்த நரர்களைத் தொலைத்து விடுகிறேன், தேரைக் கொண்டு வா'' என்று சொன்னான். சொன்ன மாத்திரத்தில் அரக்கர்கள் பதினாலு பேர் அவன் எதிரே வந்து நின்றார்கள்.

'வருக தேர்' எனும்
  மாத்திரை, — மாடுளோர்
இருகை மால்வரை
  ஏழினோ(டு) ஏழ்அனார்,
ஒருகை யால்உல(கு)
  ஏந்தும் உரத்தினார்:
'தருக இப்பணி,
  எம்வயின் தான்' என்றார்.

[மாடுளோர்: பக்கத்தில் நின்றவர்களான; இருகை மால்வரை ஏழினோடு ஏழ் அன்னார்: இரண்டு பெரும் துதிக்கைகளைக் கொண்ட யானைகள் பதினாலே என்று சொல்லும்படி பருத்த உடம்பினர்; மால்வரை: பெரிய மலை அதாவது யானை; ஒரு கையால் உலகு ஏந்தும் உரத்தினார்: ஒரு கையினாலேயே உலகத்தைத் தாங்கி நிற்கக்கூடிய பலம் வாய்ந்தவர்; தருக இப்பணி எம் வயின்தான் என்றார்: இந்த மனிதர்களைத் தொலைக்கும் வேலையை எங்களுக்கே கொடுக்க வேண்டும் என்றார்கள்.

குறிப்பு: மக்களது உடம்பின் வலிமையையும் பெருமையையும் ரொம்பவும் அனுபவித்தவர் கம்பர். அந்த அனுபவம் செய்யுளில் துலங்குகிறது.]

அந்தப் பதினாலு அரக்கர்களையும் இரண்டு இரண்டு துதிக்கைகள் கொண்ட யானைகள் என்றுதான் சொல்ல வேண்டும். அவர்கள் கையாளும் ஆயுதங்களைக் கொஞ்சம் பார்க்கலாம்:

முக்கோலான சூலங்கள் எத்தனையோ, வாள்கள் எத்தனையோ, இருப்பு உலக்கைகள் முதலான ஆயுதங்கள் வேறு!

சூலம், வாள், மழுத்,
  தோமரம், சக்கரம்,
கால பாசம்,
  கதைபொரும் கையினர், —
வேலை ஞாலம்
  வெருவுறும் ஆர்ப்பினர்,
ஆல காலம்
  திரண்டன்ன ஆக்கையார்

[தோமரம்: மர உலக்கை; காலபாசம்: முன்னோடு கூடிய கயிறுகள்; கதை: தண்டாயுதம்; பொரும் கையினர்: மேலே சொன்ன ஆயுதங்களைக் கையாண்டு போர் செய்யும் கையினர்; வேலைஞாலம் வெருவுறும் ஆர்ப்பினர்: கடலினால் சூழப்பட்ட இந்தப் பரந்த உலகத்தில் உள்ளவர்கள் எல்லாரும் அஞ்சும்படியாக வீர கோஷம் செய்பவர்கள்; ஆலகாலம் திரண்டன்ன ஆக்கையார்: உலகத்தையே முடிக்கும்படியான விஷம் எல்லாம் திரண்டது போன்ற கரிய உடலை உடையவர்கள்.

குறிப்பு: பயங்கர பாவம் நல்ல நாதத்தோடு பாட்டில் குதித்து வருகிறது.]

இத்தகைய அரக்க வீரர்கள் கடலையே கொதிக்கச் செய்யும் வடவா முகாக்கினி போல வீரா வேசத்தோடு ஒரே கொதிப்பாய்க் கொதித்துக் கொண்டு பேசுகிறார்கள் — கரனைப் பார்த்து.

வெம்பு வேலைக்
  கனல்அன்ன வெம்மையார்,
'நம்பும் எம்அடி-
  மைத்தொழில் நன்(று)என,
உம்பர் மேல்இன்று
  உருத்தனை போதியோ,
இம்பர் மேல்இனி,
  யாம்உளெ மோ' என்றார்.

[வெம்பு வேலைக் கனல்: ஒரே கொதிப்பாய்ச் சமுத்திரத்தின் நடுவில் இருக்கும் வடவா முகாக்கினி : நம்பும் எம் அடிமைத் தொழில் நன்று எனு : நம்பிக்கைக்குப் பாத்திரமான எங்கள் தொழில்தான் என்ன அழகாய் இருக்கிறது! என்று ; உம்பர்மேல் இன்று உருத்தனை போதியோ : நீ என்ன, தேவர்கள் மேலே யுத்தம் செய்யப் போகிறாய் : இம்பர் மேல் இனி யாம் உளேமோ : இப்படி அற்பக் காரியங்களுக் கெல்லாம் நீயே போகிற தென்றால், இந்த உலகத்தில் நாங்கள் இருக்கி றோம் என்றும் யாராவது சொல்லுவார்களா?]

"வாஸ்தவந்தான் : நீங்கள் சொன்னது ரொம்ப சரி" என்றான் கரன்.

'நன்று சொல்லினிர்
நான்இச் சிறுர்கள்மேல்
சென்று போர்செயில்த்
தேவர்சி ரிப்பரால் :
கொன்று சோரி
குடித்(து)அவர் கொள்கையை
வென்று மீளுதிர், —
மெல்லிய லோ(டு)' என்றான்

[இச்சிறுர்: இந்தச் சிறுவர்களாகிய ராம லக்ஷ்மணர் சோரி குடித்து : ரத்தத்தைக் குடித்து. அதாவது உயிர் மிச்சம் இல்லை என்று சொல்லும்படியாக்கி : அவர் கொள்கையை வென்று மீளுதிர் : அரக்கர்களை ஏதோ சம் ஹாரம் செய்ய வேண்டும் என்று சொல்லு கிறார்களாமே அந்த மனிதர்கள், அதற்கு இடம் இல்லை என்று ஆக்கி விட்டுத் திரும் புங்கள் : மெல்லியலோடு : சூர்ப்பனகை சொன்ன அந்த மெல்லியலான பெண்ணுடன் — அதாவது சீதையுடன்.]

சாம்ராஜ்ய வெறியில் வளர்ந்தவன் கரன். யாரும் அவனுக்கு லக்ஷ்யம் இல்லை. ஆனாலும் கோபப் படபடப்பினால் யுத்தத் துக்குக் கிளம்பினான். யோசனை செய்த பிறகு தானே யுத்தத்துக்குப் போவது தகாத காரியம் என்று பட்டு விட்டது. தன்னுடைய வேலையாளர் போனால் போதும் என்று எண்ணுகிறான். அந்த அலக்ஷ்ய பாவம் செய்யுளில் தொனிக் கிறதைப் பார்க்கலாம். மறந்துபோன விஷயத்தை ஞாபகப் படுத்திக் கொண்டு சொன்னது போல் "மெல் லிய லோடு" என்று செய்யுளின் கடைசியில் வைக்கப் பட்டிருக்கும் வார்த் தையின் லாகவம் பாவத்தை நன்றாய் எடுத்துக் காட்டுகிறது.

வெற்றியின் மர்மம்

என். என்.

"அப்படியானால், என் கட்சிக்குத் தோல்வி தானா? ஜயமடைவதற்கு வழியே இல்லையா?" என்று கேட்டார் வேம்பு அய்யர். அவர் முகத்தில் கரை காணாத சோகத்தின் சாயல் படர்ந்திருந்தது.

"இல்லையென்று தான் எனக்குத் தோன்றுகிறது; ஹரிஹர சர்மாவின் கட்சியில் சட்டப்படி சரியான 'பாயிண்ட்' இருக்கிறது. எப்படிப்பட்ட ஜட்ஜும் அவர் கட்சிக்குச் சாதகமாகத்தான் தீர்ப்புக் கூறுவார்' என்று என் மனதில் படுகிறது. நான் என்ன செய்யட்டும், அய்யர்வாள்?" என்றார் வக்கீல் வராகமூர்த்தி.

"அப்படியானால், நான் ஐயாயிரம் ரூபாய் கொடுத்து வாங்கிய நிலம் முழுவதையும் அந்தப் படுபாவி ஹரிஹரசர்மா அடித்துக் கொண்டு போய்விட வேண்டியதுதானா? ... ஐயோ! இது என்ன அக்கிரமம், வக்கீல் ஸார்! நான் அந்தத் தரகன் பேச்சைக் கேட்டு நம்பி மோசம் போய் விட்டேனே! இம்மாதிரியெல்லாம் தகராறு உண்டாகும் என்று தெரிந்தால், நிலத்தை வாங்கியே இருக்க மாட்டேனே! ஐயாயிரம் ரூபாய்கள் அல்லவா கொட்டியிருக்கிறேன்! நம்முடைய கட்சி வெற்றியடையக் கூடிய வழியே ஒன்று மில்லையா? சற்று எனக்காகச் சிரமப்பட்டுப் புஸ்தகங்களைப் புரட்டிப் பாருங்களேன்!" என்று அழாக் குறையாகக் கெஞ்சினார் வேம்பு அய்யர். வக்கீல் ஆழ்ந்த யோசனையில் ஈடுபட்டார்.

★

கொஞ்ச நாட்களுக்கு முன்பாக, ஒரு தரகன் மூலமாக வேம்பு அய்யர், ஐயாயிரம் ரூபாய்க்கு ஒரு நிலத்தை, ஒரு விதவையிடமிருந்து விலைக்கு வாங்கினார். வாங்கிச் சில நாட்களுக்குப் பிறகு, திடீரென்று எங்கிருந்தோ ஹரிஹர சர்மா என்ற ஆசாமி ஒருவர் தோன்றி, தாம் தான் அந்த நிலத்திற்கு உண்மையான, சட்ட பூர்வமான, சொந்தக்காரர் என்றும், அந்த விதவைக்கு நிலத்தை விற்பதற்கு யாதொரு உரிமையும் கிடையாதென்றும், அவளிடமிருந்து வேம்பு அய்யர் நிலத்தை விலைக்கு வாங்கியது சட்டபூர்வமாகச் செல்லாது என்றும் நிலம் தன்னைச் சேர வேண்டுமென்றும் கோர்ட்டில் தாவா செய்து விட்டார்!


வேம்பு அய்யருக்கு என்ன செய்வதென்றே தெரியவில்லை. அவருக்கு இந்த மாதிரி வழக்குகளில் முன்பின் பரிச்சயமே கிடையாது. தாம் வாங்கியுள்ள நிலத்திற்கு ஏதோ ஆபத்து நெருங்கி விட்டது என்பதை உணர்ந்தவுடன் அவருக்குத் திகில் பிடித்துக் கொண்டது. நேராகத் தம்முடைய ஆப்த நண்பரான வக்கீல் வராக மூர்த்தியிடம் ஓடி, வழக்கின் சாராம்சத்தை ஒப்புவித்து, புத்திமதியைக் கேட்டார்.

வக்கீல் வராக மூர்த்திக்கு, இன்னொரு வக்கீல் மூலமாக, ஹரிஹர சர்மாவின் கட்சியிலுள்ள முக்கியமான தகவல்களும், நியாய பூர்வமான நுட்பங்களும் தெரிந்திருந்தன. சர்மாவின் கட்சி நிச்சயமாக வெற்றியடையும் என்றே அவருக்குத் தோன்றியது. தம் அபிப்பிராயத்தை வெளியிட்டவுடன், வேம்பு அய்யர் பட்ட மனக் கஷ்டத்தைப் பார்த்தவுடன், வக்கிலுக்கும் மிகவும் வருத்தம் ஏற்படத்தான் செய்தது.

வக்கீல் வராகமூர்த்தி யோசனையில் ஈடுபட்டார். அவருக்கெதிரில் உட்கார்ந்திருந்த வேம்பு அய்யருக்குத் திடீரென்று ஒரு யோசனை தோன்றியது.

"வக்கீல் ஸார்! எனக்கு ஒரு யோசனை தோன்றுகிறது! அப்படிச் செய்தால் என்ன? கட்டாயம் நம்முடைய கட்சிக்கு

பட்டணத்துப் பேச்சு




முதல் கன்று:—பால் என்றால் எப்படி இருக்கும், உனக்குத் தெரியுமா?

இரண்டாவது கன்று:—எனக்கு எப்படித் தெரியும்? ஏதோ கொக்குமாதிரி இருக்கும்னு நம்ம வீட்டுக் கிட்டு புஸ்தகத்திலே படிச்சுண்டு இருந்தான்.

ஜயம்தான் என்பதில் சந்தேகமில்லை!'' என்றார்.

"என்ன யோசனை?" என்று கேட்டார் வக்கீல்.

"ஜட்ஜுக்கு ஏதாவது லஞ்சம் கொடுத்தால், நம்முடைய கட்சிக்குச் சாதகமாகத் தீர்ப்புக் கூறுவாரல்லவா?''



வக்கீலும், வேம்பு ஐயரும்...

"அதைவிட முட்டாள்தனமான, அபாயகரமான யோசனை வேறு ஒன்றும் இருக்க முடியாது! நாமே நம்முடைய தலையில் மண்ணை வாரிப்போட்டுக் கொள்வதற்குச் சமானம்தான் அது! லஞ்சம் கொடுத்தால், நம்முடைய கட்சியில் நியாயம் இல்லை என்றும், பணத்தைக் கொண்டு நியாயத்தை விலைக்கு வாங்க எத்தனிப்பதாகவும் அல்லவா தோன்றும்! ஹூம்! லஞ்சம் கொடுத்துத் தன்னைச் சரிப்படுத்துவதாக ஜட்ஜ் எண்ணிக் கொள்வார். அப்புறம் நம்முடைய கட்சியில் கொஞ்ச நஞ்சம் நியாயம் இருந்தால் கூட, கோபத்துடன் நமக்குப் பாதகமாகத் தீர்ப்புக் கூறி விடுவார்!'' என்றார் வராகமூர்த்தி.

வேம்பு அய்யரின் மனம் தீவிரமா யோசிக்க ஆரம்பித்தது. வக்கிலிடமிருந்து விடை பெற்றுக் கொண்டார்.

வேம்பு அய்யரின் மேல் ஹரிஹர சர்மா தொடுத்திருந்த வழக்கு விசாரணைக்கு வந்தது. விசாரணையும் நடந்தது. ஹரிஹர சர்மாவின் வக்கீல் மிகவும் உணர்ச்சியுடனும் கவர்ச்சியுடனும், காரசாரமாகத் தம் கட்சியை ஆதரித்துப் பேசினார். அவருடைய பேச்சைக் கேட்ட, வேம்பு அய்யரின் வக்கிலான வராக மூர்த்திக்குச் சிறிதளவு இருந்த தைரியமும் போய்விட்டது. ஏதோ தம்மாலான வரையில் வேம்பு அய்யரின் கட்சிக்குப் பரிந்து வாதாடினார்.

கடைசியில், நிலம் வேம்பு அய்யரைத் தான் சேர வேண்டுமென்றும், ஹரிஹர சர்மாவுக்கு நிலத்தின்மீது எவ்விதமான அதிகாரமும் கிடையாது என்றும்; ஜட்ஜ் தீர்ப்புக் கூறிவிட்டார்.

மேற்கூறிய தீர்ப்பு எல்லோரையும் — வேர்பு அய்யர் ஒருவரைத் தவிர—ஆச்சரியத்தில் மூழ்கடித்து விட்டது.

வேம்பு அய்யரைத் தனியாகச் சந்தித்த வக்கீல் வராகமூர்த்தி, "வேம்பு அய்யர்வாள்! நீர் மிகவும் அதிர்ஷ்டசாலிதான்!'' என்றார்.

வேம்பு அய்யர், ஒரு விஷமப் புன்னகையுடன், "எல்லாம் நான் அனுப்பிய ஐந்நூறு ரூபாயின் விசேஷந்தான்!'' என்றார்.

வக்கீலுக்கு ஒன்றும் புரியவில்லை. ஆச்சரியத்துடன், "என்ன? ஐந்நூறு ரூபாயா? யாருக்கு அனுப்பினீர்கள்? ஜட்ஜுக்கா? லஞ்சமா?'' என்று கேட்டார்.

"ஆம்! லஞ்சமாகத்தான் அனுப்பினேன்! வக்கீல் ஸார்! உங்களுக்கு நான் எவ்வளவு நன்றி மொழி கூறினாலும் போதாது! அன்று நீங்கள் சொன்னது எனக்கு ஒருபுதிய யோசனையைத் தூண்டிவிட்டது! லஞ்சம் கொடுத்தால், ஜட்ஜின் மனம் எப்படி லஞ்சம் கொடுத்த கட்சியின் மீது சந்தேகம் கொண்டு, வெறுப்படையும் என்பதைப்பற்றிச் சொன்னீர்களல்லவா! அது மிகவும் அபாயகரமானது என்றும் கூறினீர்களல்லவா? உடனே எனக்கு ஒரு யோசனை உதித்தது. ஐந்நூறு ரூபாய்களை எடுத்து, ஹரிஹர சர்மாவின் பெயரில் ஜட்ஜுக்கு அனுப்பினேன்! கட்டாயமாக, ஜட்ஜுக்கு ஹரிஹர சர்மாவின் கட்சியில் நியாயம் இல்லையென்றும் தம்மை விலைக்கு வாங்கப் பார்க்கிறான் என்றும் தோன்றியிருக்க வேண்டும்! அதனால்தான் நம்முடைய கட்சிக்குச் சாதகமாகத் தீர்ப்பளித்திருக்கிறார்!'' என்றார் வேம்பு அய்யர்.



மனைவி:—ராத்திரி ரொம்ப நாழி வரை தூங்காமலே புரண்டு புரண்டு படுத்துக் கொண்டிருந்தேளே; ஏன்?

புருஷன்:—ஒரு கெட்ட கனவு கண்டேன். உங்க அப்பாவும் அம்மாவும் இங்கே வந்து ஒரு மாசம் தங்கப் போவதாகக் கடிதம் எழுதியிருந்தா. நல்ல வேளையா அவர்கள் வரத்துக்குள்ளே முழிச்சுண்டுட்டேன். மறுபடியும் தூங்கினால் ஒரு வேளை வந்து விடுவாளோ என்று அப்புறம் தூங்கவில்லை.

காலக்ஷேபம்

வெளிச்சம் வேண்டும்!

ஒரு நாள் இரவில் ஒரு வீடு திடீரென்று தீப்பற்றிக் கொண்டது. ஜனங்கள் ரொம்ப கஷ்டப்பட்டுச் சமீபத்திலுள்ள கிணற்றிலிருந்து ஜலம் கொண்டுவந்து தீயை அணைத்தார்கள். தீ அணையும் சமயம் ஒரு கிழவர் வேகமாக ஓடிவந்து, "ஏ, யாரையா அது! எல்லா நெருப்பையும் அணைத்து விட்டீர்கள். ஜலம் கொண்டுவரக் கொஞ்சமாவது வெளிச்சமிருக்கட்டும்" என்றார்.

—டி. என். பி.

★

தெரியாது!

குழந்தை ராமு கடிதத்தில் பென்சிலால் கிறுக்கிக் கொண்டிருந்தான்.

தகப்பனார்:—அடே, என்னடா எழுதுகிறாய்?

ராமு:—பத்மாவுக்குக் கடிதாசு எழுதுகிறேன், அப்பா!

அப்பா:—உனக்கு எழுதத் தெரியாதேடா!

ராமு:—பத்மாவுக்கு வாசிக்கத் தெரியாது அப்பா!

—ராமன்.

★

கிடைக்காத பொருள்

மிராசுதார் (தன் மகனைப் பார்த்து):—நீ பட்டணத்தில் உனக்குக் கிடைக்காத பொருளை எனக்குத் தந்தி மூலம் தெரிவி; நான் அனுப்புகிறேன்.

மகன் (பின்வருமாறு தந்தி அடித்தான்):—இந்த ஊரில் ரவாத்தோசை கிடைக்கவில்லை. என்ன செய்வது?

—ரா. சுந்தரராஜன்.

★

அப்படியா?

கோபு:—நம்ம ராமுவுக்கு பாங்கியிலே வேலை ஆகியிருக்காமே! அவனை பாங்கி மானேஜருக்கு ஒரு வேளை தெரிந்திருக்குமோ?

கிட்டு:—நன்றாய்ச் சொன்னாய்! பாங்கி மானேஜருக்கு அவனைத் தெரியாமலிருப்பதுதான் காரணம்!

—பி. என். லட்சுமி.

★

எங்கும் போகாது!

கிராமவாசி:—அண்ணே! இந்த இருப்புப் பாதை எங்கே போகிறது?

போர்ட்டர்:—அது எங்கேயும் போகாது, அண்ணே! அதற்குத்தான் இரண்டு பக்கமும் இரும்பு ஆணிகள் அடிச்சிருக்காங்களே!

—டி. எஸ். குப்புஸ்வாமி.

என்ன பிரயோஜனம்?

கிழவர் (புதிதாகக் கல்யாணமானவனிடம்):—டேய், கோபு! உன் பெண்டாட்டியைச் சின்னக் குழந்தை முதற்கொண்டு எனக்கு நன்றாய்த் தெரியும்!

கோபு:—அதெல்லாம் இப்போது சொல்லி என்ன பிரயோசனம்? அவளைப் பற்றி என்னிடம் அப்பவே ஒரு வார்த்தை சொல்லியிருந்தீர்களானால் பலன் இருந்திருக்கும்!

—கே. நடேசன்.

★

லாபம்தான்!

ஒருவர் ஒரு கடையில் ஒரு வீசை ரவை வாங்கினார். அதில் மண்ணும் கல்லும் கலந்திருந்தது. உடனே அவர் பத்திரிகையில் "நான் இன்று ஒரு கடையில் ரவை வாங்கினேன். அதில் பெரும்பாலும் மண்ணும் கல்லும் கலந்திருந்தது. அந்தக் கடைக்காரர் நாளை காலைக்குள் நல்ல ரவை அனுப்பாவிடில் அவர் கடை விலாசத்தைப் பத்திரிகையில் பிரசுரித்து விடுவேன்" என்று விளம்பரம் செய்தார்.

மறுநாள் அவர் வீட்டிற்கு எட்டுக் கடைகளிலிருந்து நல்ல ரவை வந்தது!

—பி. கே. உமாசங்கர்.

★

நியாயம் எப்படி?

மாமியார் (மருமகளைப் பார்த்து):—ராஜீ! சீனு கூப்பிட்டானே, போனாயோ?

மருமகள்:— அவருக்கு வேறே வேலை என்ன? வெறுமனே கூப்பிட்டுண்டே யிருப்பார்.

மாமியார்:—நன்றாயிருக்கிறது! இப்படித் தான் புருஷன் கூப்பிட்டால் பதில் சொல்லுகிறதா?

மாமனார் (மனைவியிடம்):—இந்தாடி! இங்கே வா, குழந்தை அழுகிறது. எடுத்துக் கொண்டு போ!

மாமியார்:—உங்களுக்கு வேறே வேலை என்ன, வெறுமனே கூப்பிட்டுண்டு? குழந்தையை அழாதபடி நீங்கதான் கொஞ்சம் பார்த்துக்கங்களேன்!

—டி. என். பஞ்சாபகேசன்.

★

புதிய நாகரிகம்!

வீட்டுக்காரர்:—அடடா! தலைக்கு வெறும் மரப்பெட்டியை வைத்துக்கொண்டு படுத்திருக்கிறீர்களே?

விருந்தாளி:—நன்றாகச் சொன்னீர்கள். உள்ளே நிறையப் பஞ்சு வைத்து அடைத்திருக்கிறேன், ஸார்!

—எம். பி. துரைசாமி.


மற்றேனைய ப்ரஷ்களினின்றும் மாறுபட்டது
1. உங்கள் பற்களை 60% அதிக செம்மையாகத் துலக்குகிறது
2. விஷக் கிருமிகளகற்றப் பட்ட கிளாஸ் ட்யூபுகளில் ஸீல் செய்யப்பட்டது.
3. நீர் கடக்காது— நனைவுமேற்காது
4. ஒரு வருட உத்தர வாத முடையது.
இப்பொழுது ஸ்டோர்களில்—
Dr. West's
Miracle-Tuft
MEDIUM
மிருகங்களின் மயிரே கிடையாது!
Dr. West's
TOOTH PASTE
விநியோகஸ்தர்கள் :
எல். டி. ஸெய்மூர் & கோ (இந்தியா) லிமிடெட்
12/A, லிங்க செட்டித் தெரு, தபால் பெட்டி 200, மதராஸ்
டாக்டர் வெஸ்ட்ஸ்
டூத் பிரஷுகளும் டூத் பேஸ்டும்
Copyright:
JWT(I) LTD.

L. D. 6287




காரியத்தில் ஈடுபடுதல்

நேருக்கு நேராகவோ டெலிபோன் மூலமோ அலுவல்களை கவனிப்பதும் ஒரு காரியாலயத்தில் எழுத்து வேலையைப்போல் சகஜமாக நடப்பதுதான்.

சோம்பல் காரணமாகச் சில சமயங்களில் வேலையில் ஈடுபட முடிவதில்லை. இதனாலேயேதான் வேலை மும்முரமாகவுள்ளவர்களின் மேசைமேல் ஒரு கோப்பை புத்தப்புதிய ப்ரூக் பாண்ட் தேனீரைக் காணலாம். சோம்பலைப் போக்கும் இதன் புத்தப்புதுமை ஒரு நிர்வாகி திட்டம் வகுக்கவும் மற்றவர்கள் வேலையை ஒழுங்காகச் செய்யவும் உதவுகிறது.

இந்தியா பூராவுமுள்ள நகரங்களிலுள்ள எங்கள் டெப்போக்களுக்கு தோட்டத்திலிருந்து நேராக வந்த தேயிலை அடிக்கடி அனுப்பப்படுகிறது. இக்காரணத்தாலேயே எப்போதும் பறித்த போதுள்ள புதுமையோடு கூடிய ப்ரூக் பாண்ட் தேயிலையை உங்களுக்கு வழங்க முடிகிறது.



பறித்தபோதுள்ள
புதுமையோடு
வந்து சேருகிறது.

ப்ரூக் பாண்ட்

“இரு இலையும் ஒரு மொட்டும்”

விரைவில் வேலை
செய்ய வல்ல,
இந்த
டானிக்
ஆகாரம்



பலஹீன
மடைந்து
சூன்றிப்
போயிருக்கும்
மனிதனையும்
ஸ்திரீயையும்
பலப்படுத்து
கிறது.

இந்த இயற்கை டானிக் ஆகாரம் புஷ்டியளிக்கும் தாது உப்புக்களை நிரைசீ பங்கீடு செய்து உங்கள் தேகத்திற்குப் புனர் போஷாக்கு அளிக்கிறது.

விக்கல்ப்பில் இவ் வருதியான ஆகாரத் தாதுவின் சேர்க்கை மிகவும் உன்னதமானது. உதாரணமாக, ஒரே தினம் "விக்கல்ப்" உட்கொண்டால்! எழு முட்டைகளி லுள்ள அளவு கால்ஷியத்தையும், 23 பவுண்டு ஆரஞ்சியி லுள்ள அளவு இரும்புத் தாதுவையும், 4 பவுண்டு வெண்ணெயி லுள்ள அளவு பாஸ்பரத்தையும் — அளிக்கிறது. நிற்க, விக்கல்ப்பில் — மிகவும் அத்தியா வசியமான போஷாக்கை அளிக்கக்கூடிய, தவிர்க்க முடியாத பன்னிரண்டு வகைப்பட்ட தாது உப்புக்களும், அயோடின் ஆகாரமும் அடங்கியுள்ளன.

இத்தகைய அரிய தாதுக்களும் வைடமின்களும் உங்கள் சரீரத்தில் சம்பந்தப் பட்ட வுடனேயே தேகம் கிரமமாக புனர் போஷாக்களிக்கப் படுகிறது. நீங்கள் வளர ஆரம்பிக்கிறீர்கள். நரம்புத் தளர்ச்சி நீங்குகிறது. களைப்பு நீங்கி விருவிருப்பும், பலஹீனம் நீங்கி திடமாகவும் மாறுகிறது. மறுபடி சுக சௌக்யத்திற்கும், புஷ்டிக்கும் ஓர் உயர் வழி கண்டு பிடித்து விட்டீர்கள்.

VIKELP MINERAL TABLETS

விக்கல்ப் தாது பில்லைகள்

Ad. No. 8436



இந்த நடிகை

ஸா. ருகிநூர்

"ஸ்டுடியோ வேலைக்கு அழகுடன், புத்தி சாதுர்யமும் வேண்டும். நான் பிரதியொரு முறை சாப்பாட்டிற்குப் பிறகு 'பிஸ்மாக்' 'BISMAG' உட்கொண்டு அஜீர்ணத்திற்கு அறிகுறியான களைப்பை நீக்கிக் கொள்கிறேன்."

அஜீர்ண சம்பந்தமான உபாதைகளை குணமாக்கும் இந்த சிறந்த நிவாரணி வயிற்றிலுள்ள அதிகப்படி புளிப்பை சமனப்படுத்தி, எல்லாவிதமான ஜீர்ணக் கோளாறுகளின் சின்னங்களையும் அகற்றுகிறது. உங்களுக்கு அருகாமையிலுள்ள வியாபாரியிடம் இன்றே 'பிஸ்மாக்' (பைகரேட்டட் மக்னீஷியா) பௌடர் அல்லது பில்லைகள் கேளுங்கள்.

'பைகரேட்டட்' மக்னீஷியா


"Bisurated" Magnesia

BISMAG

REGD TRADE MARK

பிஸ்மாக் லிமிடெட்

ப்ராய்டன் ரோடு, லண்டன், N. 16.



Edited, Printed and Published by R. Krishnamurthy at the "Kalki" Press
116-119, Sladens Garden, Poonamallee High Road, Kilpauk, Madras

கல்கி



ALKI மார்ச் 17, 1946 4 அணா



இன்று முதல் குதூகல ஆரம்பம்!
சென்னை
பாரகன்
கோயமுத்தூர்
கர்நாடிக்
மதுரை
நியூ சினிமா
டைரக்ஷன் :
ஜி. ராமப்ரம்மம்
கண்ணாம்பா
எம். வி. ராஜம்மா
Dr. சுப்பாராவ்
ஸி. எஸ். ஆர்.
முதலியோர் நடித்தது
ஸாரதியின்
மாயா லோகம்
தெலுங்கு
நரஸு
ரிலீஸ்

Regd. No. M. 4392

